


# தமிழரசு

ஜூன் 1   1973   40 காசு







# சிறு தொழிலுக்கோர் உறுதுணை...... எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்

அரிசிமில், மாவுமில், ஆயில் மில், மர அறுவைத் தொழில் போன்ற சிறு தொழில் நிறுவனங்களில் இயங்கும் மோட்டார்களைச் சீராகச் செலுத்த, சிறந்த ஒரு சாதனம் எல் & டி ஸ்டார்ட்டர். எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

உங்கள் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

· பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று, வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்துகொடுக்கின்றனர்.

· சிறிய ஊர்களில் கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH **L&T Switchgear**

**ஸ்விட்ச்கியர் டிவிஷன்,**
**லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்**

P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.

LT. 3856




# தமிழரசு

மலர்: 3 இதழ்: 23

1-6-1973


## முதல்வர் கலைஞர் பிறந்தநாள் விழாக்களை

## ஏழையர் வாழ்வில் ஒளியேற்றும் விழாக்கள்

**1971ல்** பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்

48 ஆம் வயதில்

**1972ல்** கண்ணொளி வழங்கும் திட்டம்

49 ஆம் வயதில்

**1973ல்** கைரிக்ஷாவுக்குப் பதிலாக இலவச சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம்

50 வது

பொன்விழா ஆண்டில்

தங்கப் -...

# வீரர்களுக்குத் விழா எடுப்போம்!



பாஞ்சாலங் குறிச்சி! இந்திய நாட்டு விடுதலைக்காகச் சுதந்தரப் போராட்டத்தில் வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முதலில் முழக்கம் இட்ட வீரத் தலம் இந்தத் திருத்தலம்.

மண்மேடு இடுகிற அளவு வெள்ளையர்கள் செய்த நிலை மாறி, அது களையப்படும் நிலை இன்று ஏற்பட்டு இருக்கிறது.

பாஞ்சாலங் குறிச்சி எப்படி இருக்கும்? அப்படி ஒரு இடம் இருக்கிறதா? அதனுடைய சிறப்பு எத்தகையது? என்று ஏங்கிக் கிடந்த தமிழ் மக்களுக்கு விடை கிடைத்து விட்டது.

பாஞ்சாலங் குறிச்சியின் பெயர் மறைக்கப்பட்டு விட்டது. அதன் புகழ் மங்கிவிட்டது. மங்கிவிட்ட பழம் புகழை — மறைக்கப்பட்டுவிட்ட பெயரை— அந்தப் பெருமையினை — மீண்டும் தமிழகத்தில் — இந்தியப் பெரு நாட்டில் அகில உலகத்துக்கும் கொண்டு வர வேண்டிய நாளாக இந்த நாளைக் கருதுவோம். அதற்கான உறுதியை எடுத்துக் கொள்ளுவோம்.

■இந்த மேடையில் சிறிய அளவில் கட்டபொம்மன் சிலை இருக்கிறது. அவருடைய பரம்பரையைச் சேர்ந்த மக்கள் எதிரே உட்கார்ந்து இருக்கிறார்கள். சிலையிலே உள்ள மீசைக்கும் அவர்கள் வைத்துள்ள மீசைக்கும் உறவு படுத்திப் பார்த்து, மறவர் குல வீரத்தை உணர்கிறோம்.

“வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள் எங்கள் வெற்றித் தோள்கள்” என்று தூக்குக் கயிற்றை முத்தமிட்ட கட்டபொம்மனையும், அவன் தம்பி ஊமைத்துரையையும், வீரத் தளபதிகளையும் எண்ணிப்பார்க்கிறோம். வெள்ளையர்கள் கட்டபொம்மன் கோட்டையைத் தகர்த்து, இந்த இடத்தை உழுது, ஆமணக்கு விதைத்ததாக வரலாறு கூறுகிறது.

அகழ்வாராய்ச்சித் துறையினர் 1967-ஆம் ஆண்டு அந்த இடத்தை ஆராய்ந்து, கோட்டையின் அடித்தளத்தைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள்.

அதை நாங்கள் இங்கே வந்து பார்த்தபோது மெய் சிலிர்த்தது. உள்ளத்தில் ஏதோ ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. இங்கே பேசிய சுப்பு அவர்கள் கூறியது போல் கட்டபொம்மன் காலத்து வீர நினைவுகள் தோன்றின.

வீர பாண்டியக் கட்டபொம்மன் தீரத்துடன்— அஞ்சா நெஞ்சுடன் — புற முதுகு காட்டாமல் கடைசி வரை போராடி இன்னுயிரைத் தந்தான். வெள்ளையருக்கு எதிராக முதல் முழக்கம் செய்த பெருமை தமிழ் நாட்டுக்கு இருந்திட வேண்டும் என்று கூறிய கட்டபொம்மனையும் அவருடைய வாரிசுகளையும் தமிழ் நாடும் — தமிழ்ச் சமுதாயமும் என்றும் மறவாமல் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறது. கட்டமொம்மன் காலத்தில் பெற்றிருந்த வீரத்தை மீண்டும் பெற வேண்டிய காலம் வந்துவிட்டது.

வெற்றிகளைக் கண்ட சமுதாயம் — தியாகங்களைப் புரிந்த சமுதாயம்—மாற்றார்களுக்கு உரிய இடம் அளித்துத் தலைமையை இழக்காத சமுதாயம் கட்டபொம்மனுக்கு விழா எடுக்கும் நாளில் அந்தச் சூளுரையை எடுத்துக் கொள்ள வேண்டும்!

பூம்புகார் விழா எடுத்த போது அந்தப் பகுதியில் வாழும் மீனவர்களுக்காகக் குடியிருப்பு — படகு — வலை இவைகளை வழங்க 40 இலட்சம் ரூபாயில் திட்டத்தை அறிவித்தோம்.

எனவே அதைப் போல இங்குள்ள பிற்படுத்தப் பட்ட மக்களுக்காக — கட்டபொம்மனின் வாரிசுகளுக்காக மறுவாழ்வு அளிக்கும் — மறுமலர்ச்சி ஏற்படுத்தும் திட்டங்களை, அதிகாரிகளையும், மாவட்ட ஆட்சித் தலைவரையும் கலந்து கொண்டு அறிவிக்கிறேன். புதிய கட்டபொம்மன் கோட்டைக்கான அடிக்கல் நாட்டு விழா விரைவில் நடைபெறும். இப்போதுள்ள அடித்தளம் அப்படியே பழைமை கெடாமல் இருக்கும். புதிதாகக் கட்டப்படும் கோட்டை, கட்டபொம்மன் கோட்டை எப்படி இருந்திருக்கும் என்று கற்பனை செய்து அதற்கு ஏற்பக் கட்டப்படும்.

இரண்டு நாளைக்கு முன்பு போக்குவரத்துத் துறை அமைச்சர் இராமச்சந்திரன் அவர்கள் என்னிடத்தில் பேசிக்கொண்டிருந்தபோது, நெல்லை மாவட்டத்தில் பஸ்களுக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று கேட்டார். வீர பாண்டியக் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் என்று பெயர் வைக்கும்படிக் கூறினேன்.

கட்டபொம்மன் வாரிசுகளுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகையை 50 ரூபாயிலிருந்து 75 ரூபாயாக உயர்த்தி, அதற்கான அரசு உத்தரவில் கையெழுத்துப் போட்டு விட்டுத்தான் இங்கே வந்திருக்கிறேன். அதன்படி தற்போது உதவி பெறும் பத்துப் பேர்களும் தொடர்ந்து பெறுவார்கள்.

கட்டபொம்மன் பிறந்த நாள் 1760-ஆம் ஆண்டு ஜனவரி 3-ஆம் தேதி என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி வருகிற ஆண்டு முதல், ஆண்டுதோறும் சனவரி 3-ஆம் தேதி முதல், இரண்டு நாள் கட்டபொம்மன் நினைவு விழா இங்கே அரசின் சார்பில் நடத்தப்படும்.

அரசின் ஆவணப் பதிவேடுகளில் பாஞ்சாலங்குறிச்சி என்ற பெயர் இடம் பெறும்.

இந்த அரசு செய்திருக்கும் நல்ல காரியங்களை மணலியும், சுப்புவும் பாராட்டினார்கள். உங்கள் காலம் பொற்காலம் என்று மணலி கூறினார்.


இப்படிச் சொன்னதன் மூலம் அவருக்கும், எனக்கும் உள்ள தொலைவு குறைவு என்பது தெரிகிறது. உள்ளத்தில் உள்ள கொள்கையில் இரண்டு பேருக்கும் உள்ள தொலைவு மிகவும் குறைவு என்பதை அவர்கள் பேசியதில் இருந்து தெரிந்து கொண்டிருப்பீர்கள். என்னுடைய ஆட்சிக் காலம் பொற்காலமாகத் திகழ வேண்டும் என்று வாழ்த்தினார்.


அவர் என்னைவிட வயதில் — அறிவில் — தியாகத்தில் பெரியவர். அவர் இங்கே கூறியதை வேண்டுகோளாக அல்ல, கட்டளையாகவே ஏற்றுக் கொள்கிறேன். அதைப் போலச் சுப்பு அவர்கள் கூறிய வேண்டுகோளையும் நான் அன்புக் கட்டளையாக ஏற்றுக் கொள்கிறேன்.

**—பாஞ்சாலங்குறிச்சியில் 12-5-73 அன்று நடைபெற்ற கட்டபொம்மன் விழாவில் ஆற்றிய உரை.**

## முதல்வர் கலைஞர்

# பார்த்தோம் படித்தோம்






## சுருக்கெழுத்துக்கு விரிவான கட்டுரை

பெட்டிச் செய்தி என்றாலும் சுருக்கெழுத்தின் சரித்திரம் எனது இதயத்தைத் தொட்டுவிட்டது. சுருக்கெழுத்து, கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே உருவாகியது என்பதை நான் இப்போதுதான் தெரிந்து கொண்டேன். சுருக்கெழுத்துப் படிக்கின்ற எனக்கே இந்த வரலாறு இப்போதுதான் தெரிகிறது. சுருக்கெழுத்து பற்றி நீண்ட கட்டுரை ஒன்று வெளியிடுங்கள். பலருக்கும் பயன் தரும்!

—எம். மீனாட்சிசுந்தரம், மதுரை.

## தேன்! தேன்!! தேன்!!!

தேனை தேனல்லவோ பார்த்தேன்; படித்தேன்; ரசித்தேன்; ஒரு படித்தேன் குடித்தேன் என மகிழ்ந்தேன்; உமக்கு நன்றி தெரிவித்தேன்!

—செல்வி குமுதா, காரைக்குடி.

## பிராணிகள் தருக!

கன்று வளர்ச்சி பயனுள்ள கட்டுரை. கன்று வளர்ப்பதற்குரிய கருத்துக்களை வழங்கிய டாக்டர் பா. சின்னதுரை அவர்களுக்குப் பாராட்டுக் கூறுகின்றேன். இதுபோன்று ஒவ்வொரு பிராணியையும் பற்றித் 'தமிழரசு' இதழில் எடுத்துக் கூறுதல் பயனுடைய பணி! செய்வீர்களா?

—இரா. பரமசிவன், நெல்லை.

## ஆராய்ச்சிக் கோட்டம்


குட்டுவன் எடுத்த கோட்டம்—கட்டுரை சுவையாக இருந்தது. பொதுவாக, ஆய்வுக் கட்டுரை என்றால் அறுவைக் கட்டுரையாக இருக்கும்; ஆனால் குட்டுவன் எடுத்த கோட்டம்—சுவையாக இருந்தது; கட்டுரை தந்த கோவை இளஞ்சேரன் தமிழ் மக்களின் பாராட்டுக்குரியவர்.

—எஸ். ஆர். சந்திரன், கோவை 1.

## கல்விப் பெருமை

எழுத்தறிவிக்கும் பணியில் தமிழக அரசு 99 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது என்பதைத் தெளிவாக்கியுள்ளது, அறியாமை அகன்றிட அரசின் அரும்பணிகள் என்னும் கட்டுரை. கல்விப் பணி அறிவுக்கண் கொடுக்கும் பணி என்பதை விளக்கியுள்ள கட்டுரைக்குப் பாராட்டு!

—சுப. மணிவண்ணன், முகவை.



# வெளிமாநிலங்கள் போற்றும் நமது கூட்டுறவுத் துறை

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தங்களது கருத்துரைகளை நயமான முறையிலே தெரிவித்ததற்கு முதலில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு சொசைட்டி, சூபர்சீட் செய்யப்பட்டதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பொதுவாகக் கூறியது, இது கட்சி அடிப்படையிலே செயல்படுகிறது என்று சொன்னார்கள். அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அதற்கு முன்னால் நண்பர் ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பிறகு நண்பர் மணலி அவர்கள் ரொம்ப நாசுக்காகச் சொன்னார்கள். டாக்டர் ஹாண்டே அவர்களும் சொன்னார்கள், கொஞ்சம் சூடாகச் சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புவதெல்லாம், நாமினேஷன், நியமனங்கள் செய்கிற பொழுது, அதற்கு விதிகள் இருக்கின்றன. கட்சிக்காரர்களையே நியமிக்கலாம் என்று அப்படி விதி ஒன்றுமில்லை.

விதி எப்படி இருக்கிறது? தாழ்த்தப்பட்டோர்களை நியமிக்க வேண்டும், அதுதான் விதி. பரம்பரை பரம்பரையாக எத்தனையோ மத்திய வங்கிகள் இருக்கின்றன. 15, 16 வங்கிகள், முக்கியமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுகின்றன. நீங்கள் எப்பொழுதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? கேள்விப்பட்டிருக்க முடியாது. தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், இரண்டு மத்திய வங்கிகள் இருக்கின்றன. ஒன்று தஞ்சாவூரில், மற்றொன்று கும்பகோணத்தில்; எப்பொழுதாவது தாழ்த்தப்பட்ட மகன் ஒருவன் இயக்குநராக இருந்திருக்கிறாரா? அங்கு இருந்ததில்லை. அந்தச் சட்டம் இங்கே கொண்டுவரப்பட்டபொழுது கூட நண்பர்கள் சொன்னார்கள். ! தாழ்த்தப்பட்டோர்களை உயர்த்துவதற்கு அவர்களை இயக்குநர்களாக ஆக்கித்தான் உயர்த்த வேண்டுமா? பணம் கொடுத்து உதவினால் போதாதா? என்று கேட்டபொழுது நான் சொன்னேன், அவர்களுக்குப் பணம் வாங்கத்தான் உரிமை இருக்கிறதா? நாற்காலியில் உட்காருவதற்கு உரிமை இல்லையா என்று கூட நான் கேட்டேன். எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு-முதன் முறையாக இந்த அரசு வந்ததற்குப் பிறகுதான் பெரிய வங்கிகளில் அல்லது பெரிய கூட்டுறவு நிறுவனங்களில் ஒரு தாழ்த்தப்பட்டமகன் நிச்சயமாக இயக்குநராக நாற்காலியில் உட்கார்ந்தே ஆக வேண்டும் என்று சட்டம் செய்திருக்கிறோம். பெண்களுக்கும் இடம் கட்டாயமாகக் கொடுக்க வேண்டும். அதே மாதிரி, சிறு விவசாயிகளுக்கும் கட்டாயமாக இடம் கொடுத்திருக்கிறோம்.

நீங்கள் கேட்கலாம்; இதையெல்லாம் 'நாமினேஷன்' முறையின் மூலம்தான் செய்ய வேண்டுமா, ஏதேனும் தேர்தல் முறை கொண்டுவரப்படாதா என்று கேட்கலாம். தேர்தல் முறையில் வருவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இல்லை என்ற காரணத்தினால், அவர்களை நியமனம் செய்கிறோம். இதைக் கோர்ட்டுக்கு இழுப்பார்கள் என்பது எனக்குத் தெரியும். எந்தக் காரியமாக இருந்தாலும் கோர்ட்டுக்குக் கொண்டு போகிறார்கள். எத்தனையோ காரியங்களைக் கோர்ட்டுக்குக் கொண்டு போய்த்தான் முடிவு செய்கிறார்கள். நன்றாகத் தெரியும். எப்படியிருந்தாலும் கோர்ட்டுக்குப் போகும். இதையும் கோர்ட்டுக்கு எடுத்துக் கொண்டு போனார்கள். ஒரு வழக்குஇரண்டு இரண்டு வழக்கு இல்லை. பல வழக்குகள், ஏறத்தாழ 100-க்கு மேற்பட்ட வழக்குகள் . . .



மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் சி.பா.ஆதித்தனார்

கோர்ட்டுக்குப் போய் நடந்ததைச் சொல்கிறேன். கோர்ட்டில் வழக்காடப்பட்டது. கோர்ட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. நியமிக்கப் படுகிறவர்களெல்லாம் தி. மு. க. வைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டது. அதோடு கூட, இவர்களை நியமனம்தான் செய்யவேண்டுமா, அது கூட்டுறவுத் துறையின் அடிப்படைக்கே தவறாக இருக்கிறதே என்றெல்லாம் பேசப்பட்டது. சொல்லப்பட்டது. ஆர்குமெண்டு நடந்தது. அதற்குப் பிறகு ஒரு தீர்ப்பு அல்ல. இது சரியான முறைதான் என்று இரண்டு தீர்ப்புகள் இருக்கின்றன. அழகிரிசாமி அவர்கள் ஜட்ஜ் என்று நினைக்கிறேன். இன்னொருஜட்ஜ் இராமப்பிரசாத் ராவ் அவர்கள் என்று நினைக்கிறேன். இரண்டு தீர்ப்புகள் இருக்கின்றன. இந்தச் சட்டம் நாம் இயற்றியபடி சரியானது—செல்லுபடியாகக்கூடியது என்று தீர்ப்பு இருக்கிறது. ஆகவே, இனிமேல் மீண்டும் மீண்டும் அதைப்பற்றிப் பேச வேண்டியதில்லை.

நில அடமான வங்கிகளைப் பற்றிக் குறிப்பாகச் சொல்கிறார்கள். அது எனக்குத் தெரியாது. ஆனால், நியமிக்கப்படுபவர்கள் இன்னபடிதான் இருக்கவேண்டும், இத்தனை சதவிகிதத்திற்கு மேல், ஐந்தில் ஒன்றுக்கு மேல், அதிகமாக இருக்கக் கூடாது என்பதெல்லாம் கூடச் சட்டத்திலே போடப்பட்டிருக்கிறது. நியமனம் செய்து அதிகமானபேர்களைச் சேர்த்துவிட முடியாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஐந்தில் ஒன்றுக்குமேல் அதிகமான பேர்களைப் போட முடியாது. இது சம்பந்தமாகக் கோர்ட்டில் வழக்காடப்பட்டுத் தீர்ப்பாகியிருக்கிறது.

சென்டிரல் பாங்க் பற்றியெல்லாம் சொன்னார்கள். 'ஸ்டிஃபெனிங் ஆஃப் தி ரூல்ஸ்.

இன்றைக்கு எலெக்ஷன் — தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம்தான் வெற்றி பெற்று வருகிறது என்று சொன்னார்கள். அதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. இந்தச் சபையிலே கூட முன்பு 160 பேர்களாக இருந்த காங்கிரஸ்காரர்கள் — இப்போது பழைய காங்கிரஸ்— இப்போது 13 பேர்களாக — அப்படி நினைக்கிறேன்— இருக்கிறார்கள். ஆக, தேர்தல் களிலே— பொதுத் தேர்தலானாலும் சரி, கூட்டுறவுத் துறைத் தேர்தலானாலும் சரி— திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறுகிறது என்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. அந்த அளவுக்கு மக்கள் மனப்பான்மை மாறி இருக்கிறது. 160 பேராக இருந்தவர்கள் 13 பேராக குறைந்திருப்பதற்கு ஜனநாயக முறையில் தேர்தல் நடைபெற்றது தான் காரணம். ஜனநாயகம் எங்கும் போய்விடவில்லை. இங்கேதான் இருக்கிறது.

ஜனநாயக முறையில் தேர்தல் நடைபெற்றால் திராவிட முன்னேற்றக் கழகம் பெரும் வெற்றி பெறுகிறது. மற்றக் கட்சிக் காரர்கள் இல்லையா என்றால், இருக்கிறார்கள். கூட்டுறவுத் துறைத் தேர்தலில் மற்றக் கட்சிக்காரர்கள் வெற்றி பெற்றிருப்பதாக — குறிப்பாக காங்கிரஸ் — நவசக்தி பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அது ஸ்தாபன காங்கிரஸ் பத்திரிகை என்று நினைக்கிறேன். அந்தப் பத்திரிகையில் 3—1—73 ஆம் தேதியில் வெளியிட்டிருக்கிறார்கள். கூட்டுறவு வங்கித் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி என்று பெரிய எழுத்தில் — கொட்டை எழுத்தில் போட்டிருக்கிறார்கள். செய்தி என்னவென்றால், 'புதுக்கோட்டை நகரக் கூட்டுறவுவங்கி டைரக்டர் தேர்தலில் புதுக்கோட்டை மாவட்டக்காங்கிரஸ் செயலாளர் கே. வாசுதேவன் வெற்றி பெற்றார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட புதுக்கோட்டை நகர தி. மு. க. செயலாளரும், நகரமன்ற தி. மு. க. உறுப்பினருமான அப்துல்மஜீத் படுதோல்வி அடைந்தார்'' என்பது.

இன்னும் போட்டிருக்கிறார்கள் புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு வங்கி டைரக்டர் தேர்தலில் புதுக்கோட்டை நகர மன்ற முன்னாள் தலைவர் கே. தர்மராஜா பிள்ளை (காங்கிரஸ்) போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். தர்மராஜா பிள்ளை போட்டியில்லாமலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்பது செய்தி.

அடுத்து இன்னொரு செய்தி 3—1—1973-ஆம் தேதியே போட்டிருக்கிறார்கள், தென்னகத்தில், கூட்டுறவுச் சங்கத் தேர்தலில், கருணாநிதிக் கட்சிக்கு இமாலயத் தோல்வி, அண்ணா தி. மு. க. 158 வாக்கு, கருணாநிதி கட்சி 2 வாக்கு. அறந்தாங்கி வட்டத்தில் நடந்த கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கத் தேர்தலில் கருணாநிதி கட்சியும் சிண்டிகேட் கட்சியும். கவனித்துக் கொள்ளுங்கள், சிண்டிகேட் கட்சி— சேர்ந்து நிறுத்திய வேட்பாளர் பாவம் படுதோல்வி அடைந்தார். அண்ணா தி. மு. கழக வேட்பாளர் பெருவாரியான வாக்குகளைப் பெற்று வெற்றிவாகைசூடினார். அண்ணா தி.மு.க.வேட்பாளருக்கு 168 வாக்குகளும் கருணாநிதி கட்சி ஆதரவு வேட்பாளருக்கு 2 வாக்குகளும் கிடைத்தன என்பது குறிப்பிடத்தக்கது. சுயேட்சையாக நின்ற வேட்பாளரை விட இந்தக் கூட்டுக் கட்சி வேட்பாளர் 7 வாக்குகள் குறைவாகப் பெற்றிருக்கிறார். அறந்தாங்கி வட்டம் செங்கமாரி கூட்டுறவு விவசாயக் கடன் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர் தேர்தல், சென்ற 31—12—72 அன்று நடந்தது. இதில் அண்ணா தி. மு. க. வேட்பாளராக ஆ. கருப்பையா நின்றார். சிண்டிகேட் வேட்பாளராக நின்ற சா. கருப்பையா சேர்வை என்பவரைக் கருணாநிதிக் கட்சி ஆதரித்துக் கடும் தேர்தல் பிரச்சாரமும் செய்தது. இந்தத் தேர்தலில் அண்ணா தி.மு. கழக வேட்பாளர் ஆ. கருப்பையா 158 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். கருணாநிதிக் கட்சி ஆதரவு பெற்ற சிண்டிகேட் வேட்பாளருக்கு 2 வாக்குகள்தான் கிடைத்தன. சுயேச்சை வேட்பாளருக்கு 9 வாக்குகள் கிடைத்தன. இதிலே முக்கிய விஷயம் என்னவென்றால் கருணாநிதிக் கட்சி ஆதரவு பெற்ற சிண்டிகேட் வேட்பாளர் சுயேச்சை வேட்பாளரை விட 7 வாக்குகள் குறைவாகப் பெற்றார்.

இன்னும் இதுபோன்ற விஷயங்கள் நிறைய இருக்கின்றன. அவை எல்லாம் இங்கே சொல்லவேண்டாம் என்று நினைக்கிறேன். இப்படித் தேர்தல் நடக்கும் போது பொது மக்கள் கருத்துப்படி அவர்களுக்கு விருப்பமானவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். தேர்தலில் எந்தக் கட்சிக்கும் வெற்றியும் இருக்கும்—தோல்வியும் இருக்கும்.

அடுத்து, கிணறு தோண்டுவதற்காக வழங்கப்படும் கடன் வழங்கு முறையைச் சுலபமாக்க வேண்டுமென்று சொன்னார்கள். ரிசர்வ் வங்கியிடம் அதுபற்றித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போது கடன் வழங்கு முறையும் முன்னைவிடச் சுலபமாக்கப்பட்டிருக்கிறது. முன்னால் இரண்டு கிணறுகளுக்கு இடையே உள்ள தூரம் இத்தனை அடி இருக்க வேண்டுமென்று இருந்தது. அதை மாற்றி இப்போது நமது அரசாங்கம் நியமித்திருக்கிற 'கிரவுண்ட் வாட்டர் எஞ்சினீயர்' போதுமான தண்ணீர் வசதி இருக்கிறது, கடன் கொடுக்கலாம் என்று சொன்னால் போதும் என்று மாற்றியிருக்கிறோம். ரிசர்வ் வங்கியும் அதை ஒப்புக்கொண்டிருக்கிறது.

### பாரிஸில் காந்தியடிகள்

பாரிஸ் நகரத்தின் 16-வது மாவட்டத்தில் ஒரு தெருவுக்குக் காந்தியடிகளின் பெயரைச் சூட்டப்போகிறார்கள். பாரிஸ் நகரவை இந்த அருந்தொண்டில் இறங்கியிருக்கிறது.

கடன் வழங்கு முறையைச் சுலபமாக்கியிருக்கின்ற போது இன்னொன்றையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். பக்கத்தில் பக்கத்தில் இரண்டு கிணறுகளை வெட்டுவதற்குப் பணம் கொடுப்பதாக இருந்தால் அதனால் நஷ்டம் விவசாயிக்குத்தான். கிணறு வெட்டி முடிந்த பின்னால், ஒரு கிணற்றுக்காரர் 'கிணற்றில் தண்ணீர் இல்லை; ஆகவே, ஆழப்படுத்துவதற்கு 10,000 ரூபாய் கடன் கொடு' என்று கேட்டால் கொடுத்து விடுகிறோம். இப்போது அந்தக் கிணற்றில் தண்ணீர் அதிகமாகும். அடுத்த கிணற்றில் வற்றிப்போகும். உடனே அந்தக் கிணற்றுக்காரர் கிணற்றை ஆழப்படுத்துவதற்கு 10,000 ரூபாய் கடன் கேட்பார். கொடுத்துவிடுகிறோம். இப்போது இந்தக் கிணறு அதிக ஆழமாக இருப்பதால், முதல் கிணற்றிலுள்ள தண்ணீர் இந்தக் கிணற்றுக்கு வந்துவிடும்; அந்தக் கிணற்றில் தண்ணீர் வற்றிவிடும். திருப்பி அவர் கடன் கேட்பார். இப்படியே போய்க் கொண்டிருந்தால் இருவருக்கும் நஷ்டமே தவிர, இலாபம் இல்லை. ஆகவே, கடன் வாங்கும்போதும் கொடுக்கும் போதும் அதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். கடன் வழங்கும் முறையை,

இப்போது, ' கிரவுண்ட் வாட்டர் எஞ்சினியர் ' கொடுக்கலாம் என்று சொன்னால் கொடுத்து விடக்கூடிய அளவுக்குச் சுலப மாக்கியிருக்கிறோம். திரு. நாச்சி முத்து அவர்கள் இதைப்பற்றித் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். இப்போது இலகுவாக ஆக்கப்பட்டிருக்கிறது என்று நன்றாகச் சொன்னார்கள்.

திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசியது பற்றி இன்னொரு முறை குறிப்பிடுவதற்கு மன்னிக்க வேண்டும். ஏன், ஒருவரே பல குழுக்களிலும் இருந்து கொண்டிருக்கிறார்கள், அது தவறல்லவா, என்று நன்றாகச் சொன்னார்கள். அவர் பேசியது எனக்குக் கூடச் சுருக்கென்று தாக்கியது. ஆனால் நான் புத்தகத்தைப் பார்க்கிற போது ' மெட்ராஸ் கோவாப ரேடிவ் சொசைடி ஆக்ட்—61-ல்' என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் :—

செக்ஷன் 28 ;—
No Person shall at the same time be a member of the committee of more than five societies

என்று 1961-ல் சட்டம் செய்தார்கள். அதை மாற்றவில்லை. இந்தச் சட்டம் செய்தது யார் என்று கவனிக்கிறபோது அப்போது ஆட்சியில் இருந்தவர்கள்தான் செய்திருக்கிறார்கள். அசெம்பிளியிலிருந்தவர்கள் ஓட்டுப் போட்டிருக்கிறார்கள். திருமதி அனந்தநாயகி அவர்களே, அப்போது இப்படிக் கூறிவிட்டு, ஓட்டுப்போட்டுவிட்டு, இப்போது மாற்ற வேண்டுமென்று கேட்டால் நான் கேட்கிறேன், என்ன அடிப்படை ?

அடுத்து, திரு அண்ணாமலை அவர்கள் செண்டிரல் பேங்கில் தலைவராக இருக்கிறார்கள். மத்திய கூட்டுறவு வங்கிகள் முன்பு இருந்த நிலைமையையும் இப்போது இருக்கிற நிலைமையையும் நன்றாக ஒப்பிட்டுக் காட்டினார். புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு வங்கி ' சி ' நிர்வாகம் என்று வைக்கப்பட்டிருந்தது—ரிசர்வ் பேங்கினால் இப்போது அது ' பி ' ஆகி, ' ஏ ' ஆகிவிட்டிருக்கிறது. அதே போல சி.வி. ராஜகோபால் தலைவராக இருக்கிற மத்திய கூட்டுறவு வங்கி ' பி ' கிளாசாக இருந்தது ; இப்போது ' ஏ ' கிளாசாக ஆயிருக்கிறது என்று நான் சொல்லவில்லை—ரிசர்வு பாங்கி சொல்கிறது. இப்படி முன்னால் இருந்த வங்கிகள் அத்தனையும் இத்தரத்தில் உயர்ந்திருக்கின்றன என்று ரிசர்வ் வங்கியினர் பாராட்டி எழுதியிருக்கிறார்கள். எனவே, அவை முன்பு இருந்ததைவிட நன்றாக இருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும்.

திரு மணலி கந்தசாமி அவர்கள் முக்கியமான கருத்துக்களைச் சொன்னார்கள். கூட்டுறவுத் துறையிலே கல்வி இன்னும் அதிகமாகத் தேவைப்படுகிறது என்று சொன்னார்கள். வரவேற்கிறேன். சென்னையில் ஒரு கல்லூரி இருக்கிறது. ஏழு இன்ஸ்டிட்யூட்டுகள் இருக்கின்றன. இன்ஸ்டிட்யூட்டுக்கும் எஸ். எஸ். எல். சி. தேர்வு பெற்றுத்தான் வர வேண்டும். இவ்வளவு இருந்தும் கூட—அனுபவத்தின் காரணமாகச் சொல்கின்றேன்—போதிய அளவுக்கு நுணுக்கமான கல்வி அளிக்கப்படவில்லை என்பதை ஒத்துக்கொண்டாக வேண்டும். அப்படி நுணுக்கமான கல்வி அளிக்கப்பட வேண்டுமென்று—நடவடிக்கை யெடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு வருகிறோம். கூட்டுறவுத் துறையில்—குறிப்பாக — வங்கிகளைப் பொறுத்தவரையில் இப்போது நுணுக்கமாக ஆகிவிட்டன. நுணுக்கமான அறிவு தேவைப்படுகிறது. அண்மையில் ரிசர்வ் வங்கி புது உத்தரவு போட்டிருக்கிறார்கள். மேற்கொண்டு விவசாயத்திற்குப் பணம் கொடுக்க வேண்டுமானாலும், மற்ற காரியங்களுக்கும், டெபாசிட்டுக்கு அதிகமாக வசூல் செய்ய வேண்டுமென்ற விதியை ரிசர்வ் பாங்கி ஜூன் மாதத்திலிருந்து நடைமுறையில் உருவாக்கி விட்டார்கள். ரிசர்வ் பாங்கிலிருந்து போட்டிருக்கின்ற இப்படிப்பட்ட விதி, கூட்டுறவு வங்கிகளுக்கு எதிராகவும், வணிக வங்கிகளுக்கும், மத்திய அரசு வங்கிகளுக்கும் ஆதரவாகவும் இருக்கின்றன என்பதைச் சிந்தித்துப்பார்க்கவேண்டும். நான் எதையும் ஒளித்து மறைத்துச் சொல்லவில்லை. கூட்டுறவு அமைச்சர்கள் மாநாட்டில் தெளிவாகச் சொன்னேன். டெபாசிட் அதிகமாக வசூல் செய்தால்தான் அதிகப் பணம் கொடுக்க வேண்டுமென்று சட்டம் போடுவதாக இருந்தால் இன்றைக்கு ஆறாயிரம் கோடி அளவுக்கு வணிக வங்கிகளிடம் டெபாசிட் இருக்கிறது. 7-8 ஆயிரம் கோடி என்று கூடச் சொன்னார்கள். இந்தியா முழுமையுமுள்ள கூட்டுறவு வங்கிகளை எடுத்துக் கொண்டாலும் கூட டெபாசிட் தொகை 600 கோடி தான் என்று சொல்கிறார்கள். நமது மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 67 கோடி ரூபாய் அளவுக்குத்தான் டெபாசிட் இருக்கிறது. அந்த அளவுக்கு மேலே வசூல் செய்ய வேண்டுமென்றெல்லாம் சட்டம் வருகிற போது சட்ட நுணுக்கங்களை நன்றாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டிய அவசியமிருக்கிற காரணத்தால் இன்ஸ்டிட்யூஷன் கல்வியில் பாங்கியைப் பற்றியும் நிலவள வங்கியைப் பற்றியும் மத்திய வங்கிகளைப் பற்றியும் அர்பன் பாங்கு பற்றியும் அதிகமாகச் சொல்லிக் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது.

அடுத்து, சண்முகம் எம். எல். ஏ. அவர்கள் சொன்னார்கள். ஒருவரே, ஒரே கூட்டுறவு வங்கியில் லாங் டேர்ம், ஷார்ட் டேம், மீடியம் டேர்ம் ஆகிய எல்லா லோன்களையும் ஒரே சமயத்தில் வாங்கி விடுகிறார்கள் என்று. உள்ளபடியே, இதில் விதிமுறைகள் ஏதுமில்லாத காரணத்தால், ஷார்ட் டேம், லாங் டேம், கடன்கள், மூன்று வருடக் கடன், ஐந்து வருடக் கடன், 7 வருடக் கடன் அதற்கு மேலும் 15 வருடக் கடன் இப்படி எல்லாவற்றையும் ஒரே வருடத்தில் வாங்கிவிடலாம். இதைத் திரு சண்முகம் அவர்கள் தன்னுடைய நீண்டகால அனுபவத்திலிருந்து சொன்னார்கள். அவர்கள் சொல்வது நிச்சயமாகக் கவனிக்க வேண்டிய ஒன்றாகும். அவர் இப்போது 134 இலட்சமல்ல 134 கோடி வரை நிர்வாகம் செய்து கொண்டு வருகிறார்கள். இப்போது கொடுக்கப்பட்டிருப்பது ஆர்டினரி டிபஞ்சர் — சாதாரணக் கடன்—அது 92·40 கோடி; ரூரல் டிபஞ்சர் 2.2 கோடி ஏ. ஆர். சி. டிபஞ்சர் 14.52 கோடி ; ஆக மொத்தம் 151·24 கோடி—சட்டமன்றம் அனுமதித்துக் கொடுத்திருப்பது—விவசாயிகளுக்குக் கடனாகக் கொடுப்பதற்காக. சிங்கிங் ஃபண்டு ரூ. 25 கோடி. ஆக மொத்தம் 134 கோடிக்கு நிர்வாகம் செய்து கொண்டு வருகிறார்கள் என்று நான் சொல்வதைவிட மற்றவர்கள் சொல்வதைக் கேட்பதற்குக் குளிர்ச்சியாக — சந்தோஷமாக இருக்கிறது. பாங்கியிலிருந்து வருகிறவர்கள் மாநில, நிலவள வங்கிகளைப் பற்றிச் சொல்லிவிட்டுப் போவது சிந்திக்கத் தக்கது. சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு கே.எம். சுப்பிரமணியம் சொன்னார்கள். சூப்பர்மார்க்கெட், மினி மார்க்கெட், பண்டகசாலைகள் எல்லாம் விலைகளைக் குறைக்கத் தக்க வகையில் செயல்பட வேண்டாமா என்றார். முதல் அமைச்சர் அவர்கள் பேசிய போது—அவர் இங்கே இல்லை என்று நினைக்கிறேன். விலை என்பது மணி சப்ளையைப் பொறுத்தது. நேற்று நமது மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள்.

In Today's Hindu at page 4 you will see expansion of currency of Rs. 1 crore.

என்பதாக காகிதப் பணத்தை அச்சிட்டுக்கொண்டே இருக்கிற போது விலை ஏறாமல் எப்படி இருக்கும்?

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சொன்னார்கள். நூறு கோடிக்குக் காகிதப் பணத்தை உற்பத்தி செய்துவிட்டால் விலை ஏறத்தான் செய்யும். ஆயினும் இந்தக் கூட்டுறவுப் பண்டக சாலைகள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் குறைந்த விலையில் பண்டங்களை விற்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. திருச்சி மார்க்கெட்டை, சிந்தாமணி மார்கெட்டுக்குக் கொடுத்த பிறகு அங்கே போய் மக்கள் மொய்த்துக் கொண்டு வாங்குகிறார்கள் என்றால் வெளியில் உள்ள விலையைவிட அந்தக் கூட்டுறவுப் பண்டகசாலையில் விலை குறைவாக இருப்பதனால் தானே!

ஆயிரம் கோடிக்குக் காகிதப் பணம் உற்பத்தி செய்தபோது காப்பிக்கொட்டைவிலை 2 ரூபாய். நாலாயிரம் கோடிக்குக் காகிதப் பணம் உற்பத்தி செய்தபோது 4 ரூபாய். இப்படி நாட்டில் காகிதப் பணத்தை உற்பத்தி செய்துகொண்டே இருந்தால் விலை ஏறிக்கொண்டேதான் போகும். திரு கே. எம். சுப்பிரமணியத்திற்கு மத்திய சர்க்காரில் எவ்வளவு செல்வாக்கு என்பது எனக்குத் தெரியாது. இப்படிக் காகிதப் பணத்தை உற்பத்தி செய்துகொண்டே போனால் விலை வீக்கம்தான் ஏற்படும் என்பதை மத்தியசர்க்காரிடத்திலேசொல்ல வேண்டாமா? அவர்களது கட்சி எம். பிக்கள் அங்கே இதை வற்புறுத்திப் பேச வேண்டாமா?

உறுப்பினர் பாலகிருஷ்ணன் அவர்கள்முக்கியமான கருத்தைச் சொன்னார்கள். சிறிய கிராமக் கூட்டுறவுச் சங்கங்களை ஒன்றாகச் சேர்த்து விடலாம் என்று. அது நாம் செய்யக்கூடிய கைங்கரியம் அல்ல. முன்பே இருந்தவர்கள் செய்தார்கள். 12 ஆயிரம் கூட்டுறவு க்ரெடிட் சொசைடிகளை 5 ஆயிரம் அளவிற்குக் குறைத்தார்கள். மத்திய சர்க்காரில் உதவி கிடைக்கிறது என்ற காரணத்தினால் வேறு சில மாநிலங்களிலும்கூட இப்படிச் செய்தார்கள். ஆனால் நாம் இந்தக் கொள்கையைக் கடைப் பிடிக்கவில்லை. கட்டாயமாக ஒரு சொசைடியை இன்னொன்றோடு இணைப்பதுஎன்பதை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. மராட்டிய மாநிலத்தவர்களும் இதே கொள்கையில் இருக்கிறார்கள். இன்றைக்கும் கூட 2 இலட்சத்திற்கு வரவு செலவு செய்யக்கூடிய நிலையில் தாங்கள் தம் காலிலேயே நிற்க முடியும் என்று சொன்னார்கள் என்றால் எந்த ஊர் க்ரெடிட் சொசைட்டியையும் தனியாக இயங்கவைக்க நாங்கள் தயார்.

அடுத்து கூட்டுறவுத்துறையில் உள்ள தவறுகளை எடுத்துச் சொன்னார்கள். நாங்கள் வேண்டுமென்றே மறைமுகமாகக்கூட அவற்றை ஆதரிக்கவில்லை. இருக்கிற தவறுகளைக் களைந்தாக வேண்டும் என்றே முயற்சிக்கிறோம். கொஞ்சம் தாமதமாகலாம். அரசன் நின்று கொல்லும் என்கிறபடி எப்படியும் தவறு செய்கிறவர்களைத் தண்டிக்காமல் விடமாட்டோம். பெரியவர்கள் என்ற அளவில்அவர்களைப் போட்டிருக்கும்போது அவர்கள் தவறு செய்வார்கள் என்றால் அவர்களைப் பெரியவர்கள் என்றே நான் கருதவில்லை. நிச்சயமாக நடவடிக்கை எடுக்க முடியும்.



**இந்தியாவுக்கு வரும் அபாலொ 17 வீரர்கள்**

அமெரிக்க அபாலொ 17 வீரர்களான யூகின் ஏ. சேர்ன், ரொனால்டு இ. ஈவன்ஸ், ஹாரிசன் ஸ்கிமிட் மூவரும் சூன் திங்கள் 19-ஆம் நாளன்று இந்தியத் தலைநகரான டெல்லிக்கு வருவார்கள் என்று தெரிகிறது.



இறுதியாக நான் கேட்டுக் கொள்வது—திரு ஹாண்டே அவர்களும், மற்றவர்களும் மற்ற மாநிலங்களுக்குப் போனால்தான் தமிழகத்திலே கூட்டுறவு இயக்கம் எவ்வளவு சிறப்பாக நடைபெற்றுவருகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். இன்றைக்கு அஸ்ஸாம் மாநிலத்திற்குப் போங்கள். சென்ட்ரல் பாங்க் அங்கே செத்துப்போய் விட்டது. பாங்க் கதவுகளை எல்லாம்இழுத்துப்பூட்டிவிட்டார்கள். வெஸ்ட் பெங்காலுக்குப் போங்கள்—பாங்க் கதவுகளை இழுத்து மூடிவிட்டார்கள்.

மராட்டிய மாநிலத்தில் கூட 27 மாவட்டங்களில் மூடிவிட்டார்கள். டெல்லியிலே மாநிலக் கூட்டுறவு அமைச்சர்கள் மாநாடு நடக்கிறபோது மத்தியக் கூட்டுறவு அமைச்சர், 'தமிழகத்தில்தான் ஏ க்ளாசாக நடக்கிறது' என்கிறபோது நமக்கு உள்ளபடியே மனநிறைவாக இருக்கிறது.

திறமையான புலமை எனில் பிறநாட்டார் வணக்கம் செய்தல் வேண்டும் என்பதுபோல மற்ற மாநிலத்தவர்கள் நம்முடைய மாநிலத்திலே கூட்டுறவு இயக்கம் செயல்படுகிற முறையினைப் பாராட்டுகிறபோதுதான் நமக்கு மகிழ்ச்சி உண்டாகிறது. தமிழகத்திற்குக் கிடைத்துள்ள இந்தப் பெயரைக் காப்பாற்ற எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். அமைச்சரவையை விட்டுவிடுங்கள். கூட்டுறவு இயக்கத்திற்கு நீங்கள் எல்லோரும் கொடுக்கிற ஆதரவு— அமைச்சருக்குக் கொடுத்த ஆதரவாக இருக்காது —தமிழ்நாட்டு மக்களுக்கே கொடுக்கிற ஆதரவாகத்தான் இருக்கும். அதற்காக உங்களுக்கு எல்லாம் நன்றியைத் தெரிவித்து, வெட்டுப் பிரேரணைகளுக்கு அவசியம் இல்லை என்று தெரிவித்து அமர்கிறேன்.

(சட்டப் பேரவையில் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்திற்கு அளித்த பதிலுரையிலிருந்து)

இந்தியாவில் இப்போது 18 பத்திரிகைகள் 100 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. லக்னோவிலிருந்து வெளிவரும் இந்தியன் விட்னஸ் (ஆங்கிலம்) என்ற பத்திரிகையும், ரத்னகிரியிலிருந்து வெளிவரும் 'சத்ய சோதக்' என்ற மராத்தியப் பத்திரிகையும் 1971-ஆம் ஆண்டில் நூற்றாண்டு விழாக் கொண்டாடின.




'பம்பாய் சமாச்சார்' என்ற குசராத்தி மொழிப் பத்திரிகை 1822-ஆம் ஆண்டிலிருந்து வந்து கொண்டிருக்கிறது. 'ஜம்-ஏ-ஜம்ஷட்' என்ற மற்றொரு குசராத்திப் பத்திரிகை 1832-ஆம் ஆண்டிலிருந்து பம்பாய் நகரத்தில் வெளியிடப்படுகிறது. 'டைம்ஸ் ஆப் இந்தியா' ஆங்கிலப் பத்திரிகை 1838-ஆம் ஆண்டிலிருந்தும் 'கல்கத்தா ரிவ்யூ' என்ற ஆங்கிலப் பத்திரிகை 1844-ல் இருந்தும் வந்து கொண்டிருக்கின்றன. சென்னையிலிருந்து வெளிவரும் திருநெல்வேலி டயோசிஷன் மாகஸீன் என்ற தமிழ்ப் பத்திரிகை 1849-ஆம் ஆண்டிலிருந்து வந்து கொண்டிருக்கிறது.

இந்தியாவில் வெளியிடப்படும் பத்திரிகைகளில் 92·5 சதவிகிதம் 25 ஆண்டுகளுக்குக் குறைவாகவே வெளிவந்து கொண்டிருக்கின்றன. சுமார் 24 சதவிகிதப் பத்திரிகைகள் கடந்த இரண்டாண்டுகளாகவே வெளியிடப்படுகின்றன.

யுனெஸ்கோ நிறுவனம் கடைசியாக வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின்படி, 1971-ஆம் ஆண்டு இறுதியில், நாளிதழ் வெளியீட்டில் இந்தியா தொடர்ந்து இரண்டாவது இடத்தில் இருந்து வருகிறது. இந்நாட்டில் 821 தினசரிப் பத்திரிகைகள் வெளியிடப்படுகின்றன. 68 பத்திரிகைகள் வாரத்துக்கு மூன்று முறையும் இரண்டு முறையும் வெளிவருகின்றன. 1971-ஆம் ஆண்டு இறுதியில் நாளிதழ்களின் மொத்த விற்பனை 30 இலட்சத்து 96 ஆயிரமாக இருந்தது. 303 நாளிதழ்களிலிருந்து கிடைத்திருக்கும் தகவலின்படி 25 நாளிதழ்கள் தங்கள் மொத்த வருமானத்தில் **75** சதவிகிதத்துக்கும் அதிகமான தொகையை விளம்பரங்களின் மூலம் ஈட்டின. ஒரு பெரிய பத்திரிகையும், ஒரு நடுத்தரப் பத்திரிகையும் 23 சிறிய பத்திரிகைகளும் இதில் அடங்கும்.

1971-ஆம் ஆண்டு இறுதி நிலவரப்படி, இந்தியாவிலுள்ள 316 தினசரிப் பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவில் 2,665 பேர் பணிபுரிந்து கொண்டிருந்தனர். 1970-ல் 2,253 பேர் பணிபுரிந்து கொண்டிருந்தனர். அப்போது 272 தினசரிப் பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்தன.

180 பத்திரிகைகளுக்கு 2,986 தனிப்பட்ட நிருபர்கள் இருந்தனர். 62 நிருபர்கள் வெளிநாடுகளில் பணிபுரிந்து கொண்டிருந்தனர்.

பெரும்பாலான பத்திரிகைகள், அதாவது 7,559 பத்திரிகைகள் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமாக இருந்தன. 2,262 பத்திரிகைகள் சங்கங்களுக்கும், 732 பத்திரிகைகள் பங்குதாரர் அடிப்படையிலும், 537 பத்திரிகைகள் கூட்டுப் பங்கு நிறுவனங்களுக்கும் உடைமையாக இருந்தன. இருப்பினும், கூட்டுப் பங்கு நிறுவனங்களுக்குச் சொந்தமான பத்திரிகைகள்தாம் மிக அதிகமான (மொத்தத்தில் 38·4 சதவிகிதம்) பிரதிகள் விற்றன. தனியார் உடைமைப் பத்திரிகைகளின் விற்பனை மொத்தப் பத்திரிகை விற்பனையில் 30·4 சதவிகிதம்.

முந்தைய ஆண்டுகளைவிட 1971-ஆம் ஆண்டில் அதிகப் பத்திரிகைகள் வெளிவந்தன. 1971-ஆம் ஆண்டு இறுதியில் எடுக்கப்பட்ட கணக்கின்படி, அந்த ஆண்டில் 12,218 பத்திரிகைகள் நம் நாட்டில் வெளியிடப்பட்டன. 1970-ஆம் ஆண்டில் வெளிவந்த பத்திரிகைகளின் எண்ணிக்கையை விட 10·7 சதவிகிதம் அதிகம் ஆகும். பரிசிலனை ஆண்டில் புதிதாக வெளிவந்த 126 தினசரிப் பத்திரிகைகளின் மூலம் நமது நாட்டில் வெளிவரும் தினசரிகளின் மொத்த எண்ணிக்கை 821 ஆக உயர்ந்துள்ளது. இது குறிப்பிடத்தக்கதாகும். 1971-ஆம் ஆண்டில் பத்திரிகை விற்பனை 3·4 சதவிகிதம் அதிகரித்துள்ளது. கடந்த 5 ஆண்டுக் காலத்தில் மொத்தப் பத்திரிகைகளின் எண்ணிக்கை 3,578-ஆக அதாவது 41·4 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

1970-ஆம் ஆண்டில் நாட்டில் 6,483 பத்திரிகைகள் வெளியாயின. விற்பனையான மொத்தப் பத்திரிகைப் பிரதிகளின் எண்ணிக்கை 2 கோடியே 93 இலட்சத்து 3 ஆயிரம் ஆகும். 1971-ஆம் ஆண்டில் 6,633 பத்திரிகைகள் நாட்டில் வெளிவந்தன. விற்பனையான மொத்தப் பத்திரிகைப் பிரதிகளின் எண்ணிக்கை 2 கோடியே 96 இலட்சத்து 19 ஆயிரம் ஆகும்.

தில்லி, பம்பாய், கல்கத்தா சென்னை ஆகிய பெரிய நகரங்களிலிருந்து மொத்தம் 3,964 பத்திரிகைகள் ஆய்வாண்டில் வெளிவந்தன. இந்த எண்ணிக்கை, வெளியான மொத்தப் பத்திரிகைகளின் எண்ணிக்கையில் 32.4 சதவிகிதம் ஆகும். ஆய்வு ஆண்டில் பெரு நகர்ப்புறங்களிலிருந்து மொத்தம் 199 தினசரிப் பத்திரிகைகள் வெளி வந்தன. ஒரு லட்சத்துக்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட நகரங்களிலிருந்து மொத்தம் 183 தினசரிப் பத்திரிகைகள் வெளிவந்தன. சிறிய நகரங்களிலிருந்து 1,312 வாரப் பத்திரிகைகள் வெளிவந்தன.

நம் நாட்டில் வெளிவரும் பத்திரிகைகளில் 100 பத்திரிகைகளின் ஒவ்வொன்றின் விற்பனையும் 50 ஆயிரம் பிரதிகளாகும். இவற்றில் 44 பத்திரிகைகள் ஒவ்வொன்றின் விற்பனையும் 1 இலட்சம் பிரதிகளுக்கும் அதிகமாகும்.

1971-ஆம் ஆண்டில் ஆங்கிலப் பத்திரிகைகளின் விற்பனை 70.03 இலட்சம் பிரதிகளாகக் குறைந்துவிட்டது. இதற்கு முந்தைய ஆண்டில் 71 இலட்சத்து 73 ஆயிரம் ஆங்கிலப் பத்திரிகைப் பிரதிகள் விற்பனையாயின. தமிழ், மலையாளம், மராத்தி, வங்காளம் போன்றமொழிப் பத்திரிகைகளின் விற்பனை அதிகரித்தது.

# பிற்பட்டோர் நலன்கள் பெருகிடுதல் காணீர்!

1971-ஆம் ஆண்டு எடுத்த கணக்குப்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 40,034,200 ஆகும். இதில் மொத்தம் பிற்பட்ட வகுப்பினர் 20,467,928. அதாவது, 51.13 விழுக்காடு ஆகும். பிற்பட்ட வகுப்பினர் 11,514,597 ஆகும். அதாவது 28.76 விழுக்காடு ஆகும். மிகப் பிற்படுத்தப்பட்டோர்8,953331. அதாவது 22.37 விழுக்காடு ஆகிறது.

பிற்பட்ட நலத்துறை என்பதாக ஏற்பட்ட பிறகு இவர்களை ஆண்டுக்கு ஆண்டு பரிசீலனை செய்து — உண்மையிலேயே மிகவும் பிற்பட்ட நிலையில் உள்ளவர்களைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்துக் கொண்டு வருகிறோம். இந்த அடிப்படையில் சென்ற ஆண்டு 14 சாதிகளை இதில் சேர்த்தோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த ஆண்டு கூட இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்பதற்குப் பல்வேறுபட்ட விண்ணப்பங்கள் வந்தன. நான்கு சாதிகளை இந்த ஆண்டு பிற்பட்டோர்நலப் பட்டியலில் சேர்க்க அரசு முடிவு செய்திருக்கிறது. பன்னிரண்டாம் செட்டியார் அல்லது உத்தம செட்டியார் என்கிற சமூகம் ஒன்று சேலம் மாவட்டத்தில் நூறு குடும்பங்களுக்குமேல் கூலி வேலை, தொடக்கப்பள்ளி ஆசிரியர் வேலை செய்து வருகிறவர்கள்; வல்லம்பர் என்பதாகக் காரைக்குடி, தஞ்சாவூர்ப் பகுதிகளில் இருக்கக் கூடிய சுமார் ஒரு இலட்சம் பேர்கள். நகரத்தார் வீடுகளில் சமயல்வேலை, வீட்டு வேலை செய்து வந்தவர்கள் இரண்டாவது. யவனர் என்பதாக ஏறக்குறைய குறவர்களைப் போன்றவர்கள், தென் ஆர்க்காடு மாவட்டம் திண்டிவனம், சிதம்பரம், காட்பாடிப் பகுதிகளில் உள்ளவர்கள். இந்தச் சமூகத்தைச் சேர்ந்த பட்டதாரிகளே இல்லை. இவர்கள் மூன்று. சாலிவாகனன் என்பதாகச் சேலம் மாவட்டத்தில் கலாலராகப் பணியாற்றி வரக்கூடியவர்கள். இந்த உத்தம செட்டியார், வல்லம்பர், யவனர், சாலிவாகனன் என்ற நான்கு பிற்பட்ட சமூகத்தவர்களையும், இந்த ஆண்டு பிற்பட்ட சமூகத்தவர் பட்டியலில் சேர்க்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். இப்படி ஓர் துறை இருக்கிற காரணத்தினால்தான் ஆண்டுக்கு ஆண்டு நல்லமுறையில் இதைப் பரிசீலிக்க முடிகிறது. கல்வியிலும், சமூகத்திலும் இருக்கிற பிற்பட்ட நிலையைத்தான் கணக்கில் எடுக்கிறோமே தவிர மற்ற எதையும் கணக்கில் வைப்பதில்லை.

15(4) அரசியல் அமைப்பின் படி, கொடுக்கிற உதவி கொஞ்சமாகத்தான் இருக்கிறது. இதை எவ்வளவு அதிகமான பேர்கள் பங்கிட்டுக் கொள்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு ஒவ்வொன்றிலும் பயன் அடைகிறவர்கள் தொகை குறைவாகிறது. முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் — பெரியார் அரசியலுக்கு வருவதற்கு முன்னால்—சுயமரியாதை இயக்கம் தோன்றுவதற்கு முன்னால் பல சாதிக்காரர்களும் தங்களைப் பிராமணர்கள் என்றே அழைத்துக்கொண்டு முன்னேறும் சமூகமாக இருந்த நிலையை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். வைசியர்கள் கூட வைசிய பிராமணாள் என்றேதான் தங்களை அழைத்துக் கொள்வார்கள். அப்படி ஒவ்வொரு சாதியும் முன்னேறிக் கொண்டிருந்தது. ஆனால் பிற்பட்ட இனத்தவர்களுக்கு அரசியல் அமைப்புப்படி தனிச்சலுகைகள் அளிக்கத் தொடங்கியவுடன் முற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கூடத் தங்களைப் பிற்பட்ட சமூகத்தவர்களாகச் சொல்லிக் கொண்டு, பிற்பட்ட சமூகத்தவர்களது பட்டியலில் தங்களையும் சேர்க்க வேண்டும் என்பதாகப் போட்டி போட்டுக் கொண்டு வருவதைப் பார்க்கிறோம். இதைத் தவிர்க்க வேண்டும்.

இதுபற்றி ஆராய்வதற்காகவே நாம் போட்டிருந்த சட்டநாதன் குழுவினர் கூட இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

''பிற்பட்ட வகுப்பினர்களுக்கென்று உதவி முறைகளை அரசு உருவாக்கும் போது அத்தகைய உதவிகள் பிற்பட்ட நிலையில் இருப்பவர்களுக்குக் கிடைப்பதற்கான பாதுகாப்புகளையும் உருவாக்க வேண்டும். அப்படிச் செய்யவில்லை என்றால் பெயரை வைத்துக் கொண்டு, அரசு அளிக்கும் உதவிகளை பிற்பட்ட வகுப்பினர்கள் என்ற ஒவ்வொரு சாதியினருக்கும் உயர் நிலையில் உள்ளவர்கள் மட்டுமே பயன் அடையும் நிலை உண்டாகும்'' என்பதாகச் சட்டநாதன் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவேதான் தவறாக ஒருவர், பிற்பட்ட இனத்தவர்களுக்காக ஒதுக்கப்பட்ட சலுகையைப் பறித்துக்கொண்டு போவதை இந்த அரசு அனுமதிக்காது.

எல்லாச் சாதிகளும் பெரும்பாலும் செய்கிற தொழிலை அடிப்படையாக வைத்துத்தான் வந்திருக்கின்றன. கல் தச்சர்கள், கற்களிலே வேலை செய்பவர்கள் இழிந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். இன்னும் பொற்கொல்லர்கள், ஆசாரிகள் என்பதெல்லாம் அந்த அந்தத் தொழிலை அடிப்படையாக வைத்துத்தான் வந்திருக்கின்றன. எல்லாரையும் பிற்பட்ட சமூகத்தவர்களின் பட்டியலில் சேர்ப்பது என்றால் 15(4) அரசியல் அமைப்புச் சட்டம் இடம் கொடுக்கவில்லை என்பதைத்தான் நான் தெரிவித்தேன்.


முஸ்லீம் சமுதாயம் நல்ல அளவுக்கு இன்றைக்கு முன்னுக்கு வருகிறது. பிற்படுத்தப்பட்டோம் என்று சொல்வது, கல்வித் துறையிலும், சமுதாயத்திலும், இதைத்தான் நாம் கவனத்திலே கொள்ள வேண்டும். கல்வித் துறையிலே இன்றைக்கு நல்ல பல காரியங்களை முஸ்லீம் சமுதாயம் செய்து கொண்டு வருகிறது என்பதைப் பெரும் மகிழ்ச்சியோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதுவரையிலே இல்லாத அளவுக்கு 60 உயர்நிலைப் பள்ளிகள் அந்தச் சமுதாயத்தினரால் உருவாக்கப்பட்டிருக்கிறது. 11 கல்லூரிகளும் அந்தச் சமுதாயத்தினரால் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது அவர்கள் வளர்ந்து வருகிற நிலைமையைக் காட்டுகிறது. அந்தச் சமுதாயத்தில் உயர்ந்து கொண்டிருப்பவர்கள் பற்றி அதிகமாகக் கவலைப்

படவேண்டுமே தவிர, உயர்ந்தவர்களை மேலும் மேலும் உயர்த்த அந்தத் துறை இல்லை என்பதையும், அப்படிப்பட்ட எண்ணத்தினை மாண்புமிகு உறுப்பினர்கள் கொள்ளக் கூடாது என்பதோடு அவர்கள் அரசோடு துணையாக இருக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

மத்திய அரசு வெளியிட்ட 'வெல்பேர் ஆப் பாக்வார்ட் கிளாஸஸ்' என்ற பதிப்பில் 1963-ல் ஒரு மக்கள் தொகைக் கணக்கு வெளியாகியிருக்கிறது. அதன்படி, இந்தியாவிலே குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 40 இலட்சம். அதே ஆண்டு 1963ல் தமிழ்நாட்டிலுள்ள குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரின் எண்ணிக்கை 13 இலட்சம். இந்தியாவிலே இருக்கிற குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் எண்ணிக்கையில் 33 சதவிகிதம் தமிழ்நாட்டில்தான் இருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு, இதற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 450 இலட்சம். அதில் தமிழ்நாட்டிற்குக் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 90 இலட்சம்தான். இது எவ்வளவு சதவிகிதம் என்றால் 20 சதவிகிதம் தான். தமிழ்நாட்டிலுள்ள சமூகத்தினருடைய தொகை அளவுக்கு ஒதுக்கி இருக்கவேண்டியது ரூ. 148·50 இலட்சமாகும். அவ்வளவு தொகை ஒதுக்குவதற்குப் பதிலாக ரூ. 90 இலட்சம் தான் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆக, மத்திய அரசு செய்துள்ள இந்தக் கொடுமையினையும் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

1969—70-ல் மாநில அரசு இந்தத் துறைக்குச் செலவிடத் திட்டமிட்ட தொகை ரூ. 18.30 இலட்சம். மத்திய அரசு வழங்கிய மானியம் ரூ. 16 இலட்சம் தான். மாநில அரசாங்கம் செலவழித்த தொகை ரூ. 17·83 இலட்சம். 1970—71-ல் மாநில அரசு திட்டமிட்ட தொகை ரூ. 21·91 இலட்சம். மத்திய அரசு மானியம் ரூ. 18·50 இலட்சம். செலவழிக்கப்பட்ட தொகை, நாம் திட்டமிட்ட தொகையைவிட ரூ. 3 இலட்சம் அதிகமாக 24·08 இலட்சம் செலவழித்திருக்கிறோம். 1971—72-ல் மாநில அரசு திட்டமிட்ட தொகை ரூ. 53·19 இலட்சம். மத்திய அரசு ஒதுக்கிய தொகை ரூ. 18·50 இலட்சம். ஆனால், மாநில அரசு செலவு செய்த தொகை ரூ. 45·7 இலட்சம். 1972—73ல் மாநில அரசு திட்டமிட்ட தொகை ரூ. 58·14 இலட்சம். மத்திய அரசு மானியம் ரூ. 18·50 இலட்சம்தான். இந்த ஆண்டு என்ன சாதனை என்று திரு தங்கமணி அவர்கள் கேட்டார்கள். இந்த ஆண்டு திட்டமிட்ட தொகை ரூ. 72·69 இலட்சம் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்காக மட்டும். இப்பொழுதும் மத்திய அரசு ரூ. 18·50 இலட்சம்தான் ஒதுக்கியிருக்கிறது. மாநில அரசு செலவு செய்து கொண்டு வருவது ஆண்டுக்காண்டு அதிகரித்துக் கொண்டு வருகிறது. ஆனால், மத்திய அரசு அளிக்கும் தொகையில் எந்த விதமான முன்னேற்றமும் இல்லை. இது பற்றி மத்திய அரசோடு பல முறை வாதாடியிருக்கிறோம். பலமுறை கடிதம் மூலமாகவும் எழுதியிருக்கிறோம்.

ஆனால் மத்திய அரசு செவி சாய்க்கவே இல்லை. மத்திய அரசுக்குக் கடிதம் எழுதிய விவரம் எல்லாம் வைத்திருக்கிறேன். அதை வைத்துக்கொண்டு தான் தெரிவிக்கிறேன். ஒரு செய்தியை முதலிலே கூற வேண்டுமென்று கருதினேன். திடீரென்று எதிர்க்கட்சிகள் போலீஸ் மானியத்தைத் தள்ளி வைக்கவேண்டுமென்று கேட்ட நேரத்தில் பிற்பட்டவர் நலத் துறையை முன்னாலே எடுத்துக் கொண்டதால், 2 நாளிலேயே இந்தப் புத்தகம் தயாரிக்கப்பட்டது. ஆகவே, அச்சுப் பிழைகளைப் பொறுத்தருள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



## பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்
## க. இராசாராம்

உதவித் தொகையால் பயன் பெற்றவர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு என்பதை நம்முடைய உறுப்பினர்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். முன்னாலே 50 சதவிகிதம் மார்க்குகள் வாங்கினால் போதும் என்றிருந்த நிலையை மாற்றி, இன்றைக்கு 40 சதவிகிதம் மார்க்குகள் வாங்கினால் போதும் என்று தெரிவிக்கப்பட்டு, அதிலே குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களைப் பொறுத்தவரையில், வெறும் தேர்வு பெற்றிருந்தால் போதும், அவர்களுக்கு மார்க்கே தேவையில்லையென்ற வகையில் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

1969—70-ஆம் ஆண்டில் செலவு செய்த தொகை ரூ. 160·99 இலட்சம். பலன் அடைந்தவர்கள் எண்ணிக்கை 90,565. 1970—71-ல் செலவு செய்தது ரூ. 201·20 இலட்சம். பலனடைந்தவர் எண்ணிக்கை 1,34,249. 1971—72ல் ரூ. 290·50 இலட்சம். பலனடைந்தவர்கள் எண்ணிக்கை 1,68,975. 1972—73ல் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்காக உதவித் தொகையாகக் கொடுத்தது ரூ.309·38 இலட்சம் பலனடைந்தவர்கள் 1,89,466. இப்பொழுது ஒதுக்கப்பட்ட ரூ. 5½ கோடியில் எவ்வளவு பேர் பலன் அடைய இருக்கிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். நான் திரு. தங்கமணி அவர்களுக்குச் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ரூபாய் மதிப்பு மட்டும் கூடிவிடவில்லை. பலனடைவோர்களுடைய எண்ணிக்கையும் தொடர்ந்து கூடிக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த ஆண்டு என்ன என்ன சாதனைகளைச் செய்திருக்கிறோம் என்பதைப் பார்ப்போமானால், ஆண்டு வருமானம் ரூ. 2,000-க்கும் ரூ. 6,000க்கும் இடைப்

பட்ட பெற்றோர்களுடைய பிள்ளைகளுக்கு, இதுவரையிலே எல்லாரும் பேசினார்கள். அவர்களுக்கெல்லாம் பயன்படுகிற வகையிலே, ரூ. 2,000 க்கும் ரூ. 6,000 க்கும் இடையில் வருமானம் பெறுவோரின் பிள்ளைகள் தொழிற் கல்வி பயில வருடத்திற்கு ரூ. 500 கடன் உதவ ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மிகப் பிற்பட்டவர்களாகக் கருதப்படுகிற— மொழிகூடத் தங்களுக்குச் சொந்தம் என்று அறியாத, லம்பாடிக் கூட்டம் தர்மபுரியிலே இருக்கிறது. மேலும் ஒரு பள்ளிக்கூடத்தை அவர்களுக்கு உருவாக்கலாமா என்று அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

1973—74-ஆம் ஆண்டில் மேலும் 20 பின்தங்கிய வகுப்பினர் இல்லங்களும், 8 குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர் இல்லங்களும் திறக்கப்பட இருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு 5½ கோடி ரூபாய்க்கு மானியம் கோரியிருக்கிறோம். அதோடு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக 1 கோடி ரூபாயைப் பெற்று அதிலிருந்து பின்தங்கிய வகுப்பினர் மாணவர்களுக்கான கட்டடங்களைக் கட்ட இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இந்த மானியக் கோரிக்கை 5½ கோடி ரூபாய் அளவிற்குமட்டுமல்ல, 6½ கோடி ரூபாய் அளவுக்கு வந்து, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள்,— மக்கள் அந்த அளவிற்குப் பயன்பெற இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அதன் மூலமாக நல்ல நல்ல கட்டடங்கள், நல்ல நல்ல விடுதிகள் உருவாக இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பட்ட வகுப்பினரை - குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களைச் சேர்ந்த மாணவர்களிலே சார்ட்டர்ட் அக்கவுண்டன்ட்ஸ் யாருமே இல்லை என்ற குறைபாடு கன்னியாகுமரியிலே நடைபெற்ற அந்தக் குழுவின் கூட்டத்திலே எடுத்து வாதாடப்பட்டது. அவர்களுக்கும் அந்தப் பயிற்சி தரப்பட்ட வேண்டுமென்பதை அரசு ஏற்றுக் கொண்டு ஏறக்குறைய ரூ. 30 ஆயிரம் ஒதுக்கி 5 மாணவர்களுக்கு அந்தப் பயிற்சி அளிப்பதற்கு அரசு முன்வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### குரோட்டன்சும் குப்பை மேனியும்

பளபளப்பான குரோட்டன்சுகள் மருந்துக்குப் பயன்படுவதில்லை; குப்பைமேனிக் கீரைதான் மருந்துக்குப் பயன்படும்.

—முதல்வர் கலைஞர்

இந்த ஆண்டு நான்கு புதிய சமூகத்தைச் சேர்ந்தவர்களை இந்தப் பிற்படுத்தப்பட்டவர்களின் பட்டியலிலே சேர்த்த காரணத்தினாலே சுமார் 34 ஆயிரம் ரூபாய் வரையிலே அதிகமாகச் செலவாகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏறக்குறைய இலட்ச ரூபாய் செலவிலே, தாழ்த்தப்பட்ட மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், மற்றவர்களில் 10 சதவிகிதம் பேர்கள் ஆகியவர்களை புற நகர்களிலிருந்து சென்னை நகரத்திற்கு அழைத்து வந்து காட்டுகின்ற திட்டம் போட்டிருக்கின்றோம். அந்த மாணவர்களையும் முன்னுக்குக் கொண்டுவரவேண்டும், அந்த மாணவர்களுக்கும் தன்னம்பிக்கையை ஊட்ட வேண்டும் என்கிற முறையிலே தாழ்த்தப்பட்ட மாணவர்கள் 300 பேர்களையும், பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் 300 பேர்களையும் உயர்வகுப்புமாணவர்களிலே 10 சதவிகிதம் பேர்களையும் ஒவ்வொரு பள்ளியிலிருந்தும், மூன்றாம் பாரம் முதல் எஸ்.எஸ்.எல்.சி. வரையில் படிக்கின்ற மாணவர்களிலே தேர்ந்தெடுத்து அவர்களைச் சென்னைக்குஅழைத்து வந்து- மாநிலக் கல்லூரிக்கு அழைத்து வந்து விஞ்ஞான வளர்ச்சியைக் காட்டி, பெரிய பெரிய நூல்நிலையங்களைக் காட்டி - நாங்கள் பிரிட்டிஷ் தூதுவராலயத்தில் உள்ள பேராசிரியரோடு தொடர்புகொண்டு அவர்களிடம் கேட்டுக் கொண்டோம் - பிற்பட்ட மாணவர்கள் ஆங்கிலத்திலே லாவகமாகப் பேசுவதற்குப் பயிற்சி தந்தார்கள். அந்த முறையிலே அவர்கள் விஞ்ஞானப் பாடத்திலேயும் நல்ல தேர்ச்சி பெற்றார்கள். எதிர்காலத்திலே அவர்களை நல்ல மாணவர்களாக உருவாக்குவதற்கான திட்டத்திற்காக 1 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு 300 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இந்த ஆண்டும் அந்தப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

66 நகராட்சிகளிலே உள்ள ரிக்ஷாக்காரர்கள் - அவர்கள் எல்லாம் தாழ்த்தப்பட்டவர்களாகவும், பிற்படுத்தப்பட்டவர்களாகவும்தான் இருக்கிறார்கள்- பயன்பெறத்தக்க முறையில் டான்வியின் மூலம் 1,000 சைக்கிள் ரிக்ஷாக்கள், ஒன்று 875 ரூபாய் வீதம் செய்யச் சொல்லி சென்னை, மதுரை, கோவை போன்ற பெரிய நகராட்சிகளைத் தவிர மற்ற நகராட்சிகளைப் பொறுத்தவரையில் - அங்கே உள்ளவர்கள் பயன்பெறக்கூடிய முறையில், மதுரை பாங்கு மூலம் ஏற்பாடு செய்து அவர்கள் முன்வந்து அதற்கான ஏற்பாடுகளை இந்த இலாகா செய்ய முன்வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பள்ளி மாணவர்களுக்கு 1973—74 ஆம் ஆண்டில் ரூ. 14.14 இலட்சம் ஒதுக்கப்பட்டு இதனால் ஏறக்குறைய 47 ஆயிரம் பிள்ளைகள் பயன் பெறுவர்.

குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கான பள்ளிகள், மாணவர்கள் இல்லங்களில் சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் 1969—70-ல் 2·07 இலட்சமும், 1970—71-ல் 2·08 இலட்சமும், 1971—72-ல் 9·83 இலட்சமும், திடீரென உயர்வதை நீங்கள் பார்க்கவேண்டும். 1972—73-ல் 2.44 இலட்சமாக இருந்தது, 1973—74-ல் 4.74 இலட்சமாக உயர்த்தப்பட்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என்ன என்ன செய்தார்கள் என்று கேட்டார்கள் அதற்குப் பதிலாகச் சொல்ல விரும்புகிறேன். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் தேர்வுக்குப் பயிற்சியளிப்பதற்காக ஒரு நிலையம் ஆரம்பிக்கப்பட்டுச் சென்ற ஆண்டு பங்குகொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 8. அதிலே நேர்முகத் தேர்வுக்குத் தகுதி பெற்றவர்கள் 3 பேர்கள். வாய்மூலமான தேர்விலே கலந்து கொள்ள அவர்கள் டெல்லிக்குச் சென்றிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு ஒரு புதிய நிலைமை உருவாகியிருக்கிறது. 64 பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள். அதில் 57 பேர்கள் முழு நேரப் பயிற்சியாளர்களாக இருக்கிறார்கள். 7 பேர்கள் பகுதி நேரப் பயிற்சியாளர்களாக இருக்கிறார்கள். இன்னும் ஒரு மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால் இவர்களிலே, இந்த 64 பேர்களிலே 7 பேர்கள் பெண்கள்என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு மணலி அவர்கள் பேசும்பொழுது தொட்டி நாயக்கரைப் பிற்படுத்தபட்டவர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டார்கள். தொட்டி நாயகர் என்பது சேர்க்கப்பட்டு அவர்கள் சலுகைகளைப் பெற்றுக் கொண்டு வருகிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு என். கணபதி அவர்கள் பேசுகின்ற நேரத்திலே சிற்பிகளைப் பற்றி மிகச் சிறப்பாக எடுத்துச் சொன்னார்கள். தமிழகத்திலே உள்ள சிற்பிகள் மிகச் சிறப்பான முறையிலே பணியாற்றினார்கள். பணியாற்றுகிறார்கள் என்பதையெல்லாம் நீங்கள் அறிவீர்கள். மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் சிற்பிகளுக்கு நல்ல வேலை தருகின்ற முறையிலே சிலப்பதிகாரக் காவியத்தை எதிர்காலத் தமிழகம் நல்ல முறையிலே உணர்ந்து கொள்ள வேண்டுமென்பதற்காக மாமல்லபுரத்திலே சிற்பிகள் சிலப்பதிகாரக் காவியத்தைக் கல்லிலே வடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அது என்னுடைய இலாகா இல்லையென்றாலும், சுற்றுலா சம்பந்தப்பட்ட முறையிலே நான் அந்தக் கருத்தைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

அரசு, ஆஸ்தானச் சிற்பியொருவரை நியமிக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆந்திராவிலே அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்றும் சொன்னார்கள். அதை அரசு கவனித்து விரைவிலே முடிவை அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குழ. செல்லையா அவர்கள் பேசும்பொழுது முத்துராஜா, வல்லம்பர் ஆகியோரை விட்டுவிட்டார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் அந்தப் பட்டியலிலே சேர்க்கப்பட்டுச் சலுகைகள் அளிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனியார் நடத்துகின்ற விடுதிகளைப் பற்றிப் பல பேர்கள் குறிப்பிட்டார்கள். அது சம்பந்தமாக அரசு பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது. பின்தங்கியவரின் வாழ்க்கையே பின்தங்கிக் கிடக்கிற நேரத்திலே, யாரோ சில பேர்கள் வந்து விடுதிகள் நடந்துவதற்கு விரும்புகிறார்கள் என்றால் அதை அரசு ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்பற்றி விரைவிலே முடிவெடுக்கப்படும்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள மீனவ கிறித்தவர்களைப் பொறுத்த வரையிலே அவர்களைப் பிற்பட்டவர் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு தனிப்பட்ட நிலைமை இருக்கிறது. திருவாங்கூர் சமஸ்தானத்தோடு சேர்ந்திருந்து அவர்கள் தாய்த் தமிழகத்தோடு சேர்ந்த பொழுது ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலே சில சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பரவன், லேட்டின் கத்தோலிக், எஸ்.ஐ.யு.சி. ஆகிய மூன்றையும் பிற்பட்டவர்களாகக் கருதி கல்லூரிகளிலே சேர்த்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. மற்ற மாவட்டங்களிலே அந்த நிலைமையைச் செய்ய முடியாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு துரைசாமி அவர்கள் வேளாளக் கவுண்டரை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றார்கள். அவர்கள் எல்லாம் கல்விச் சலுகையில் முன்னேறி இருக்கிறார்கள். அப்படி முன்னேறி இருப்பவர்களுக்கு மற்ற பல காரியங்களைச் செய்வது என்பது முடியாத காரியம்.

கிறித்தவ சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் வந்து என்னிடம் கேட்கிறார். அவர் வேறு சலுகைகள் எதுவும் கேட்கவில்லை. அவர்கள் பொருளாதாரத்தில் நன்றாக இருக்கிறார்கள். மெடிகல் காலேஜுகளில் எஞ்சினீயரிங் காலேஜுகளில் இடம் கேட்கிறார்கள். அதற்காகத்தான் பின்தங்கியவர்கள் சமுதாயத்தில் சேர்க்கவேண்டுமென்று பலரும் கோருகிறார்கள். இப்போது பி.யு.சி. வரை எல்லாச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இலவசக் கல்வி கொடுத்து வருகிறோம். ஆகவே, இதிலே வேறு பெரிய பிரச்சினை இல்லை. எல்லோரையும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்த்துக் கொள்வது என்பது இயலாத காரியம்.

எவ்வளவு காரியங்கள் அக்கறையோடு, பொறுப்போடு அடித்தளத்தில் இருக்கிற மக்களை மேலே கொண்டுவரவேண்டுமென்ற நோக்கத்தோடு செய்யப்படுகின்றன என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அந்த நல்ல நோக்கம் நையாண்டி செய்யப்படுமானால் உண்மையிலேயே பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் நிலையை உணராமல் இருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். பொறுப்பானவர்களாக இருக்கிறார்கள். எனவே பொறுப்பான முறையில் எவ்வளவு காரியங்கள் செய்யப்படுகின்றன என்பதை நீங்கள் உணரவேண்டும்.

(தமிழ்நாடு சட்டப் பேரவையில் பிற்பட்டோர் நலத்துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளித்து ஆற்றிய உரையிலிருந்து)

### முதன் முதலாக !

குருவாயூரிலுள்ள கிருஷ்ணர் ஆலயத் திருப்பணிக்காகத் தமிழ்நாட்டு ஆலயங்களின் நிதியிலிருந்து ரூ. 12,501 அளிக்கப்பட்டுள்ளது. வெளி மாநில ஆலயம் ஒன்றுக்கு, தமிழ்நாட்டு ஆலய நிதி அளிக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

குருவாயூர் ஆலயத்துக்குத் தமிழ்நாட்டு ஆலயங்கள் அளிக்கும் நிதியின் விவரம் வருமாறு : பழனி தண்டாயுதபாணி தேவஸ்தானம் ரூ. 5,001; இராமேசுவரம் இராமநாத சுவாமி தேவஸ்தானம் ரூ. 5,000; திருத்தணி சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம் ரூ. 2,000, சென்னை பார்த்த சாரதி கோவில் ரூ. 500.



# போக்குவரத்துத் துறை புதுப்பொலிவு பெற்றிட..

**1971**-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 31-ஆம் நாள் வரையில் சென்னை நகரம் முழுதிலும் அரசினர் பேருந்துகளை விடும் பொறுப்பைத் தமிழ்நாடு போக்குவரத்துத் துறை பெற்றிருந்தது.

போருக்குப் பிற்பட்ட மறுவாழ்வுக்கான மத்தியக் குழுவின் பரிந்துரைகளுக்கு இணங்க இந்தப் போக்குவரத்துத் துறை அமைக்கப்பட்டது.

1947-ஆம் ஆண்டில் நகரில் பேருந்துப் போக்குவரத்தைத் தேசியமயமாக்கும்பணி தொடங்கியது. 1948-ஆம் ஆண்டுக்குள், நகரின் பேருந்துப் போக்குவரத்து தேசிய மயமாக்கப்படுவது முழுமை பெற்றது. தேசிய மயமாக்கப்படுவதன் அடுத்த கட்டம், 120 மைல்களுக்கு அதிகமான எல்லா வழித் தடங்களிலும் முற்ற முழுக்க அரசே பேருந்துகளை விட வேண்டும் என்ற கொள்கை முடிவை அடிப்படையாகக் கொண்டு, 1959-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. தேசியமயமாக்குதலின் மூன்றுவது கட்டம் 1967-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது; (அ) 75 மைல்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட தூரமுள்ள வழித்தடங்கள், மற்றும் (ஆ) சென்னை நகரில் தொடங்கிச் சென்னை நகரிலேயே வந்து முடியும் வழித் தடங்கள் ஆகியவற்றைத் தேசிய மயமாக்க வேண்டும் என்று முடிவெடுத்தது.

இந்தக் கொள்கைக்கு இணங்கச் சென்னையிலும், மற்றும் செங்கற்பட்டு மாவட்டத்திலும் தொடங்கி ஓடும் நகரம் மற்றும் மாவட்டப் போக்குவரத்துக்களையுங்கூட இந்தப் போக்குவரத்துத் துறை தேசிய மயமாக்கத் தொடங்கியது. இந்தத் துறை எளிதில் கையாள முடியாததொரு நிறுவனமாக வளர்ச்சி பெற்றிடவே, சென்னை நகரிலும் மற்றும் செங்கற்பட்டு மாவட்டத்திலும் உள்ள வழித்தடங்களில் பேருந்துப் போக்குவரத்தை இயக்கிடும் பொருட்டுத் தனியானதொரு கழகம் (கார்ப்பரேஷன்) ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்தது.

இவ்வாறாக, சென்னை நகருக்குள்ளும், புற நகர்களிலும் மற்றும் செங்கற்பட்டு மாவட்டத்துக்குள்ளும் உள்ள பேருந்து வழித்தடங்கள் அனைத்தையும் இயக்கும் பொறுப்பை ஏற்பதற்கு 1-1-1972 அன்று பல்லவன் போக்குவரத்துக் கழகம் அமைக்கப்பட்டது.

பல்லவன் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையிடமிருந்து கீழ்க் குறித்த வழித்தடங்களையும் அவற்றுக்காகப் போக்குவரத்துப் பணிகளையும் மேற்கொண்டது.

| வகையினம் | வழித் தடங்கள் | பேருந்துகள் |
|---|---|---|
| மாநகர் .. | 116 | 646 |
| நகர் .. | 60 | 246 |
| மாவட்டம். | 118 | 244 |
| மொத்தம். | 294 | 1,136 |

அது முதற் கொண்டு, பல்லவன் போக்குவரத்துக் கழகம் எல்லாத் துறைகளிலும் கீழ்க் குறித்துள்ளவாறு மிக விரைவுடன் முன்னேற்றம் கண்டிருக்கிறது.

1972 சனவரித் திங்களில் 1,310 ஆக இருந்த பேருந்துகளின் எண்ணிக்கை, 1973 மார்ச்சு திங்களில் 1,371 ஆக வளர்ச்சி பெற்றிருக்கிறது. இவ்வாறாக, பேருந்துகளின் எண்ணிக்கையில் 61 பேருந்துகள் கூடுதலாகியிருக்கின்றன.

1972 சனவரித் திங்களில் 1,136 பேருந்துகள் இயங்கி வந்தன. அவை 1973 மார்ச்சுத் திங்களில் 1,182-ஆக அதிகரிக்கப் பட்டிருக்கின்றன. இவ்வாறாகப் பயணம் செய்யும் பொது மக்களின் வசதிக்காக, வழித்தடங்களில் 46 பேருந்துகள் கூடியிருக்கின்றன.

46 பேருந்துகள் கூடுதலாகியிருந்த போதிலும் கூட, நாள்தோறும் ஒவ்வொரு பேருந்தும் ஓடும் கிலோ மீட்டர் பயண தூரம் அதிகரிக்கப்படவில்லை. உச்ச அளவுப் போக்குவரத்து இல்லாத நேரங்களில் தேவைக்கு அதிகமான பேருந்துகள் ஓடுவதைச் சீர் செய்யும் கொள்கையைக் கடைப்பிடிக்கும் வகையிலேயே இவ்வாறு பயணத் தொலைவு அதிகரிக்கப்படவில்லை.

நகரப் போக்குவரத்தில் நாளொன்றுக்கு ஒரு பேருந்து ஓடும் சராசரியான பயணத் தொலைவு 207 கிலோ மீட்டராகும்; இது, இந்தியாவிலுள்ள மற்றத் தலை நகரங்களில் பேருந்து ஓடும் சராசரிப் பயணத் தொலைவைக் காட்டிலும் அதிகமானதாகும்.

நாள்தோறும் வசூலாகும் பேருந்துப் பயணக் கட்டணம் 1972 சனவரித் திங்களில் 2.57 இலட்சமாக இருந்தது. அது, படிப்படியாக உயர்ந்து 1973 மார்ச்சுத் திங்களில் 2.83 இலட்சத்தை எட்டியிருக்கிறது.

டயர்கள் மற்றும் உதிரி உறுப்புகளின் தட்டுப்பாடு போன்ற சில இக்கட்டுகள் இருந்த போதிலும் கூடப் பொறியியல் அமைப்பைச் சீராக்கியிருப்பதன் காரணமாக, 1972 சனவரித் திங்களில் நாளொன்றுக்குச் சராசரி 3,900 ஆக

இருந்த பயணப் போக்குவரத்துக்கள் (ட்ரிப்புகள்). இழப்பு, 1973 மார்ச்சுத் திங்களில் 2,566 ஆகக் குறைந்திருக்கிறது.

பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை மேம்படுத்தும் பொருட்டு 1973–74-ஆம் ஆண்டில் 108 பழைய பேருந்துகளைப் புதிதாகமாற்ற முடிவு செய்துள்ளது. 90 பேருந்துகளை அதிகரித்துப் போக்குவரத்து இயக்க ஆற்றலைப் பெருக்கிடவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

சிறப்பான முறையில் நிர்வகித்தல், பராமரித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் இயக்குதலுக்கு இயைந்த வகையில் பல்லவன் போக்குவரத்துக் கழகம் ஒவ்வொரு பணிமனையையும் ஒரு தனிப் பிரிவாகக் கொண்டு மறு சீரமைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பணி மனையும் ஒரு கிளை மேலாளரின் கட்டுப்பாட்டில் உள்ளது. அவருக்குப் போக்குவரத்து விஷயத்தில் இரண்டு உதவிக் கிளை மேலாளர்களும் (போக்குவரத்து), பொறியியல் விஷயத்தில் இரண்டு உதவிக் கிளை மேலாளர்களும், (தொழில் நுட்பத் துறை), மற்றும் கணக்குகள் வைப்பு விஷயத்தில் ஓர் உதவிக் கிளை மேலாளர் (கணக்குகள் மற்றும் நிர்வாகம்) உதவி புரிகின்றனர். 1—4—1973 முதற்கொண்டு இம்முறை செயல்பட்டு வருகிறது.

வசூலாகும் பணத்தில், போனஸ் வழங்கும் திட்டம் ஒன்று தமிழ்ப்புத்தாண்டு நாளில் (13—4—1973) இரண்டு பணிமனைகளில் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது. சென்னை நகரப் பணிமனையான வட பழனி பணிமனையும், வெளியூர்ப் பணிமனையான வியாசர் பாடிப் பணிமனையும் ஆகிய இரண்டே அவை.

இந்தத் திட்டம் ஒரு திங்களுக்கு மட்டும் செயல்படுத்தப்பட்ட ஓர் ஆய்வு நடவடிக்கையாகும்.

இவ்வகையில் சென்னை நகரப் பணிமனை ஒன்றில் வசூலாகும் ஒரு மொத்தத் தொகையில் 5 சத வீதமும், வெளியூர்ப் பணிமனை ஒன்றில் வசூலாகும் மொத்தத் தொகையில் 3 சத வீதமுமாகப் பேருந்து, ஊழியர்களுக்கு ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. வசூல் குறைந்தாலுங் கூட, ஏற்கெனவே அமலில் உள்ள படியான 'பாட்டா' தொகைக்கு ஈடான குறைந்த பட்ச போனஸ் அளிப்பதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது. பராமரிப்புச் சிப்பந்திகளுங் கூட அவர்களால் இயக்கப்படும் வழித் தடங்களில் கிடைக்கும் வசூலுக்கு ஏற்றபடி, ஊக்கத் தொகை போனசில் ஒரு பங்கைப் பெறுகிறார்கள்.

ஏப்ரல் மாதம் முதல் 12 நாட்களில் 92 பேருந்துகளையும், 16 வழித் தடங்களையும் கொண்ட வட பழனி பணிமனைக்கு ஏற்பட்ட நட்டம் ரூ. 22,120. ஏப்ரல் 13 லிருந்து 24 வரை வசூல் போனஸ் திட்டம் அமலாக்கப்பட்ட பின்னர் அதே பணிமனைக்குக் கிடைத்த இலாபம் ரூ. 13,650. பேருந்துகளின் ஓட்டுநர்களுக்கும், நடத்துநர்களுக்கும் 5 சதவிகிதம் போனஸ் கொடுத்தபின் இந்த இலாபம் கிடைத்திருக்கின்றது. ஒரு வழித்தடத்தில் வசூல் 9 மடங்கு அதிகரித்துள்ளது.

இந்த அரிய திட்டத்தினால் கிடைத்த பலன்கள் என்னென்ன தெரியுமா? (1) பேருந்து ஒன்றுக்கு வருமானம் ரூ. 260 லிருந்து ரூ. 300 ஆக உயர்ந்துள்ளது. (2) பேருந்து நிற்குமிடங்களில் காத்திருக்கும் பயணிகள் மிகவும் குறைவு. (3) காத்திருக்கும் பயணிகளை நடத்துநர் பேருந்தில் ஏறுமாறு அழைப்பதாகத் தெரிந்த பயணிகள் கூறியுள்ளனர். (4) பயணிகள் காத்திருக்கும் போது கூட, ஒரு சில பயணிகளுடன் பேருந்துகளை நிறுத்தாமல் விரைவாக ஓட்டிச் செல்வது பழங்கதையாகிவிட்டது. (5) பணிமனையில் வருகை 73 சதவிகிதத்திலிருந்து 80 சதவிகிதமாக அதிகரித்திருக்கிறது, (6) பணி மனைப் பகுதியில் ஏப்ரல் 12-ல் 20 பேருந்துகள் 'பிரேக் டவுன்'. ஆனால், அடுத்த நாள் 10 'பிரேக் டவுன்'. (7) சில நாட்களில் ஒரு நடத்துநர் அல்லது ஓட்டுநருக்கு ரூ. 6 போனசாகக் கிடைத்திருக்கிறது. வழக்கமாக நடத்துநர் வீட்டுக்கு எடுத்துச் செல்லும் மாத ஊதியம் ரூ. 250. அவர் தற்போது போனசாக ரூ. 60 லிருந்து 70 வரை பெற முடிகிறது. (8) பராமரிப்பு ஊழியர்களுக்கும், போனஸ் கிடைக்கிறது. இதற்காக அவர்கள் பேருந்துகளுக்காகப் பணிமனை வாயிலில் காத்திருக்கிறார்கள். (9) பேருந்துகளைப் பயன்படுத்துவது 88 சத விகிதமாக வளர்ச்சியடைந்திருக்கிறது. 100-க்கு 100 'டிரிப்கள்' செயற்படுத்தப் படுகின்றன. ஏனெனில் ஓட்டுநர் அவருக்குரிய 'டிரிப்கள்' அனைத்தையும் இயக்கினால் சிறிதளவு போனஸ் கிடைக்கிறது. (10) பணிமனையின் 16 வழித் தடங்களில் 6 இன்னமும் நஷ்டத்தில் இயங்குகிறது. ஆனால், இந்த வழித்தடங்களில் ஏப்ரல் 13-க்குப் பின் நல்ல வசூல் என்பதை இங்குக் குறிப்பிடவேண்டும்.

சென்னை நகரில் பேருந்துப் போக்குவரத்து வசதிகளின் தரத்தை உயர்த்தவும், பொதுவாகக் குறித்த நேரத்தில், பேருந்துகள் வருமாறு செய்யவும், பேருந்துப் போக்குவரத்தைச் சிக்கனமாகவும் திறம்படவும் நடத்த வேண்டி நகரின் பேருந்துப் போக்குவரத்தின் ஏற்பாடுகளை விரிவாக ஆராய்வதற்காக திரு. ஜி. அய்யாசாமி அவர்களைச் சிறப்பு அலுவலராகத் தமிழக அரசு நியமித்தது. அவர் கொடுத்த அறிக்கையின் சுருக்கம் கீழே தரப்படுகிறது:

சென்னை நகரில் பயணிகள் பயணம் செய்யும் மொத்தத் தொலைவில், பெரும் பகுதி

### பூம்புகாரின் வேறு பெயர்கள்

மூதூர், பேரூர், பெருநகர்
காகந்தி, சம்பாபதி
காவிரிப்பட்டினம்
காவிரிப்படப்பைப் பட்டினம்
காவிரிப்படப்பை நன்னகர்
காவிரிப் பூம்பட்டினம்

வேலைகளுக்குப் போய் வருபவர்கள் மேற்கொள்ளுவதுதான், இதில் பேருந்துப் பயணம் சுமார் 83 சதவிகிதம்; எஞ்சியிருப்பது தான் ரயில் மூலம் செய்யப்படும் பயணம்.

பேருந்துப் போக்குவரத்துச் செயல் பாட்டைப் பரிசீலித்துப் பார்த்த போது, சில பிரச்சினைகள் காணப்பட்டன. அவை இவை :

1. நிறையப் பேரை ஏற்றிச் செல்லக் கூடிய பெரிய பேருந்துகள் போதுமான அளவு கிடைக்கவில்லை.

2. ஏராளமான பேருந்துகள் சுட்டுப்படியாகக் கூடிய விதத்தில் விடப்படவில்லை. சுற்றி வளைத்துக் கொண்டு போகும் தடங்கள் பல இருந்து வருகின்றன.

3. பேருந்துகளின் சராசரி வேகம் குறைவாயிருக்கிறது.

4. அடிக்கடி பேருந்துகளை நிறுத்துவதாலோ வண்டிகளை மெதுவாக விடுவதாலோ அதிகத் தாமதம் ஏற்படுகிறது.

5. பேருந்துகளின் மூலம் கிடைக்கும் வருமானத்துக்கும், நடைமுதல் செலவுக்குமிடையில் ஏற்றத் தாழ்வு அதிகமாயிருக்கிறது.

6. நிதித் தட்டுப்பாட்டின் காரணமாகப் பேருந்துப் போக்குவரத்து அதிகரிப்பை மேற்கொள்ள முடியவில்லை. பழைய பேருந்துகளுக்குப் பதிலாகப் புதிய பேருந்துகளை வாங்க முடிவதில்லை.

7. பேருந்துகள் புறப்படும் இடங்களிலும், போய்ச் சேரும் இடங்களிலும் போதிய வசதிகள் இல்லை.

;

நெரிசல் நேரத் தேவையைச் சமாளிப்பதற்காக, யாரும் சுலபமாகச் சொல்லி விடக் கூடிய பரிகாரம் ஒன்று உண்டு. பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம் என்பதே அது. ஆனால், அதற்கு ஆகும் செலவை நோக்கினால், அது மிகவும் அருஞ்செயல் என்பது விளங்கும். தவிர, நகரில் தற்போதுள்ள சாலை வசதிகள், பேருந்து எண்ணிக்கையை மிகப் பேரளவில் அதிகரிப்பதற்கு இடம் தராது.

எனவே, பயண நேரத்தைக் குறைக்கும் வகையிலும், வேகத்தினை அதிகரிக்கும் வகையிலும் தடங்களைச் சீரமைப்பது ஒன்று தான் சரியான பரிகாரம் என்ற முடிவுக்குத்தான் வந்தாக வேண்டியிருக்கிறது.

> **வகுப்பு அறையில் கிடைக்கின்ற அறிவோடு வெளியில் கிடைக்கிற பொது அறிவை பெற்று முழு மாணவர்களாக ஒவ்வொருவரும் வெளியேற வேண்டும்.**
>
> —பேரறிஞர் அண்ணா

பெரிய பேருந்துகளை விடுவது, மாடிப் பேருந்துகள் விடுவது இணைப்பு வண்டிகளுடன் கூடிய பேருந்துகளை விடுவது போன்றவையும் ஒரு பரிகாரமே. ஆனால் அதற்குச் சாலையிலுள்ள மரங்களையும், நீட்டிக் கொண்டுள்ள கட்டடக் கூரைகளையும் அகற்றியாக வேண்டியிருக்கும். தவிர, நிறையப் பேரை ஏற்றிச் செல்லும் பேருந்துகளை நாள் முழுவதும் விடுவதும் என்றால், அது வசதிகளை வீணடிப்பதாக ஆகும்.

எனவே, ஒரே வழியில் பல்வேறு தடங்களைச் சேர்ந்த பேருந்துகள் ஓடுவதைத் தவிர்த்துக் குறுக்குத் தடங்களையும் (ரேடியல் ரூட்), வட்டத் தடங்களையும் (சர்கம்பெரன் ஷியல் ரூட்) அமைக்க வேண்டுமென்பதே இந்த அறிக்கை கூறும் யோசனையாகும். தற்போது நகர எல்லைக்குள்ளும், சென்னை மாநகரப் பகுதியிலும் மொத்தம் 181 தடங்கள் உள்ளன. 946 பேருந்துகள் ஓடுகின்றன.

நியூயார்க் நகரத்தில் உள்ளது போலக் குறுக்குத் தடங்களும், வட்டத் தடங்களும் கொண்ட இணக்கமான தட அமைப்பு முறை ஒன்றை இங்கேயும் அமைக்கலாம் என்ற கருத்துக் கூறப்படுகிறது. ஒவ்வொரு வட்டத் தடங்களைச் சந்திக்கும் இடங்களில் பேருந்து நிற்குமிடங்கள் இருக்க வேண்டும். இவற்றைத் தவிர குறுக்குத் தடங்களிலும், வட்டத் தடங்களிலும் மேலும் பல இடங்களிலும் பேருந்து நிற்குமிடங்கள் இருக்க வேண்டும். ஒரு குறுக்குத் தடத்தில் வரும் பயணி, தாம் விரும்பும் இடத்தில் இறங்கி வட்டத் தடத்துக்கு மாறி (அல்லது வட்டத் தடத்திலிருந்து குறுக்குத் தடத்துக்கு மாறி) தாம் போக விரும்பும் இடத்துக்குப் போய்ச் சேர இது வசதியாக இருக்கும்.

அதாவது, ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பேருந்துகளில் போக வேண்டியிருக்கும். ஆனால் எந்த பேருந்து நிற்குமிடத்திலும் அதிக நேரம் காத்திருக்க வேண்டியிராது. அவ்வாறு செய்யும் போது ஒரு பேருந்தில் வாங்கும் டிக்கட், அதன் தொடர்பான மற்றொரு அல்லது பல பேருந்துகளில் பயணம் செய்வதற்குக் கூடுதல் கட்டணமின்றிச் செல்லத் தக்கதாயிருக்க வேண்டும்.

இதில் பல அனுகூலங்கள் உண்டு. ஒரே வழியில் பல தடங்களைச் சேர்ந்த பேருந்துகள் ஓடுவதைத் தவிர்க்கலாம். இதனால் நெரிசலும், தாமதமும் குறையும். தேவைப்படும் பேருந்துகளின் எண்ணிக்கையும் குறைவாயிருக்கும். பேருந்துத் தடங்களின் எண்ணிக்கை குறைவதால், ஒரு தடத்தில் அதிகப் பேருந்துகளை விட முடியும்! அடிக்கடியும் பேருந்துகள் வரும்.

பல்வேறு பிரச்சினைகளையும் பரிசீலித்துப் பார்த்த பிறகு, நகரில் தற்போதுள்ள எல்லாத் தடங்களையும் உள்ளடக்கக் கூடிய வகையில், 24 குறுக்குத் தடங்களையும், 16 வட்டத் தடங்களையும் ஏற்படுத்தலாமென்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

திரு. அய்யாசாமி அவர்களின் பல்வேறு பரிந்துரைகளைப் பரிசீலித்துப் பார்த்த பிறகு, சோதனையாக ஒரு குறுக்குத் தடத்தில் பேருந்து விட்டுப் பார்ப்பது என்று பல்லவன் போக்குவரத்துக் கழகம் தீர்மானித்திருக்கிறது. தெற்குப் பெரு வழிச் சாலை வழியாகப் பாரி முனைக்கும் சைதாப்பேட்டைக்குமிடையில் 22 பேருந்துகளை விடுவதே இந்தத் திட்டம். இதன் கீழ் சைதாப்பேட்டைக்கும் கோட்டூர்புரத்துக்கும் இடையில் 2 இணைப்புப் பேருந்துகளும், சைதாப்பேட்டைக்கும் ஈக்காட்டுத் தாங்கலுக்கும் இடையில் ஓர் இணைப்புப் பேருந்தும், சைதாப்பேட்டைக்கும் நங்கநல்லூருக்கு மிடையில் 5 இணைப்புப் பேருந்துகளும், நங்கநல்லூருக்கும் கிழக்குத் தாம்

பரத்துக்கு மிடையில் ஒரு குறுகிய தூரப் பேருந்தும் விடப்படும். இந்த ஆய்வு ஏற்பாடு 1973 மே 1-ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

பாரிமுனைக்கும், சைதாப்பேட்டைக்கும் இடையில் நெரிசல் நேரங்களில் 3 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் போகும். சாதாரண நேரங்களில் இந்த இடைவெளி அதிகபட்சம் 15 நிமிடமாய் இருக்கும்.

சாதாரணமாக ஒரு பயணி நடுவழியில் பேருந்து மாற்றினால், கூடுதலாக 5 காசு கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும் அல்லவா? ஆனால், சைதாப்பேட்டையி லிருந்தோ, சைதாப்பேட்டைக்கோ இணைப்புத் தடங்கள் வழியாகப் பயணம் செய்ய விரும்புகிறவர்களுக்கு இந்தக் கூடுதல் செலவு வைக்கக் கூடாது என்பதற்காக, இணைப்புத் தடத்தின் முதல் 'ஸ்டேஜ்' கட்டணத்தை- 5 காசாகத் தமிழக அரசு குறைத்துள்ளது. இணைப்புத் தடங்களில், கிளம்பும் இடத்திலிருந்து, போய்ச் சேரும் இடம் வரை எங்கு வேண்டுமானாலும் பயணம் செய்பவர்களுக்கும் இது பொருந்தும்.

ஓட்டுநர்கள் உட்காருமிடத்திலிருந்து தனியாகப் பிரித்து வைக்கும் வகையில் பேருந்துகள் அமைக்கப்பட வேண்டும். பயணிகள் இறங்குவதை ஓட்டுநர்கள் நன்றாகப் பார்ப்பதற்கு வசதியாக இருக்க வேண்டும்.

இறங்கவிருக்கும் பயணிகள் ஒரு பிடியைப் பிடித்து இழுத்து அறிவிப்புச் செய்வதற்கு ஏற்பாடு இருக்க வேண்டும். தற்போதுள்ள மணி அடிக்கும் முறை சரிவரச் செயல்படவில்லை.

மழை காலத்தில் பயன்படுத்துவதற்காகத் தற்போதுள்ள சன்னல் திரை ஏற்பாடு சரிவரச் செயல்படவில்லை. துரிதமாகச் சன்னல்களை மூடுவதற்கு ஏற்ற ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

எட்டு கிலோ மீட்டருக்கு அதிகமாயுள்ள தடங்களில், நிற்கும் பயணிகளுக்கான பேருந்துகள் (ஸ்டாண்டி பஸ்கள்) பயன்படுத்தப்படக் கூடாது.

குறுக்குத் தடப் பேருந்துகளுக்குத் தனி வண்ணம், வட்டத் தடப் பேருந்துகளுக்குத் தனி வண்ணம், இணைப்புத் தடப் பேருந்துகளுக்குத் தனி வண்ணம் என்று, தனித்தனியாகப் பிரித்துக் காட்டுவதற்கு ஏற்ற ஒரு முறையைக் கையாள வேண்டும்.

திருவிழா, விடுமுறை நாட்களிலும் குறிப்பிட்ட இடங்களிலிருந்து குறிப்பிட்ட இடங்களுக்குப் பேருந்துகள் விடலாம்.

சீசன் டிக்கட் ஏற்பாட்டை அதிகமாக ஊக்குவிக்க வேண்டும். இரு 'டெர்மினஸ்'களுக்கு இடையில்தான் சீசன் டிக்கட் என்பதற்குப் பதிலாக, இடைவழியில் எந்த இரு இடங்களுக்குமிடையில் வேண்டுமானாலும் சீசன் டிக்கட்டுகளைத் தரலாம்.

சில நடத்துநர் எச்சில் தொட்டு டிக்கட் கிழிக்கும் பழக்கத்தை நிறுத்துவதற்காக, நடத்துநர்களுக்கு 'ஸ்பாஞ்ச்' வில்லைகளைத் தரலாம்.

பரிந்துரை செய்யப்பட்டுள்ள குறுக்குத் தடங்களையும், வட்டத் தடங்களையும் குறிக்கும் வரைபடம், பொது மக்கள் தகவலுக்காக இங்கே வெளியிடப்பட்டுள்ளன.

தனி நபர்கள், பயணிகள் சங்கங்கள், மற்றும் பல்வேறு நிறுவனங்கள், பொது மக்கள் முதலியோர் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம். அவற்றிற்குப் பல்லவன் போக்குவரத்துக் கழக நிர்வாகம் உரிய பரிசீலனை அளிக்கும்.



## ரிக்ஷாக்காரரின் வாழ்த்து

-மஞ்சக்கொல்லை-வள்ளுவதாசன்-

ஏழையின் சிரிப்பில் இறைவனையே—மெத்த
ஏர்மிகக் காணும் செயல்பலவே
வாழையின் வாழை வளர்ந்தாற்போல்—நல்ல
வாரியங்கள் நாட்டில் ஓங்குதய்யா !

ஊர்பவர் ஈர்ப்பவர், இருவரையும்—ஒத்த
ஊக்கம் பெற்றிடச் செய்தாற்போல்
கார்மழை போன்றே கருதாமல்—நல்ல
கால்வண்டி வழங்கிக் களிக்கின்றார் !

மதியை மிதிக்கும் இந்நாளில்—அந்தோ !
மரமாய் மாடாய்த் தேய்ந்திட்டோம் !
விதியை நொந்து இளைத்திருந்தோம்—புதிய
விண்மீன் தெரியக் களிப்புற்றோம் !

பொற்கொடி ஒருத்தியைக் காத்திடவே—கதவைப்
பொல்லாத வேளையில் தட்டியதால்
பொற்கைப் பாண்டியன் வீறுற்றான்—இந்தப்
பொல்லாங்கை நம்மவர் நன்கறிவார்!

வண்டி இழுப்பவர் உய்ந்திடவே—நல்ல
வண்ணம் ஓங்குது பாங்குறவே
மண்டி எழுகின்ற அழுக்காற்றால்—எங்கள்
மன்னர் கலைஞர் உயர்ந்திடுவார்!

கலைஞர் மலரடி வாழிநன்றே !—எங்கள்
கண்கண்ட தெய்வம் வாழிநன்றே !
அலைகடல் சூழ்ந்த தமிழகத்தை என்றும்
அறிஞர் மனம்போல் ஆண்டுவாழி !



# ஊழ்வினை மாற்றும் உத்தமர் வாழ்க!

புலவர் தமிழ்ப்பித்தன்

பிறப்பினால் வருவ தில்லை
பிரிவுகள் ; அவைதான் மாந்தர்
சிறப்பினால், தொழிலால், செய்யும்
செயல்களால் விளையும் என்றே
பொறுப்பொடு மொழிந்தார் நீதிப்
புலவராம் குறளார் ; யாரும்
மறுத்திட முடியா வண்ணம்
வளம்நிறை பனுவல் தந்தார் !

பன்னெடும் ஆண்டின் முன்னே
பாலகர் தோன்றல் எல்லாம்
தொன்மையே மிக்க நாட்டில்
தோன்றிய வியப்புச் சேதி !
இன்றைய நாளில் நாட்டில்
எங்கணும் காண்ப தென்ன ?
கன்றுகள் தோன்றா வீடு
கற்பனைச் சேதி யாகும் !

நம்மரும் தமிழர் நாட்டில்
நண்ணியே பிறப்பார் கோடி !
தம்மரும் செயலால், பண்பால்
தண்டமிழ் இனத்தைக் காக்கும்
செம்மலர் சிலர்தான் உண்டு !
சிந்தையை, உடலை, மற்றும்
செம்மையாம் செயலை, நாட்டின்
தொண்டினில் சிலரே சேர்ப்பர் !

மனிதராய்ப் பிறப்ப தொன்றே
மதிப்பினில் நிறைந்த தென்னும்
இனியதோர் கருத்துச் செய்யுள்
இயம்பினாள் தமிழ்மூ தாட்டி
மனிதராய்ப் பிறப்ப தோடும்
மனிதராய் வதிந்தா லன்றோ
மனிதரென் றுரைக்கக் கூடும் ?
மனத்தினில் நிலைக்கக் கூடும் ?

தண்டமிழ்ப் புவியை யாளும்
தாய்க்குணக் கலைஞர் எங்கள்
வண்டமிழ் முதல்வர் : தூயர் ;
வாய்த்திடும் பிறந்த நாளைக்
கண்டெனை இனிக்கச் செய்தார்.
கடமையை நினைக்கச் செய்தார் !
மண்டலம் புகழும் வண்ணம்,
மானுடம் தழைக்கச் செய்தார் !

நாற்பதும் அதனோ டெட்டும்,
நண்ணிய' பொழுதில்-தேன்போல்
நாற்கலை வடித்த எங்கள்
நண்ணிய முதல்வர்-பிச்சை
ஏற்றிடும் தொழுநோ யாளர்
இன்னலைக் களைவ தற்கு
மாற்றமே அமைத்தார் : அன்பாய்
மறுவாழ்வு இல்லந் தந்தார் !




நாற்பதோ டொன்பான் ஆண்டில்
நாயகர் செய்த தொண்டு
போற்றுதல் சேர்த்த தொண்டு!
புலன்மகிழ் தொண்டு: பார்வை
ஊற்றெனச் சொல்லும் கண்ணின்
ஒளியினைக் காணா் இன்னல்
ழாற்றிடக் கண்ணுக்(கு): ஆடி
மகிழ்வுடன் ஈந்த தொண்டு!

பொன்விழா ஆண்டில்-நித்தம்
புதுமையே சேர்க்கும் எங்கள்
மன்னவர் தீட்டும் திட்டம்
மானுடம் காக்கும் திட்டம்
சின்னவர், மூத்தோர், மற்றும்
சித்திரப் பெண்டிர் தம்மை
அன்புடன் கைரிக் ஷாவில்
அனுதினம் இழுக்கும் ஏழை,

உய்ந்திடச் செய்வ தற்கே
உதவிடும் திட்ட மாகும்
தொய்ந்திடும் கைரிக் ஷாவால்
தோய்ந்திடும் துன்பம் எல்லாம்
கொய்திட சைக்கிள் ரிக்ஷா
கொடுத்திடும் தூய திட்டம்!
நைந்திடும் ஏழை வாழ்வில்
நன்மையே பாயும் திட்டம்!

வாழ்ந்திடும் வைய மாந்தர்
வாழ்வினில் இன்ப துன்பம்
ஊழ்வினை ஆக்கும் என்னல்
உதவிடாப் பேச்சாம்! அஃதை
ஆள்வினை கொண்ட எங்கள்
ஆரூரர் ஏற்ப தில்லை!
ஊழ்வினை மாற்றும் இந்த
உத்தமர் நீடு வாழ்க!

# இரவுப் பூக்கள்

பெரும்பாலான பூக்கள் பகல் வேளையில்தான் மலர்கின்றன. ஆனால், முல்லை போன்ற சில மலர்கள் இரவில் மொட்டவிழ்கின்றன.

இரவில் மலர்வதற்கு ஏற்பப் பூக்களில் விதவிதமான அமைப்புகள் காணப்படுகின்றன. சில சமயங்களில், ஒரே இனத்தைச் சேர்ந்த பூக்களில் சில பகலிலும், சில இரவிலும் மலர்கின்றன. சான்று மல்லிகை, வில்லி.

இரவில் மலரும் பூக்களில் பெரும் பாலானவை தூய வெண்மை நிறம் கொண்டவை. இத்தகைய மலர்கள் நீண்டு குழல்போலக் காட்சியளிக்கின்றன. இந்த மலர்களின் மகரந்தச் சேர்க்கைக்கு உதவி புரியும் வண்டுகள், அந்துப் பூச்சிகள், கொசு போன்றவையும் நீண்ட தேன் உறிஞ்சும் குழல் கொண்டவை. இரவில் வெண்மையான மலர்களைக் கண்டதும், வண்டுகள் அவற்றை நோக்கி ஆவலுடன் ஓடி வருகின்றன. இரவுப் பூக்கள் இனிய நறுமணத்தைச் சிந்தி, வண்டுகளை 'வா வா' என அழைக்கின்றன. இரவுப் பூக்கள் பல வண்ண நிறங்களில் காட்சியளிக்காமல், நறுமண விருந்து படைப்பதன் காரணம் இப்போது புரிகிறதல்லவா?

சில மலர்கள் மட்டும் இரவில் மலர்வதேன்?

ஏராளமான மலர்கள் பகலில் மலர்வதால், அவற்றோடு போட்டிபோட இயலாமல் சில இனப்பூக்கள் இரவில் மலர்கின்றன என்று சிலர் விளக்கம் சொல்கின்றனர். பரிணாமத்தின் போது, சில பூக்கள் இரவுச் சூழ்நிலைகளுக்கு ஏற்பத் தங்களை மாற்றிக்கொண்டு இரவுப் பூக்களாகி விட்டன. அதே சமயத்தில் சிலவகை வண்டுகள், அந்துப் பூச்சிகள், வெளவால் போன்றவையும் இரவு வாழ்க்கைக்குத் தங்களைத் தயார்ப் படுத்திக் கொண்டன!

உலகில் எல்லாப் பூக்களும் பகல் வேளையிலே மலர்ந்து கொண்டிருந்தால், அவை அனைத்தும் மகரந்தச் சேர்க்கை பெறமுடியாது. அந்த நிலைமை இருந்தால், ஏராளமான தாவர இனங்கள் எப்போதோ அழிந்து போயிருக்கும். தாவரங்களுக்கும் அவற்றின் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் பிராணிகளுக்கும் சமவாழ்வு அளிப்பதற்காகவே இயற்கை யன்னை சில மலர்களைப் பகலிலும், சிலவற்றை இரவிலும் மலர விடுகிறாள்.

பூக்கும் தாவரங்களில் உள்ள ஏதோ ஒரு விந்தையான அமைப்பு, அவற்றின் பூக்கள் எப்போது மலர வேண்டும் என்பதை முடிவுசெய்வதுபோல் தெரிகிறது. மலர்களின் உள்ளுணர்வு, அந்துப்பூச்சிகள், வெளவால், சில பறவைகள், வண்டுகள், கொசு போன்ற இரவுப் பிராணிகளின் நடவடிக்கைகளோடு இசைவாக உள்ளது. இந்த இசைவு இத் தாவரங்களுக்கும் மேற்குறிப்பிட்ட பிராணிகளுக்கும் உதவுகிறது. இந்த இரவு நடவடிக்கைகளால் விவசாயியின் மலர்களுக்கு மகரந்தச் சேர்க்கை கிடைக்கிறது. மகரந்தச் சேர்க்கைக்குத் துணைபுரியும் பிராணிகளுக்குத் தேனும், மகரந்தத் தூளும் உணவாகக் கிடைக்கின்றன.

சில இரவுப் பூக்கள், விடிந்து நெடுநேரமானாலும் மூடாமல் இதழ் விரிந்து காணப்படுகின்றன. இரவில் மகரந்தச் சேர்க்கை நடைபெறாவிட்டால், அல்லது முற்றுப் பெறாவிட்டால், பகல் வேளைகளில் தேனீக்கள் மூலம் மகரந்தச் சேர்க்கை பெறுவதற்காகவே இந்த ஏற்பாடு. இரவில் மலரும் சில பூக்கள் இருட்டில் வெண்மையாக இருந்தாலும், விடிந்தவுடன் இளஞ் சிவப்பு நிறத்தில் மாறிவிடுகின்றன. இரவில் மலரும் சிலவகைப் பூக்களுக்கு உரிய சிறப்பான குணம் இது!

# வீட்டுக்கு ஒரு சப்போட்டா

சப்போட்டாப் பழம் சத்தும், சுவையும் மிகுந்த ஒரு வகைப் பழமாகும். சப்போட்டாப் பழத்தில் கீழ்க்கண்ட அளவில் சத்துக்கள் உள்ளன.

| சத்துக்களின் பெயர். | சதவிகிதம். |
|---|---|
| புரதச் சத்து | 1.09 |
| மொத்தச் சர்க்கரையும் மாவுப் பொருள்களும். | 30.99 |
| சுண்ணாம்புச் சத்து | 1.38 |
| பாஸ்பரஸ் சத்து | 6.56 |

சப்போட்டாப் பழம் உருண்டையாகவோ, முட்டை வடிவிலோ, கூம்பு வடிவிலோ இருக்கும். சப்போட்டாப் பழத்தின் குறுக்களவு ஏறத்தாழ 3 அங்குலம் வரை இருக்கும். சப்போட்டாப் பழத்தின் மேல் தோல், சிவந்த பழுப்பு நிறத்தில் இருக்கும். மேல் தோலின் கீழ் சதைப்பிடிப்பான—மென்மையான, மஞ்சள் கலந்த பழுப்பு நிறப்பகுதி உள்ளது. இப்பழப் பகுதி சற்றேறக் குறையப் பேரிக்காயின் சுவையுள்ளதாக இருப்பதுடன், பூக்களைப்போல் மணம் வீசக் கூடியதாகவும் இருக்கும். சப்போட்டாப் பழத்தின் விதைகள் கறுப்பாக இருக்கும்.

சத்தும் ருசியும் மிகுந்த சப்போட்டாப் பழம் 'சப்போட்டா' (Sapota) என்றும், 'சப்போடில்லா' (Sapodilla) என்றும் கூறப்படும் ஒரு வகை மரத்தில் இருந்து கிடைக்கின்றது. சப்போட்டா மரத்தின் பிறப்பிடம் அமெரிக்க நாட்டில் உள்ள 'மெக்சிகோ' என்று கருதப்படுகிறது. அமெரிக்காவைத் தாயகமாகக் கொண்ட சப்போட்டா தற்பொழுது வெப்ப மண்டல நாடுகளில் எல்லாம் பரவியுள்ளது. இதற்குக் காரணம் சப்போட்டாப் பழத்தின் ருசியே என்றால் மிகையல்ல!

சப்போட்டா மரம் எப்பொழுதும் பசுமையாக இருக்கக் கூடியது! இது 50 முதல் 60 அடி உயரம் வரை வளரக்கூடியது. இம் மரத்தின் இலைகள் நமது நாட்டு இலுப்பை மரத்தின் இலைகளைப் போல் இருக்கும். சப்போட்டா மரத்தின் பட்டையில்-இலுப்பை மரப் பட்டையில் உள்ளதுபோல்-ஆனால், அதிக அளவில் பால் இருக்கும்.

## 'சிக்லெட் மரம்'

சப்போட்டா மரப் பட்டையிலிருந்து பால் எடுத்து, அதிலிருந்து 'சிக்லெட்' என்றும் 'சிக்கிள்' (Chicle) என்றும் கூறப்படும் சுவை மிகுந்த ஜவ்வு மிட்டாய் (Chewing gum) தயாரிக்கப்படுவதால், சப்போட்டா மரம் 'சிக்லெட்' மரம் என்றும் கூறப்படுகிறது.

இன்றைய நிலையில், தமிழ்நாட்டில் ஏறத்தாழ 100 ஏக்கர் அளவில்தான் சப்போட்டா சாகுபடி செய்யப்படுகிறது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. வீட்டுத் தோட்டங்களிலும் சில தனியார் பழத் தோட்டங்களிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாகவே தற்பொழுது சப்போட்டா வளர்க்கப்பட்டுவருகிறது. தனி சப்போட்டாத் தோப்புகள் இன்னும் தமிழ்நாட்டில் ஏற்படவில்லை.

சப்போட்டா வெப்ப மண்டலத்தில் நன்கு வளரக் கூடியதாகையால் தமிழ்நாட்டிற்கு மிகவும் ஏற்றது. கடல் மட்டத்திலிருந்து தமிழ்நாட்டில் 4,000 அடி உயரம்வரை சப்போட்டா நன்கு வளரக்கூடியது. ஆனால் கடல் மட்டத்திலிருந்து 1,500 அடி உயரம் வரையான பகுதிகளில் சப்போட்டா சாகுபடி செய்வதே சிறந்தது. மலைப் பகுதிகளில் கூட சப்போட்டா நன்கு காய்த்துப் பழம்கொடுக்குமெனினும், அப்பழங்கள் நல்ல சுவையாக இருக்காது, எனவே, தமிழ்நாட்டின் சமவெளிப்பகுதிகளில் சப்போட்டா பயிரிடுவதே நல்லது.

சப்போட்டா எல்லா வகையான மண்வகைகளிலும் நன்கு வளரக் கூடியது. ஆனால், ஈரக் கசிவான பகுதிகளுக்கும், களர் நிலங்களுக்கும் ஏற்றதல்ல!

சப்போட்டாச் சாகுபடி மிக மிக எளிதானது. அதிகம் கவனிப்புத் தேவையில்லை. சப்போட்டா மரங்களைப் பூச்சிகளும் நோய்களும் அதிகம் தாக்கிச் சேதம் விளைவிப்பதில்லை. தமிழ்நாட்டின் மண் வளத்திற்கும், தட்பவெப்ப நிலைக்கும் சப்போட்டா மிகவும் ஏற்றது. சப்போட்டா வெகு விரைவாக நன்கு வளர்ந்து பெரும் பலன் கொடுக்கக் கூடியதாக உள்ளது.

சப்போட்டா ஒட்டுக் கன்றுகளை நட்டு வளர்த்தால், நட்ட 4-வது அல்லது 5-வது ஆண்டிலேயே நல்ல மகசூல் கிடைக்கிறது. ஒரு ஏக்கர் சப்போட்டாச் சாகுபடி செய்ய முதல் 5 ஆண்டு வரை ரூபாய் 3,500 செலவு ஆகக் கூடும். இச் செலவைச் சப்போட்டாக்கன்றுகளுக்கு இடையே ஊடு பயிர் செய்வதன் மூலமாகவும், 4-வது, 5-வது ஆண்டுகளில் கிடைக்கும் பழங்களை விற்பனை செய்வதன்மூலமும் ஈடுகட்டி விட முடியும்.

சப்போட்டா நட்ட 6-வது ஆண்டிலிருந்து ஒரு ஏக்கர் சப்போட்டாச் சாகுபடிக்கு ஆண்டு தோறும் ரூபாய் 600 செலவு ஆகும். ஆறாவது ஆண்டிலிருந்து நிகர இலாபமும் கூடிக் கொண்டே வரும். ஆனால் சப்போட்டா நட்ட 10 ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு ஏக்கர் சப்போட்டாத் தோட்டத்திலிருந்து ஆண்டுதோறும் நிலையாக 6,000 ரூபாய்க்குக் குறையாமல் நிகர இலாபம் கிடைக்கக்கூடும்.

எனவே, கீழே குறிப்பிட்டுள்ள சாகுபடிக் குறிப்புகளை மேற்கொண்டு சப்போட்டா பயிரிட்டுப் பயன்பெறுமாறு 'தமிழரசு' இதழின் சார்பில் தமிழ்நாட்டு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

## சப்போட்டா—சாகுபடிக் குறிப்புகள்.

### மண்வளம்

எல்லா வகை மண்ணிலும் சப்போட்டா பயிரிடலாம். ஈரக் கசிவான மண்ணும், தண்ணீர் நன்கு வடியாத மண்ணும், களர் மண்ணும் சப்போட்டாவிற்கு ஏற்றதல்ல. வண்டல் மண்ணும், மணலும் கலந்த நிலம் சப்போட்டாவிற்கு மிகவும் ஏற்றது.

### வகைகள்

சப்போட்டாச் சாகுபடி செய்யக் கீழ்க்கண்ட வகைகளைப் பயன்படுத்தலாம்.

1. கோ. 1. சப்போட்டா
2. 'கிரிக்கெட்' பந்து
3. 'ஓவல்'
4. கௌரய்யா
5. பாதாமி
6. குத்தி
7. கிர்த்தி பர்த்தி

இவைகளில் கோ. 1 சப்போட்டாவே மிகவும் சிறந்தது.

'கிரிக்கெட்' பந்து என்ற வகையின் பழங்கள் மிகவும் பெரியதாக இருக்கும். ஆனால், அதிகம் காய்க்காது. இதன் சுவை 'ஓவல்' வகையின் சுவையை விடக் குறைந்ததே!
'ஓவல்' வகையின் பழங்கள் 'கிரிக்கெட்' பந்து வகையின் பழங்களை விடச் சிறியவை. ஆனால், நிறையக் காய்க்கும். சுவையில் 'ஓவல்' வகை, 'கிரிக்கெட்' பந்து வகையை விடச் சிறந்தது.

'கிரிக்கெட்' பந்து வகையின் பருமனும், 'ஓவல்' வகையின் சுவையும் கொண்ட ஒரு புதிய வகையை உருவாக்கக் 'கிரிக்கெட்' பந்து என்ற வகையும், 'ஓவல்' என்ற வகையும் ஒட்டுச் சேர்க்கப்பட்டன. இம்முயற்சி 1953-ஆம் ஆண்டு முதலே கோவை வேளாண்மைக் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இவ்வாராய்ச்சியின் பயனாய்க் கிடைத்ததே கோ.1 சப்போட்டா.


கோ. 1 சப்போட்டாப் பழங்கள் 'கிரிக்கெட்' பந்து வகையைவிடச் சுவையாகவும், 'ஓவல்' வகையை விடப் பருமனாகவும் உள்ளன. இப்புதிய வகை அதிக மகசூலும் கொடுக்கக் கூடியது. இந்த ரகத்தின் பழங்கள் நடுத்தரப் பருமனாகவும், நீண்ட முட்டை வடிவமுள்ளதாகவும் கவர்ச்சியான செம்பழுப்புநிறச் சதையுடையதாகவும் இருக்கின்றன. எனவே, கோ-1 சப்போட்டா வகையை நடுவதே சிறந்தது.

### இனப்பெருக்கம்

சப்போட்டாவை இனப்பெருக்கம் செய்ய ஒட்டுக் கன்றுகளைப் பயன்படுத்துவதே சிறந்த முறையாகும். சப்போட்டாவின் பழத்தில் உள்ள விதைகளை எடுத்து நட்டுக் கன்று வளர்த்துச் சாகுபடி செய்வது வீண் முயற்சியும், விரும்பத்தகாத விளைவினைத் தரக்கூடியது மாகும். ஒட்டுக் கன்றுகள் தயாரிக்க 'மணில்காரா ஹெக்சாண்டரா' (Manilkara Hexandra) என்னும் பாலசப்போட்டாவிதைகளை நட்டு, கன்றுகள் வளர்க்கப்படுகின்றன. இந்தக் கன்றுகளைத் தனித்தனித் தொட்டிகளில் நட்டு வளர்த்துக் கொண்டு பிறகு, இக் கன்றுகளை வேர்க் கன்றுகளாகப் (Rootstocks) பயன்படுத்தி, நல்ல சுவையான பழங்களையும், நிறைந்த மகசூலையும் கொடுக்கக்கூடிய சிறந்த தாய் சப்போட்டா மரத்தின் (Mother tree) கிளைகளில் ஒட்டுக்கட்டப்படுகிறது. இவ்வாறு ஒட்டுக் கட்டுவதற்கு நெருக்கு ஒட்டு (Inarching) முறை பயன்படுத்தப்படுகிறது. நெருக்கு ஒட்டு முறையே சப்போட்டாவின் இனப்பெருக்கத்திற்கான சிறந்த முறையாகும். ஒட்டு நன்றாக ஒட்டிக்கொண்ட பிறகு வேர்ச் செடியின் நுனிப்பாகமும், தாய் மரக்கிளையின் அடிப்பாகமும் முறைப்படி துண்டிக்கப்பட்டு ஒட்டுக் கன்று தனியே எடுக்கப்படுகிறது. இவ்வாறு எடுக்கப்பட்ட ஒட்டுக் கன்றுகள் நிழற்பாங்கான இடத்தில் வைத்து ஓராண்டுக் காலம் வரை பாதுகாக்கப்படுகிறது.

ஓராண்டுக்காலம் வயதுடைய ஒட்டுக் கன்றுகளை நடுவதே சிறந்தது.

சில தனிப்பட்ட வியாபாரிகள் இலுப்பைக் கன்றுகளை வேர்க் கன்றுகளாகப் பயன்படுத்தி அதன் மேல் தரங்குறைந்த சப்போட்டா மரங்களின் கிளைகளை ஒட்டுக் கட்டி விற்பனை செய்து விடுகிறார்கள். ஒட்டுக் கட்டுவதும் சரியான முறையில் கட்டப்படாததால் கன்றுகளை நட்டபிறகு, ஒட்டுக் கட்டிய பாகத்தில் முறிந்து விடுகிறது. அதனால் அடிப்பகுதி மட்டுமே வளரும். அதனால் சப்போட்டா மரத்திற்குப் பதில் இலுப்பை மரமே வளரும். எனவே சப்போட்டா ஒட்டுக் கன்றுகளை வாங்க விரும்புகிறவர்கள், அரசினர் மாதிரிப் பழப்பண்ணை நாற்றங்கால்களிலிருந்தோ, தனியார் நாற்றங்காலிலிருந்தோ, வேளாண்மைப் பல்கலைக் கழகப் பண்ணையிலிருந்தோ வாங்குவதே நல்லது.



### குழி தோண்டுதல்

சப்போட்டா ஒட்டுக் கன்றுகளை நடுவதற்கு ஒவ்வொரு குழியும் 3 அடி நீளமும், 3 அடி அகலமும், 3 அடி ஆழமும் இருக்குமாறு தோண்டவேண்டும்.

வளமற்ற மண்ணில், மானாவாரியாகச் சப்போட்டா பயிரிடுவதென்றால், ஒவ்வொரு குழிக்கும் இடையில் 20 முதல் 25 அடி இடைவெளி விட்டுக் குழிகளைத் தோண்ட வேண்டும்.

வளம் மிகுந்த மண்ணில் தண்ணீர் பாய்ச்சி, சப்போட்டா சாகுபடி செய்ய ஒவ்வொரு குழிக்கும் இடையில் 30 அடி முதல் 40 அடி இடைவெளி விட்டுக் குழிகளைத் தோண்டுதல் அவசியமாகும்.

குழி தோண்ட சூன் (வைகாசி-ஆனி) மாதம் ஏற்றதாகும். தோண்டிய குழிகளை ஒரு மாத காலம் வரை ஆறப் போட வேண்டும்.

ஒவ்வொரு குழிக்கும் இடையில் 20 அடி இடைவெளி விட்டால், ஒரு ஏக்கரில் 108 குழிகள் தோண்ட வேண்டும்; 25 அடி இடைவெளி விட்டால் ஒரு ஏக்கரில் 68 குழிகள் தோண்ட வேண்டும்; 30 அடி இடைவெளி விட்டால் ஒரு ஏக்கரில் 48 குழிகள் வெட்ட வேண்டும்; 40 அடி இடைவெளி விட்டால் ஒரு ஏக்கரில் 27 குழிகள் தோண்ட வேண்டும்.

### துவரை தரும் இலாபம்

எஸ்.எ-1 துவரையை சூன், சூலை மாதங்களில் பயிரிடலாம். இதன் வயது 180 நாட்கள். இதனைத் தனிப் பயிராகச் சாகுபடி செய்ய ஏக்கருக்கு 4 கிலோ விதை தேவை. நிலக் கடலையுடன் கலப்புப் பயிராகச் சாகுபடி செய்ய ஏக்கருக்கு 1 கிலோ விதை போதும். 3 ரூபாய் செலவிட்டு, 1 ஏக்கரில் நிலக்கடலையுடன் துவரையைக் கலப்புப் பயிராகப் பயிரிட்டு ரூ. 300 வருவாய் பெறலாம். பருவ மழைக் குறைவால் நிலக்கடலை மகசூல் குறைந்தாலும் துவரை மூலம் வருவாய் பெற முடியும்.

### நடுவதற்கு ஏற்ற பட்டம்

சப்போட்டா ஒட்டுக் கன்றுகளை சூலை, ஆகஸ்ட் மாதங்களில் நடுவதே சிறந்தது.

### நடும் முறை

ஒருமாத காலம்வரை ஆறிய குழிகளில் மண்ணும், மணலும், மக்கிய தொழு எருவும் கலந்து போட்டு நிரப்ப வேண்டும். பிறகு குழிகளில் ஓரிரு முறை சதும்பத் தண்ணீர் விட வேண்டும். இதனால் குழிகளில் மண் நன்கு படியும். அதன் பின் குழிகளின் நடுவில் மண்ணைத் தோண்டி அதில் ஒட்டுக் கன்றுகளை நட வேண்டும். சப்போட்டா ஒட்டுக் கன்றின் வேரும் மண்ணும் கலந்த மண் உருண்டை (Ball of earth) உடையாமல், இலேசாக ஒட்டுக்கன்று இருக்கும் தொட்டியை அகற்றி விட்டு, அப்படியே ஒட்டுக் கன்றை எடுத்துக் குழியில் நட வேண்டும்.

• நடும்பொழுது ஒட்டுக் கட்டிய பாகம் தரை மட்டத்திற்கு மேல் 9 அங்குல உயரத்தில் இருக்குமாறு — அதாவது தொட்டியில் இருந்த நிலையிலேயே — நட வேண்டும். ஒட்டுக் கன்றை நட்ட பிறகு கன்றைச் சுற்றிலும் நன்கு மண்ணை அழுத்திவிட்டுக், கன்று சாய்ந்து விடாமல் நிற்கச் செய்து தண்ணீர் விடவேண்டும்.

ஒட்டுக் கன்றுகளை நட்ட பிறகு, ஒவ்வொரு கன்றின் இரு பக்கத்திலும் அரை அடி தொலைவில் 2 மூங்கில் குச்சிகளை நட வேண்டும். இவ்விரு குச்சிகளையும் பயன்படுத்தி, ஒட்டுக் கன்றின் ஒட்டுப் போட்ட பாகத்தின் மேலும் கீழும் 'எட்டு' வடிவில் சணலால் முடிச்சுப் போட வேண்டும். இவ்வாறு செய்வதால் ஒட்டுக் கன்றுகள் காற்றினால், சேதமடையாதிருப்பதுடன், நேராக வளர்கின்றன.

### பின் செய் நேர்த்தி

சப்போட்டாக் கன்று நன்கு வேரூன்றிய பிறகு, ஒட்டுக் கட்டிய பாகத்தின் மேல், இரு பக்கங்களிலும் கத்தியினால் இலேசாகக் கீறிவிட வேண்டும். இதனால் ஒட்டுக்கட்டிய பாகத்தின்மேல் உள்ள கட்டுகள் (வாழை நார் அல்லது சணலால் போடப்பட்டவை) வெட்டுப்பட்டு, கன்று வளர வளர நாளடைவில் கீழே விழுந்து விடும். இவ்வாறு செய்யாவிட்டால், கன்று வளர வளர, ஒட்டுக் கட்டிய பாகத்தில் இறுக்கம் ஏற்பட்டு கோடு கோடாகத் தடிப்பு ஏற்பட்டுக் கன்றின் வளர்ச்சி குன்றி, ஒடிந்துவிடக் கூடும்.

வேர்க் கன்றில் துளிர்கள் தோன்றினால் அவைகளை உடனுக்குடன் கிள்ளி எறிந்துவிட வேண்டும். இல்லா விட்டால் வேர்க் கன்றிலிருந்து கிளைகள் தோன்றி ஒட்டுக் கன்றின்மேற் பகுதியின் வளர்ச்சி தடைபட்டு விடும். (வேர்க்கன்றுப் பகுதியில் இருந்து தோன்றிய கிளைகள் சப்போட்டாவாக இரா! அத்துடன் அவைகளில் சப்போட்டாக் காய்களும், காய்க்கா!).

சப்போட்டாக் கன்றுகள் வளர்ந்து, மரமாகிக் காய்க்கும் வரை, காய்கறிப் பயிர்களை ஊடு பயிராகச் சாகுபடி செய்ய வேண்டும். சப்போட்டா மரங்கள் காய்க்கத் தொடங்கிய பிறகு காய்கறிப் பயிர்களை ஊடு பயிராகச் சாகுபடி செய்வது நல்லதல்ல!

காய்ப்புக்கு வந்த பிறகு, மே, சூன் மாதங்களில் அல்லது தென் மேற்குப் பருவ மழைக்குப் பிறகு ஓரிரு முறை சப்போட்டா தோப்பை உழுது விட்டு சணப்பு, பில்லிபசரா போன்ற பசுந்தாளுரப் பயிர்களை விதைக்க வேண்டும். அப்பசுந்தாளுரப் பயிர்கள் நன்கு வளர்ந்த பின்—ஆனால் பூப்பதற்கு முன்பு—அவைகளை அப்படியே சப்போட்டாத் தோப்பில் மடக்கி உழுது விடுதல் வேண்டும். இதனால் சப்போட்டாத் தோப்பின் மண் வளம் பெருகும்.

### பாசனம்

சப்போட்டாக் கன்றுகள் நட்டு இரண்டு ஆண்டுகள் வரை, வாரம் ஒருமுறை வீதம் தண்ணீர் விடவேண்டும். தண்ணீர் பாய்ச்சா பிறகு தண்ணீர் பரவாயில்லை! விட்டாலும் பரவாயில்லை! ஆனால் சப்போட்டாவில் பெரும் மகசூல் பெற வேண்டுமானால், கோடைப்பருவத்திலும், வறட்சி நிலவும் இதர காலத்திலும் சப்போட்டா மரங்களின் தேவைக் கேற்பத் தண்ணீர்

பாய்ச்சுதல் மிகமிக அவசிய மாகும்.

### உரமிடுதல்

சப்போட்டாக் கன்று நட்ட ஓராண்டுக் காலத்திற்குப் பிறகு கீழ்க்கண்டவாறு உரமிட வேண்டும்.

| | |
|---|---|
| மக்கிய தொழுஎரு. | 25 கிலோ |
| ஆமணக்குப் பிண்ணுக்கு | 3 ,, |
| எலும்புத்தூள் | 1 ,, |

பின்பு ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாகக் கீழ்க்கண்ட அளவு உரங்களை இட்டுவரவேண்டும்.

| உரத்தின் பெயர். | அளவு (கிலோ). |
|---|---|
| மக்கிய தொழுஎரு. | 5 |
| ஆமணக்குப் பிண்ணுக்கு | 1 |
| எலும்புத்தூள் | ½ |

காய்க்கத் தொடங்கிய சப்போட்டா மரம் ஒவ்வொன்றுக்கும்—அதாவது 5 ஆண்டு வயதிற்கு மேற்பட்ட மரங்களுக்கு—ஆண்டு தோறும் கீழ்க்கண்ட அளவில் உரமிட வேண்டும்.

| | |
|---|---|
| மக்கிய தொழு எரு. | 50 கிலோ |
| ஆமணக்குப் பிண்ணுக்கு. | 8 கிலோ |
| எலும்புத்தூள். | 2 கிலோ |

நன்கு காய்த்துப் பலனளித்துக் கொண்டிருக்கும் சப்போட்டா மரம் ஒவ்வொன்றுக்கும் ஆண்டு தோறும் கீழ்க்கண்ட அளவில் உரமிடுதல் நல்லது.

| | |
|---|---|
| மக்கிய தொழுஎரு | 100 கிலோ |
| அமோனியம் சல்பேட். | 5 கிலோ |
| சூப்பர் பாஸ்பேட். | 6 கிலோ |
| மியூரியேட் ஆப் பொட்டாஷ். | 2 கிலோ |


மேற்கூறப்பட்ட உரங்களில் பாதியை சூலை மாதத்திலும், மீதிப் பாதியை நவம்பர் மாதத்திலும் இடவேண்டும்.

சப்போட்டா மரங்களைச் சுற்றிக் கிளைகள் படர்ந்துள்ள இடம் வரை வட்டவடிவமாக மேல் மண்ணை இலேசாக அகற்றிவிட்டு, அதில் உரங்களைத் தூவி விட்டு, மண்ணால் மூடித் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

### பயிர்ப் பாதுகாப்பு

பொதுவாக சப்போட்டாவைப் பூச்சிகளும், நோய்களும் அதிகம் தாக்குவதில்லை. ஆனால், நவம்பர், டிசம்பர் மாதங்களில் சப்போட்டாவின் இலைகளிலும், இளந் தண்டுகளிலும் 'சூட்டி மௌல்டு (Sooty Mould) என்னும் இலைக்கருகல் நோய் தோன்றக் கூடும். இந்த நோய் தோன்றினால், கரும் புகை படிந்தது போல் காணப்படும். இதைத் தடுக்க மீன் எண்ணெய், சோப்பு ஆகியவைகளைக் கலந்து தெளிக்க வேண்டும்.

சப்போட்டா இலைகளை இலைப் புள்ளி நோயும் தாக்கக்கூடும்.




இந்நோயைத் தடுக்க போர்டோ கலவையை அல்லது ஏதேனும் ஒரு தாமிரப்பூசணக் கொல்லியைத் தெளிக்கலாம்.

### அறுவடை

ஒட்டுச் சப்போட்டாக் கன்றுகளிலிருந்து வளர்ந்த சப்போட்டா மரங்கள் நட்ட 4-வது ஆண்டிலேயே நன்கு காய்க்கின்றன. பொதுவாகச் சப்போட்டா மரம் ஆண்டு முழுவதும் பழங்களைத் தரக் கூடியது. ஆனால், பிப்ரவரி முதல் சூன் வரையான காலத்தில் முக்கிய மகசூலும், செப்டம்பர் முதல் அக்டோபர் வரையால காலத்தில் இரண்டாவது மகசூலும் அறுவடையாகின்றன.

ஒவ்வொரு சப்போட்டா மரமும், ஆண்டு தோறும் 400 முதல் 500 பவுண்டு எடையுள்ள பழங்களைக் கொடுக்கும். 'கிரிக்கெட் பந்து' என்ற வகை மரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஆண்டும் 500 பழங்களுக்குக் குறையாமல் கொடுக்கும். ஆனால், 'ஓவல்' வகை மரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் ஆண்டும் 1,000 முதல் 2,000 பழங்கள் கொடுக்க வல்லவை.

கோ-1 சப்போட்டா மரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஆண்டும் 1,500 முதல் 2,000 பழங்கள் வரை கொடுக்கும் திறன் வாய்ந்தவை.

சப்போட்டாக் காய்கள் மரத்திலேயே பழுப்பதில்லை. நன்கு முதிர்ந்த காய்களைப் பறித்து வைத்திருந்தால், சில நாட்களில் நன்கு பழுத்துவிடும். புகை ஊதியும் விரைவில் பழுக்க வைக்கலாம்.

சப்போட்டாக் காய்கள் முற்றி விட்டனவா என்று தெரிந்து கொண்டு அறுவடை செய்ய வேண்டும். அவ்வாறு தெரிந்து கொள்ளக் கீழ்க்கண்ட 3 அறிகுறிகள் பயன்படும்.

1. சப்போட்டாக் காய்கள் நன்கு முற்றியிருந்தால், காயின் மேல் தோலைச் சற்று நகத்தால் கீறினால், உள்ளுக்குள் இருக்கும் பழப் பகுதியின் தோற்றம் பசுமையாக இல்லாமல் பழுப்பு நிறத்துடன் காணப்படும்.

2. சப்போட்டாக் காய்கள் நன்கு முற்றி இருக்குமானால் காய்களை மரத்திலிருந்து பறிக்கும் பொழுது, பால் வடியாது.

3. சப்போட்டாக் காய்கள் முற்றி விட்டால் காயின் மேலுள்ள செதில்கள் மறைந்து போகும்.

### வேண்டுகோள்

குறைந்த செலவில், மிகுந்த சிரமமின்றிச் சப்போட்டாவைப் பயிரிட்டுச் சத்தும், சுவையும் உள்ள சப்போட்டாப் பழங்களைப் பெறுவதுடன் 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஏக்கருக்கு 6,000 ரூபாய்க்குக் குறையாமல் நிகர இலாபம் எடுக்க முடியுமாதலால், சப்போட்டா பயிரிட்டு மிகுபயன் பெறுமாறு தமிழ் நாட்டு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

—ஆர். எம்.

# டென்னிஸ் விளையாட்டும் டேவிஸ் கோப்பையும்






இன்று உலகமெங்கும் புகழ் பெற்று விளங்கும் 'டென்னிஸ்' விளையாட்டு, பண்டைய கிரேக்க நாட்டில் விளையாடப் பெற்ற ஒரு வகைக் கைப்பந்து விளையாட்டிலிருந்து உருவானதே என்று வரலாறு கூறுகிறது. தற்பொழுது வழக்கத்திலுள்ள 'டென்னிஸ்' விளையாட்டைப் போன்ற ஒருவகை விளையாட்டு, கி.பி. 1400-ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டில் தோன்றி வளர்ந்ததாகவும் தெரிய வருகிறது.

ஆனால், டென்னிஸ் விளையாட்டின் வளர்ச்சிக்கு இந்தியாவே மூலகாரணமாக உள்ளது என்பது பலருக்குத் தெரியாது. இந்தியாவில் தோன்றிப் புகழுடன் விளங்கிவரும் பூப்பந்தாட்டமே 'டென்னிஸ்' விளையாட்டின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளது என்றால் மிகையல்ல, பூப்பந்தாட்டம் சங்க இலக்கியக் காலத்திலேயே தமிழ்நாட்டில் விளையாடப் பெற்றுள்ளது என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. அந்தப் பூப்பந்தாட்டமே பல்வேறு வளர்ச்சி பெற்று 'பேட்மிட்டன்' என்ற நிலையை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அடைந்தது! இந்தியாவில் பிறந்த பூப்பந்தாட்டமே, ஆங்கிலேய இராணுவ அலுவலர்கள் மூலம் இங்கிலாந்து சென்று, அங்கும் பரவிப் புகழ்பெற்றது. பூப்பந்தாட்டத்தின் விதிமுறைகளே 'டென்னிஸ்' ஆட்டத்திலும் புகுத்தப்பட்டுள்ளன.


துவக்கக் காலத்தில் டென்னிஸ் விளையாட்டில் மட்டைக்குப் பதிலாகக் கையையே பயன்படுத்தியும், பந்திற்குப் பதிலாகத் துணிகளைச் சுருட்டித் தைத்துப் பந்தாகப் பயன்படுத்தியும் விளையாடியுள்ளனர். பிறகு ஒரு காலத்தில், வயலில்உள்ள வரப்புப் போன்ற கரையைப் பயன்படுத்திப் பந்தை அடித்து விளையாடும் ஆட்டமாகவும் டென்னிஸ் இருந்துள்ளது. காலப் போக்கில் கரைக்குப் பதிலாகக் கயிற்றினால் செய்யப்பட்ட வலை டென்னிஸ் ஆட்டத்தில் புகுத்தப்பட்டது.

பந்தை அடிக்க 'ராக்கெட்' என்னும் டென்னிஸ் மட்டை கண்டு பிடிக்கப்பட்ட பிறகே டென்னிஸ் விளையாட்டு புகழ் பெறத் தொடங்கியது. அதன் பிறகே, வெளியிடங்களில் விளையாடப்பெற்ற 'டென்னிஸ்', வீட்டில் விளையாடும் விளையாட்டாகவும் வளர்ச்சி பெற்றது!

தற்பொழுது 'லான் டென்னிஸ்' (Lawn Tennis) என்று கூறப்படும் விளையாட்டைக் கண்டு பிடித்த பெருமை, பிரிட்டனைச் சார்ந்த மேஜர் வால்டர் சி. விங்பீல்டு அவர்களையே சாரும்! அவர் 'டென்னிஸ் விளையாட்டின் தந்தை' என்று கூறப்படுகிறார்! அவர் 1873-ஆம் ஆண்டில், நடுவிலே வலையைக் கட்டிக் கொண்டு இரண்டு பக்கமும் நின்றுகொண்டு மாறி மாறி அடிக்கின்ற 'லான் டென்னிஸ்' விளையாட்டைத் தோற்றுவித்தார். அந்த விளையாட்டை 1873-ம் ஆண்டில் 'கிறிஸ்துமஸ்' விழாவன்று தன் நண்பர்களுக்கு ஆடிக்காட்டினார். அவருடைய நண்பர்கள் அந்த விளையாட்டைப் பார்த்து வியந்து பாராட்டினர்! ஆனால் அந்த விளையாட்டிற்கு அப்பொழுது இடப்பெற்றிருந்த 'ஸ்பெய்ரிஸ்டைக்' என்ற பெயர் கிரேக்கச் சொல் என்பதால் அப்பெயரை ஏற்க மறுத்தனர், அவருடைய நண்பர்கள்! அவ்விளையாட்டிற்கே பிற்காலத்தில் 'டென்னிஸ்' என்ற பெயர் சூட்டப் பெற்றுள்ளது!

இவ்வாறு தோன்றிய டென்னிஸ் குறுகிய காலத்திலேயே பிரிட்டனில் பெரும்புகழ் பெற்றது. ஆண்களுடன்; பெண்களும் இவ் விளையாட்டில் கலந்து கொண்டு ஆடி மகிழ்ந்தனர். குறிப்பாகப் பணக்காரர் வீடுகளில் 'டென்னிஸ்' விளையாட்டு பிரபலமாக விளங்கியது. 'டென்னிஸ்' விளையாட்டுத் தோன்றியதால் முன்பிருந்த பல விளையாட்டுக்கள் மறைந்தன!

அடுத்த ஆண்டிலேயே 'டென்னிஸ்' விளையாட்டு ஒரு பெண்ணின் மூலம் அமெரிக்காவில் அறிமுகமாகியது; அப்பெண்ணின் பெயர் 'செல்வி அவுட்டர் பிரிட்ஜ்' என்பதாகும். நியூயார்க் நகரைச் சார்ந்த அப்பெண் தனது விடுமுறையை கழிக்க இங்கிலாந்து நாட்டுக்கு வந்த பொழுது, டென்னிஸ் விளையாட்டில் மனத்தைப் பறிகொடுத்து, குறுகிய காலத்திலேயே அவ்விளையாட்டைக் கற்றுக் கொண்டு ஸ்பெய்ரிஸ்டைக் என்ற அவ் விளையாட்டிற்குரிய வலை, மட்டை, பந்து, அணிகள் ஆகியவற்றுடன் அமெரிக்காவிற்குத் திரும்பினார். அப்பெண் கொண்டுவந்த விளையாட்டுப் பொருள்களை என்னவோ ஏதோவென்று எண்ணிய அமெரிக்கச் சுங்க அலுவலர்கள் அவைகளை எடுத்துச் செல்ல அனுமதி அளிக்கவில்லை. விளையாட்டுப் பொருள்களே அவைகள் என்று அப்பெண் எடுத்துக் கூறியும், ஒரு வார காலம் கழித்தே, அப்பொருள்களை எடுத்துச் செல்ல அப்பெண்ணிற்கு அனுமதி கிடைத்ததாகக் கூறப்படுகிறது. அப்பெண்ணினால் 1874-ஆம் ஆண்டில் அமெரிக்காவில் அறிமுகமாகிய டென்னிஸ், குறுகிய காலத்திலேயே அமெரிக்காவிலும் புகழ்பெறத் துவங்கியது.




முதல் டென்னிஸ் விளையாட்டுப் போட்டி 1877-ஆம் ஆண்டில் இங்கிலாந்திலுள்ள ''விம்பிள்டன்'' ( wimbledon ) என்ற இடத்தில் நடைபெற்றது. 1881-ஆம் ஆண்டில் அமெரிக்க டென்னிஸ் விளையாட்டு வீரர்கள் ஐக்கிய நாடுகள் லான் டென்னிஸ் குழுவை அமைத்து, முதல் அமெரிக்க நாட்டு ''டென்னிஸ்'' போட்டியை, 'நியூபோர்ட்' என்ற இடத்தில் நடத்தினர்.

மேஜர் வால்டர் சி. விங்பீல்டு அவர்களால்தோற்றுவிக்கப்பட்ட 'லான் டென்னிஸ்' இங்கிலாந்தில் வெகு விரைவாகப் பரவி வந்தாலும், அவரால் கூறப்பட்ட விதி முறைகள் முழு அளவில் கடைபிடிக்கப் படாமல் ஊருக்கு ஒருவிதமாக அமைந்திருந்தது. திட்டவட்டமான விதிமுறைகளை வகுத்து, இந்த ஆட்டத்தைச்



செம்மைப் படுத்தியது 'மேர்லி போன்' சங்கமேயாகும்.

இன்று உலகில் நாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் 'டென்னிஸ்' சங்கங்கள் உள்ளன. இச் சங்கங்களின் பிரதிநிதிகள் அடங்கிய, 'அனைத்துலக லான் டென்னிஸ் பேரவையே (International Lawn Tennis Association), 'டென்னிஸ்' ஆட்டத்தின் விதிமுறைகளை வகுப்பது, டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது போன்ற பொறுப்புகளை ஏற்று வருகிறது. அனைத்துலக லான் டென்னிஸ் பேரவையின் தலைமை நிலையம் பாரிஸ் நகரில் அமைந்துள்ளது. ஐக்கிய நாடுகள் லான் டென்னிஸ் சங்கம் நியூயார்க் நகரில் உள்ளது.

### 'விம்பிள்டன்' போட்டி


'டென்னிஸ்' விளையாட்டுப் போட்டிகளில் பிரிட்டன் நாட்டு 'டென்னிஸ்' விளையாட்டுப் போட்டியே உலகில் மிகவும் புகழ் பெற்ற 'டென்னிஸ்' போட்டியாகும். இதையே 'விம்பிள்டன்' விளையாட்டுப் போட்டி என்று கூறப்படுகிறது. விம்பிள்டன் விளையாட்டுப் போட்டியில் ஆண்கள் ஒற்றையர், இரட்டையர் டென்னிஸ் போட்டியும், பெண்கள் ஒற்றையர், இரட்டையர் போட்டியும், ஆண்களும் பெண்களும் கலந்து விளையாடும் இரட்டையர்போட்டியும் நடைபெறுகிறது.

### 'டேவிஸ்' கோப்பைப் போட்டி

'டேவிஸ்' கோப்பைப் (Davis Cup) போட்டி என்பது ஆண்டு தோறும் நடைபெற்று வரும் அனைத்துலக ஆண்கள் 'டென்னிஸ்' போட்டியாகும். இப்போட்டியில் கலந்து கொள்ளும் நாட்டின் 'டென்னிஸ்' குழுவில் 5 டென்னிஸ் விளையாட்டு வீரர்கள் இருப்பர். 'டேவிஸ்' கோப்பைப் போட்டியின் இறுதிப் போட்டி முந்திய ஆண்டுப் போட்டியில் வெற்றி பெற்ற நாட்டில் நடைபெற்று வருகிறது.

'டேவிஸ்' கோப்பை என்பது ஒவ்வோர் ஆண்டும் நடைபெற்று வரும் அனைத்துலக ஆண்கள் 'டென்னிஸ்' போட்டியில் வெற்றி பெறும் நாட்டிற்கு வழங்கப்படும் வெற்றிச் சின்னமாகும். இக்கோப்பை வெள்ளியால் செய்யப்பட்டதாகும்.

அமெரிக்க அரசியல் ஞானியாகவும், டென்னிஸ் விளையாட்டில் பேரார்வம் கொண்டவராகவும் விளங்கிய 'ட்வைட் பில்லி டேவிஸ்' (Dwight Filley Davis —1879—1945) என்பவர் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த டென்னிஸ் விளையாட்டு வீரர்களிடையே, வெற்றி பெற வேண்டும் என்ற விரும்பத்தக்க போட்டி மனப்பான்மையை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக, அனைத்துலக 'டென்னிஸ்போட்டி ஒன்று நடத்துவதற்கு கி.பி. 1900-ஆண்டில் நன்கொடையாக ஒரு கோப்பையை வழங்கினார். அந்தக் கோப்பையே 'டேவிஸ்' கோப்பை எனப்படுகிறது. '' டேவிஸ் '' கோப்பை 'டென்னிஸ்' போட்டி அதே ஆண்டில் தொடங்கியது. அந்தக் கோப்பையை வழங்கிய பொழுதுஅவர் பிற்காலத்தில் அக்கோப்பையைப் பெறுவதற்கான போட்டியில் ஏறத்தாழ எல்லா நாடுகளும் போட்டியிடக் கூடும் என்றோ அல்லது 'டென்னிஸ்' வரலாற்றில் தன்பெயர் நிலையான இடம் பெறும் என்றோ கொஞ்சமும் நினைத்துப் பார்க்கவில்லை ! ஆனால் இன்றோ'டேவிஸ்' கோப்பையைப் பெறுவதற்கு எல்லா நாடுகளும் போட்டி போடுகின்றன ! 'டென்னிஸ்' வரலாற்றில் 'டேவிஸ்' அவர்களின் பெயர் நிலையான இடத்தைப் பெற்று விட்டது !




தற்பொழுது டேவிஸ் கோப்பைப் போட்டியில் பல நாடுகள் கலந்து கொள்கின்றன ; பல தொடர் போட்டிகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு தொடர் போட்டியிலும் இரண்டு நாடுகள் போட்டியிடுகின்றன இரண்டு நாடுகளுக்கு இடையில் நடைபெறும் ஒவ்வொரு போட்டியிலும் 4 ஒற்றையர் ஆட்டமும், ஒரு இரட்டையர் ஆட்டமும் இடம் பெறுகிறது.

போட்டியாளர் இல்லாததனால் 1901, 1910 ஆகிய இரு ஆண்டுகளிலும், முதல் உலகப் போரின் காரணமாக 1915 முதல் 1918 வரையான ஆண்டுகளிலும், இரண்டாவது உலகப் போரின் காரணமாக 1940 முதல் 1945 வரையான ஆண்டுகளிலும் தவிர, மற்றெல்லா ஆண்டுகளிலும் தொடர்ந்து 'டேவிஸ்' கோப்பை 'டென்னிஸ்' போட்டி நடைபெற்று வந்துள்ளது.

'டேவிஸ்'கோப்பைப் பந்தயத்தில் முதல் மூன்று ஆண்டுகளில் அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், ஆகிய 2 நாடுகள் மட்டுமே கலந்து கொண்டன. 1904-ஆம் ஆண்டில் அப்போட்டியில் பெல்ஜியம் நாடு கலந்து கொண்டது. அதன் பிறகு அப்போட்டியில் பல நாடுகளும் பங்கு கொள்ள முன் வந்தன. 1905-ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியா நாடும் பங்கு கொண்டது. 1913-ஆம் ஆண்டில் 7 நாடுகள் அப்போட்டியில் கலந்து கொண்டன. 1921-ஆம் ஆண்டில் மேலும் பல நாடுகள் புதிதாக அப்போட்டியில் பங்கு கொண்டு தங்கள் வலிமையைக் காட்ட முன் வந்தன. அவைகளில் இந்தியாவும், ஜப்பானும் குறிப்பிடத் தக்கவையாகும்.

மேலும் பல நாடுகள் டேவிஸ் கோப்பைப் போட்டியில் பங்கு கொள்ள முன் வந்ததால், 1923-ஆம் ஆண்டில் அப்போட்டியை அமெரிக்க மண்டல நாடுகளுக்கான போட்டி, ஐரோப்பிய மண்டல நாடுகளுக்கான போட்டி என இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டது. 1931-ஆம் ஆண்டில் டேவிஸ் கோப்பைப் போட்டியில் மேலும் ஒரு முன்னேற்றம்ஏற்பட்டது. அந்த ஆண்டில் அமெரிக்க மண்டல நாடுகளுக்கான போட்டி தெற்கு, வடக்கு என மேலும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. 1933-ஆம் ஆண்டில் அப்போட்டி உச்சக் கட்டத்தை அடைந்தது. அந்த ஆண்டில் அப் போட்டியில் 33 நாடுகள் கலந்து கொண்டன.



1934-ஆம் ஆண்டில் அப்போட்டியில் மேலும் ஒருசோதனை நடத்திப் பார்க்கப்பட்டது. ஐரோப்பிய மண்டல நாடுகளிலிருந்து ஏராளமான விளையாட்டு வீரர்கள் 'டேவிஸ்' கோப்பைக்கான போட்டியில்

பங்கு கொள்ள முன் வந்ததால், 'டேவிஸ்' கோப்பைப் போட்டிக்கான தகுந்த விளையாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுக்கும் முகத்தான்—விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக—ஆரம்பநிலைப் போட்டி ஒன்று நடத்தப்பட்டது. ஆனால் இம்முறை 1936-ல் கைவிடப்பட்டது.

இரண்டாவது உலகப் போர் முடிந்த பிறகு மீண்டும் தொடங்கப் பெற்ற 'டேவிஸ்' கோப்பைப் போட்டி மேலும் ஒரு புதுமையைக் கண்டது! அமெரிக்க மண்டல நாடுகளுக்கான போட்டியில் 'பசிபிக்' நாடுகளுக்கான பிரிவு புகுத்தப்பட்டது. ஆனால் 'பசிபிக்' பிரிவில் நியூசிலாந்து என்ற ஒரே ஒரு நாடு மட்டுமே கலந்து கொண்டது. அதுவும், அமெரிக்க, பசிபிக் மண்டல நாடுகளுக்கிடையே நடை பெற்ற போட்டியில் வெற்றி பெறும் தகுதியை இழந்து விட்டது.



எந்த அணி எந்த அணியுடன் விளையாடுவது என்பதை முடிவு செய்வதற்கான குலுக்குச் சீட்டை 3-5-73-ல் இராஜாஜி மண்டபத்தில் முதல்வர் கலைஞர் அவர்கள் எடுக்கிறார்கள்.

இதுவரை நடைபெற்றுள்ள டேவிஸ்கோப்பைப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களில் மிகவும் குறிப்பிடத் தகுந்தவர்கள் டைடென், லாகோஷ்ட், காக்செட், ப்ருக்னன், ஜான் பரோட்டரா, ப்ரெட் பெரி, ஹென்ரி ஆஸ்டின், டோனல்ட் பட்ஜ், பட்ஜ பாட்டே, லியூ கூட், ராட் லேவர், ஜான் நியூகோம் ஆகியோர்களாவர்.

இதுவரை நடைபெற்றுள்ள 'டேவிஸ்' கோப்பைப் பந்தயங்களிலிருந்து பின்கண்ட உண்மைகள் புலப்படுகின்றன.

'டேவிஸ்' கோப்பைப் போட்டியில் அமெரிக்கா முதலிரண்டு ஆண்டுகளில் வெற்றி பெற்று டேவிஸ் கோப்பையைப்பெற்றது. அதன் பின் பிரிட்டன் வெற்றி பெற்றுத் தொடர்ந்து டேவிஸ் கோப்பையை நான்காண்டுக் காலம் வைத்திருந்தது. பிறகு ஆஸ்திரேலியா 'டேவிஸ்' கோப்பையைத் தன்னுடையதாக்கிக் கொண்டது. 1907 முதல் 1911-ஆம் ஆண்டு வரை ஆஸ்திரேலியாவிடம் இருந்த 'டேவிஸ்' கோப்பையை 1912-ஆம் ஆண்டில் பிரிட்டனும், 1913-ஆம் ஆண்டில் அமெரிக்காவும் பெற்றன. 1914 முதல் 1919 வரை ஆஸ்திரேலியர்களே 'டேவிஸ்' கோப்பையின் சொந்தக்காரர்களாக விளங்கினார்கள். பிறகு 'டேவிஸ்' கோப்பையை அமெரிக்கா ஏழாண்டுக் காலம் வைத்திருந்தது.

அதன்பின் பிரான்சு நாட்டின் '4 வீரர்கள்' (Four Masketeers of France) எனப்படும் லாகோஷ்ட், காக்செட், ப்ருக்னன், ஜான் பரோட்டரா ஆகிய 4 விளையாட்டு வீரர்கள் அமெரிக்காவை வென்று, டேவிஸ் கோப்பையைப் பிரான்சு நாட்டிற்கு உரியதாக ஆக்கினார்கள். பிரான்சு நாடு டேவிஸ் கோப்பைப் பந்தயத்தில் தொடர்ந்து வென்று, ஆறாண்டுக் காலம் டேவிஸ் கோப்பையைத் தன்னுடையதாக்கிக் கொண்டது.

1933-ல் பிரிட்டன் மீண்டும் டேவிஸ் கோப்பையைப்பெற்றது. 1936-வரை தொடர்ந்து வெற்றி பெற்று டேவிஸ் கோப்பையைப் பெற்று வந்தது. 1937-ஆம் ஆண்டில் டேவிஸ் கோப்பையை மீண்டும் அமெரிக்கா பெற்றது. இரண்டாவது உலகப்போருக்குப் பிறகு டேவிஸ் கோப்பை அமெரிக்காவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே கைமாறிக் கொண்டிருக்கிறது. உலகப் போர் நடந்த காலங்களில் எல்லாம் டேவிஸ் கோப்பை ஆஸ்திரேலியாவிடமே இருந்துள்ளது. டேவிஸ் கோப்பையின் வரலாற்றில் இது விந்தையான நிகழ்ச்சியாக உள்ளது! அத்துடன் ஒவ்வொரு முறையும் உலகப் போர் துவங்குவதற்கு முன்பு, அமெரிக்காவிடம் இருந்தே டேவிஸ் கோப்பையை ஆஸ்திரேலியா தட்டிப் பறித்துக் கொண்டுள்ளது என்பதும் குறிப்பிடத் தகுந்ததாகும்.

கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்பு டேவிஸ் கோப்பைப் பந்தயத்தை நடத்தி வரும் அனைத்துலக 'லான் டென்னிஸ்' பேரவைக்கு ஒரு பெரும் பிரச்சினை தோன்றியது. டேவிஸ் கோப்பைப் பந்தயத்தில் தென்னாப்பிரிக்கா பங்கு கொள்ள முன் வந்ததாலேயே அப் பிரச்சினை தோன்றியது. பெரும்பாலான நாடுகள் டேவிஸ் கோப்பைப் பந்தயத்தில் தென் ஆப்பிரிக்கா கலந்து கொள்வதை ஆதரிக்கவில்லையாதலின், இப்போட்டியில் கலந்து கொள்ள தென் ஆப்பிரிக்கா அனுமதிக்கப்படவில்லை.

தற்பொழுது டேவிஸ்கோப்பை அமெரிக்காவிடம் உள்ளது.

தற்பொழுது, டென்னிசையே தொழிலாகக் கொண்டு பெருந்தொகை ஈட்டுகின்றவர்கள் டென்னிஸ் உலகை ஆக்ரமித்துக் கொண்டு வருவதால், 'டேவிஸ்' கோப்பைப் போட்டிக்குரிய மௌசு (மதிப்பு) குறைந்து வருகிறது. டென்னிஸ் விளையாட்டில் திறமையும், ஆர்வமும் உள்ள இளைஞர்கள் பல போட்டிகளில் வென்று மேலே வந்தவுடன் டென்னிசையே தொழிலாகக் கொண்டவர்களுடன் சேர்ந்து விடுகிறார்கள். இதனால் அவர்கள் டேவிஸ் கோப்பைப் பந்தயத்தில் பங்குபெற முடியாமல் தடை செய்யப் படுகின்றனர். ஒவ்வொரு நாட்டிலும்

உள்ள சிறந்த டென்னிஸ் வீரர்களை அனைத்துலகத் தொழிலடைப் படையான டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் கவர்ந்து, இழுப்பதால், டேவிஸ் கோப்பைப் பந்தயங்களில் கலந்து கொள்ள விளையாட்டு மன்றங்களைச் சார்ந்த டென்னிஸ் வீரர்களே கலந்து கொள்கின்றனர். இதனல் தற்பொழுது டேவிஸ் கோப்பைப் போட்டி ரசிகர்களின் ஆதரவை இழந்து வருகிறது.

அனைத்துலக 'லான் டென்னிஸ்' பேரவையில் இருந்து, டென்னிசைத் தொழிலாக கருதி ஆடும் வீரர்கள் பிரிந்து விட்டார்கள். எனவே யார் வேண்டுமானலும், கலந்து கொள்ளக்கூடிய டேவிஸ் கோப்பைப் போட்டி நடத்த வேண்டுமென்று இன்று வலியுறுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் பல்வேறு விவாதங்களுக்குப் பிறகு, அனைத்துலக லான் டென்னிஸ் பேரவை, டென்னிசையே தொழிலாகக் கொண்டு விளையாடும் வீரர்களையும் டேவிஸ் கோப்பைப் போட்டியில் கலந்து கொள்ள அனுமதிப்பது என்று முடிவு செய்தது. 1973-ஆம் ஆண்டு எல்லாரும் கலந்து கொள்ளக் கூடிய டேவிஸ் கோப்பைப் பந்தயத்தின் தொடக்க ஆண்டாக அமையும்!

1973, மே திங்கள் 4, 5, 6 நாட்களில் சென்னையில் டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டிக்கான கிழக்கு மண்டல இறுதிப் போட்டி இந்தியாவிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் இடையே நடைபெற்றது. இப்போட்டியில் 'இந்தியாவின் நெம்பர் ஒன்று' என்று கூறப்படும் இந்திய டென்னிஸ் கேப்டன் திரு. கிருஷ்ணன் தலைமையில், திரு. ஆனந்த் அமிர்தராஜ், திரு. விஜய் அமிர்தராஜ், திரு. பிரேம்ஜித் லால், திரு. ஜிராதீப் முகர்ஜியா ஆகியோரும், ஆஸ்திரேலிய கேப்டன் திரு. நியேல் பிரேசர் தலைமையில் திரு நியுகோம், ஜியோப் மாஸ்டர், திரு. கூப்பர், திரு. ஜில்டினன் ஆகியோரும் பங்கு கொண்டனர். இவ்விளையாட்டுப் போட்டியை மேதகு தமிழ் நாடு ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் துவக்கி வைத்தார். மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணநிதி அவர்களும், மாண்புமிகு இந்திய அரசின் உணவு வேளாண்மை அமைச்சர் திரு. பக்ருதீன் அலி அகமத் அவர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

## ஏற்றுமதியாகும் இந்தியப் பொருள்கள்

அமெரிக்காவுக்கு இந்தியக் கைவினைப் பொருள்களின் ஏற்றுமதி கடந்த 10 ஆண்டுகளில் $4\frac{1}{2}$ மடங்கு பெருகியுள்ளது; 1961—62-ல் 19 கோடி பெறுமானமாக இருந்த ஏற்றுமதி 1971—72-ல் 90 கோடியாக உயர்ந்துள்ளது. அயல் நாடுகளில் இந்தியக் கைவினைப் பொருள்களுக்குரிய வரவேற்பு விரைந்து பெருகி வளர்வதை இந்தப் புள்ளி விவரம் காட்டும்; நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 10 ஆண்டுகளுக்கு முன்பு கைவினைப் பொருள்களின் பங்கு, 2·8 சத விகிதம். 1971—72-ல் இது 5·6 சதவிகிதமாக உயர்ந்தது.

இந்தியக் கைவினைப் பொருள்களை மிகக் கூடுதலாக இறக்குமதி செய்யும் பெரிய நாடு அமெரிக்கா தான். மொத்த ஏற்றுமதியில் கிட்டத்தட்ட 19 சத விகிதம் (5-ல் ஒரு பங்கு) அமெரிக்காவுக்குப் போகிறது.

மணிக் கற்கள், உலோகப் பொருள்கள், இரத்தினக் கம்பளங்கள், மரப் பொருள்கள், கை அச்சுத் துணிகள், தோல் பொருள்கள், இசைக் கருவிகள், விளையாட்டுப் பொருள்கள், பொம்மைகள், காகிதப் பொம்மைகள், கொம்பினல் ஆன பொருள்கள் ஆகியவை அமெரிக்கச் சந்தையில் விற்பனை ஆகும் இந்திய நாட்டுக் கைவினைப் பொருள்களில் குறிப்பிடத் தகுந்தவை.

எதிர்பாராத விதமாகச் சென்னையில் நடைபெற்ற டென்னிஸ் போட்டியில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்று விட்டது. ஆனல், இந்திய டென்னிஸ் வீரர்கள் விஜய் அமிர்தராஜும், பிரேம்ஜித் லாலும் கடைசிநாள் போட்டியில் வெகுத் திறமையாக விளையாடிப் பலரது பாராட்டைப் பெற்றுர்கள்.

டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியில் இதுவரை ஒரு தடவை கூட இந்தியா வெற்றி பெருதது மிகவும் வருந்தத்தக்கது!

"டென்னிசைப் பொறுத்தவரையில் இந்தியாவின் எதிர்காலம் எப்படி இருக்கும்?" என்று இந்திய கேப்டன் திரு. கிருஷ்ணன் அவர்களைக் கேட்டதற்கு அவர் பின் கண்டவாறு குறிப்பிட்டார்.

"நல்ல டென்னிஸ் விளையாட்டு வீரர்கள் நாட்டிற்குத் தேவைப் படுகிருர்கள். தற்பொழுது ஒரே ஒரு டென்னிஸ் விளையாட்டு வீரர் தான் உள்ளார். அவர் விஜய் அமிர்தராஜே! அவருக்கு நல்ல எதிர்காலம் உள்ளது! வருங்காலத்தில் விஜய் தன்னை எப்படி அமைத்துக் கொள்கிருரோ, அதன் அடிப்படையிலேயே இந்திய டென்னிஸ் விளையாட்டு வாழும் அல்லது தாழும்!".

திரு. கிருஷ்ணன் அவர்களின் கருத்து முற்றிலும் உண்மை என்பதைப் பலர் ஒப்புக் கொள்கின்றனர். எனவே, திரு. விஜய் அமிர்தராஜ் அவர்கள் மனந் தளராமல் மேலும் நன்கு பயிற்சி செய்து கொண்டு, வருங்காலத்திலாவது டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியில் இந்தியா வெற்றி பெறத் தன் முழுத் திறமையையும் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேம்.

'இந்தியாவிற்கு டேவிஸ் கோப்பையை முதன் முதலில் ஒரு தமிழ்நாட்டு டென்னிஸ் வீரனே பெற்றுக் கொடுத்தான்!' என்ற பெரும்புகழைத் திரு. விஜய் அமிர்தராஜ் அவர்கள் பெற வேண்டும் என்று தமிழகம் விரும்புகிறது! அவ் விருப்பத்தைத் திரு. விஜய் அமிர்தராஜ் அவர்கள் நிறைவேற்றித் தமிழனின் புகழை—இந்தியாவின் புகழை—தரணியெங்கும் பரப்பிடுவார் என்று நம்புவோம்!

—ஆர். எம்.




"தமிழ் இலக்கியங்களை முறைப்படுத்தி வகைப்படுத்தித் தர வேண்டிய பொறுப்பு தமிழ்ப் புலவர்களுக்கு இருக்கிறது. அதற்கு இதுவே தக்க காலம்; ஏனென்றால் இப்போது அதற்கான விழிப்பு உணர்ச்சியும் ஆற்றலும் நிரம்ப இருக்கின்றன.

''அந்தக் காரியம் நடைபெற்றால்தான் தமிழின் தொன்மையும் தமிழின் இனிமையும் பெருமையும் தமிழர்களால் சரிவர உணரப்படமுடியும்; தமிழ் இனம், தமிழ்ப் பண்பு, தமிழ் அரசு தழைக்க முடியும்.''

—என்று மறைமலையடிகள் நூல்நிலையத் திறப்பு விழாவில் தம் பொன்னான கருத்துக்களை வெளியிட்ட பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், "இந்தக் கருத்துக்களுக்கு இணங்க மறைமலையடிகள் நூல்நிலையம் பயன்படவேண்டும்" என்ற தம் விருப்பத்தையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

அறிஞர் பெருமக்களையும், ஆராய்ச்சி மாணவர்களையும் ஒருங்கே கவர்ந்திடும் இந்நூல் நிலையம், சென்னை லிங்கி செட்டி தெருவில் கம்பீரமாய்க் காட்சியளிக்கிறது.

தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளார் பெயரில் விளங்கும் இந்நூலகத்தினைத் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் மிகச் சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

மறைமலையடிகள் தம் வாழ்நாள் இறுதியில் எழுதிவைத்த விருப்ப ஆவணத்தில் தாம் தம் ஆராய்ச்சிக்கெனத் தொகுத்து வைத்த அரிய நூல்கள் அனைத்தும் கழகத்திடம் ஒப்படைக்கப்பெற்று, தம் பெயரால் ஒரு பொது நூலகம் நடத்த வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார். அதற்கிணங்க அடிகளார் தொகுத்த நாலாயிரத்துக்கும் மேற்பட்ட நூல்களுடன் கழகம் தொகுத்து வைத்திருந்த ஐயாயிரம் நூல்களையும் சேர்த்து இந்நூலகத்தை 1958-ல் நிறுவப்பெற்றது.

நூலகம் அமைந்துள்ள கட்டடம் சமய வரலாற்றுச் சிறப்புடையதாகும். 1832-ஆம் ஆண்டில் அருட்பா வள்ளல் இராமலிங்க அடிகளார் முதன் முதலாக 'உலகெலாம்' என்ற பாடலுக்கு நீண்ட விரிவுரையொன்றை நிகழ்த்திய இடம் இந்நூல் நிலையமேயாகும்.

மறைமலையடிகளார் தொகுத்த 4,500 நூல்கள் தனி அறையில் அழகுற அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் 500 தமிழ் நூல்கள், மற்றவை ஆங்கிலம். இலக்கண, இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள், பயணம், பொருளாதாரம், வாழ்க்கை வரலாறு, நாடகம், மருத்துவம், வானியல், சமயம், தத்துவம், நீதி நூல்களுள் சங்க இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், காப்பியங்கள் ஆகியவையும் இங்கே உள்ளன.

அடிகளார் பயன்படுத்திய பல்வேறு அகராதிகளும் இத்தொகுப்பில் இருக்கின்றன. தொகை அகராதி, வட, சமஸ்கிருத, முஸ்லீம் அகராதிகளும், விலையுயர்ந்த கலை (ஆர்ட்) சம்பந்தப்பட்ட நூல்களும் நம்மைக் கவர்ந்திழுக்கின்றன.

மறைமலையடிகளார் தாம் தொகுத்து வைத்திருந்த ஒவ்வொரு நூலுக்கும் அழகாக அட்டை போட்டு உள்ளே எண், தேதியிட்டுத் தம் பெயரையும் குறித்துள்ளது, நாம் அவரிடம் கற்றுக் கொள்ள வேண்டிய நல்ல பழக்கமாகும். அவரது கையெழுத்து மணிமணியாக இருப்பதையும், நூல்களில் தம் கருத்துகளைக் குறித்து வைத்திருப்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

தித்திக்கும் தேனமுதாம் திருக்குறள் பற்றித்தான் எத்தனை வகையான நூல்கள் இங்கே இருக்கின்றன! ஆங்கிலம், இலத்தீன், பிரெஞ்சு, செர்மன், சீனம், உருசியம், பிஜி, மலேயா, சமஸ்கிருதம், மராத்தி, பர்மியன், சிங்களம், இந்தி, வங்காளி, உருது குசராத்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், போலந்து ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள குறள் நூல்களும், திருக்குறள் பற்றித் தமிழில்

வெளிவந்துள்ள ஆராய்ச்சிகள், தெளிவுரைகள் முதலான 600 நூல்களும் இங்கு உள்ளன. இது போன்ற தொகுப்புகள் வேறு எந்த நூலகத்திலும் இல்லை எனக் கூறப்படுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக ஆங்கிலப் பெருமகன் ஜி. யு. போப் அவர்கள் திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகியவற்றை மொழிபெயர்க்கப் பயன்படுத்திய தமிழ் மூல நூல்களும் இங்கு உள்ளன! இந்த நூல்களின் ஒவ்வொரு பக்க ஓரத்திலும் தம் கைப்பட எழுதிய குறிப்புகளும் உள்ளன. அத்தோடு மொழிபெயர்க்கப் பெற்ற ஆண்டும் (1894) குறிக்கப்பட்டுள்ளது. ஓர் அறையில் பழங்கால நூல்கள், இதழ்கள் முதலியன வைக்கப் பெற்றிருக்கின்றன. அவையெல்லாம் கிடைத்தற்கரிய நூல்களாகும்.

இந்தப் பத்திரிகைகளையெல்லாம் நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

பிழைக்கும் வழி *(1913)*, விவேக சிந்தாமணி (1898), கிராமதூதன் *(1942)*, சக்கரவர்த்தினி-மகளிர் இதழ் (1905), தமிழர்போதினி *(1923)*, உதயதாரகை *(1841)*, யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த, 'மார்னிங் ஸ்டார்' என்ற மாதமிருமுறை போன்ற 400-க்கு மேற்பட்ட இதழ்கள் இங்கே உள்ளன.



நிறைதமிழாய்ந்த மறைமலையடிகள்

1867-லேயே தமிழில் வெளிவந்துள்ள 'இரண வைத்தியம்' (Surgery) என்னும் நூல் 504 பக்கங்களில், படங்களோடு அச்சிடப்பட்டிருக்கிறது. 1872-இல் வெளிவந்துள்ள 'மனுஷ அங்காதி பாதம்' (Human Anatomy) என்னும் நூல் பக்கத்துக்குப் பக்கம் படங்களோடு காட்சியளிக்கிறது. இந்நூலின் பக்கங்கள் 838 : சாமுவேல் கிரீன் என்பவர் எழுதிய 'வைத்தியாகரம்' என்னும் நூல் 1872ல் வெளிவந்துள்ளது. அந்தக் காலத்திலேயே தமிழில் மருத்துவ நூல்கள், பட விளக்கங்களோடு வெளிவந்திருக்கின்றன என்றால் அது விந்தையாகவும், 'தமிழில் முடியும்' என்பதை எடுத்துக் காட்டுவதாகவும் இருக்கிறது.

மருத்துவ நூல்கள் தவிர, தமிழில் வெளிவந்துள்ள 'தத்துவ சாஸ்திரம்' (1871), 'சோதிட சாஸ்திரம்' (1848) 'கெமிஸ்தம்' போன்ற நூல்களும், 1779-ல் வெளிவந்த 'தமிழும் இங்கிலீசுமாயிருக்கிற அகராதி, என்னும் நூலும், வீரமா முனிவரின் 'சதுரகராதியும்' பட்டினத்தார், தாயுமானவர் பாடல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்களும் இந்நூலகத்தை அணி செய்கின்றன.

தமிழைப்பற்றி ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள கலை, இலக்கியம், இலக்கணம், சமயம், தத்துவம், வரலாறு போன்ற 1,500 நூல்கள் இந்நூலகத்தில் இடம் பெற்றுள்ளன.

இவைதவிர தற்போதைய நாளிதழ்கள், வார, திங்களிதழ்கள் முதலியன வரவழைக்கப்படுகின்றன. பழைய இதழ்கள் நன்கு கட்டடம் (பைண்டிங்) செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளன.

இந்நூலகத்தைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களும், ஆராய்ச்சித் துறை மாணவர்களும், கல்லூரிப் பேராசிரியர்களும், பிற ஆராய்ச்சி வல்லுநர்களும், மாணவர்களும் பயன்படுத்தி வருகின்றனர். பல்கலைக் கழக ஆராய்ச்சிப் பட்டம் பெறுவதற்காக ஆராய்ச்சியில் ஈடுபடும் அறிஞர்கள் இந்நூலகத்தைப் பெரிதும் பயன்படுத்துகின்றனர்.

அமெரிக்காவிலுள்ள நூலகத்தைச் சேர்ந்த திருமதி செசிலியா எப். ஜான்சன், திருமதி காதரின் டீல், பிரிட்டன் நூலகர் திரு. பிராங் எம். கார்ட்னர், பிஜி தீவைச் சேர்ந்த திரு. சாமுவேல் எல். பெர்விக், பின்லாந்தைச் சார்ந்த டாக்டர் அஸ்கோ பர்போலோ, மலேயா பல்கலைக்கழக

நூலகர் திரு. நடராசன் ஆகியோர் இந்நூலகத்தின் அருமை பெருமைகளைப் பற்றித் தம் கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள்.

தனித் தமிழ்த் தந்தையின் திருப்பெயரைத் தாங்கிய இந் நூலகத்தில் உறுப்பினராகச் சேர முடியுமா? முடியும். ரூ. 10-ஐக் கட்டணமாகச் செலுத்தி யாரும் உறுப்பினராகலாம். நூல்கள் வீட்டுக்கு எடுத்துச் செல்ல அவர்களுக்கு அனுமதி வழங்கப் படுகிறது. இதுவரை 500 உறுப்பினர்கள் இந்நூலகத்தின் மூலம் பயன்பெற்று வருகின்றனர். உறுப்பினரல்லாதார் நாள் தோறும் இங்கே பெருமளவில் வந்து படித்துப் பயன்பெறுகின் றனர்.

என்றென்றும் நெஞ்சில் நிலைத்து நிற்கும் வண்ணம், இங்கே ஒரு நிலையான கண்காட்சி யும் இருக்கிறது. நூலகத்தோடு இணைந்த இக் கண்காட்சி, அறிவுக்கு விருந்தூட்டும் அரிய காட்சியாகத் திகழ்கிறது.



அமெரிக்காவைச் சார்ந்த திருமதி காதரின் டீல்

பண்டைத் தமிழ்ப் புலவர் பெருமக்களின் திருவுருவங்களைப் பார்க்க வேண்டுமா? தமிழ் அறிஞர்கள் தாம் கைப்பட எழுதிய கடிதங்களைப் பார்த்து மகிழ வேண்டுமா? அதற்கும் இந்தத் தமிழ்க் கண்காட்சி வகை செய்கிறது. தமிழைப்பற்றி ஆங்கிலத்தில் எழுதிய அறிஞர்களான கால்டுவெல், பெஸ்கி, போப், ஈராஸ், லாசரஸ், பெர்சிவல் ஆகியோரின் படங்களுடன் அவர்கள் எழுதிய நூல்களும், 1904-ல் வெளிவந்துள்ள தீப்பெட்டியை விட மிகச் சிறிய ஷேக்ஸ்பியர் நாடக நூலும், தீப்பெட்டி அளவில் அச்சான திருக்குறளும், கண்காட்சியை அழகுபடுத்துகின்றன.

புத்தகக் கட்டடங்கள் (பைண்டிங்ஸ்) தாம் எத்தனை வகையாகக் காட்சியளிக்கின்றன! தங்கம், வெள்ளி, தந்தம், கதர்ப்பட்டு ஆகியவற்றாலான புத்தகக் கட்டடங்கள் கண்ணைக் கவர்கின்றன; கைத்திறமையை எடுத்துக் காட்டுவனவாக இருந்து பரிசுகளும் பெற்றிருக்கின்றன.

கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார், ஞானியாரடிகள், வேங்கடசாமி நாட்டார், சதாசிவப் பண்டாரத்தார், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, உமா மகேசுவரம் பிள்ளை, அ. மு. சரவண முதலியார், நாவலர் சோமசுந்தர பாரதியார், ஆறுமுக நாவலர் ஆகியோர் பல்வேறு சந்தர்ப்பங்களில் தாம் கைப்பட எழுதிய கடிதங்களை இங்கே காணலாம். இவை தவிர, மேலைநாட்டு அறிஞர்களான போப், லாசரஸ், ஈராஸ் போன்றவர்களின் கடிதங்களும் நமக்குக் கடந்த காலச் சம்பவத்தைக் காட்டுகின்றன.

நூலகத்தின் இரண்டாம் மாடியில் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதற்காக மிக அழகிய முறையில் 'சொற்பொழிவுக் கூடம்' ஒன்று காட்சியளிக்கிறது. 'வள்ளலார் திருவருள் மண்டபம்' எனும் பெயருடைய இம்மண்டபம் கடந்த ஆண்டு மார்ச்சுத் திங்களில் திறந்து வைக்கப்பெற்றது.

சென்னை மறைமலையடிகள் நூல்நிலையம்பழமரம்போல்நின்று அறிவுப் பசியைத் தணிக்க உதவுகின்றது. பழமரம் நாடும் பன்னிறப் பறவைகள் போலப் பல துறையைச் சேர்ந்தவர்கள் இங்கே வந்த வண்ணமுள்ளனர். அவர்களுக்கெல்லாம் உறுதுணையாய் நின்று தமிழ்ப் பணியாற்றும் இந்நூலகம், மேலும் வளர்ந்திட வாழ்த்துவோம்!

—பி.வி.ஜி.

## வெண்பாப் போட்டி—57

தமிழ்நாடு அரசு அமைத்துள்ள குடிநீர் வடிகால் வாரியத்தின் சாதனைகளைப் பற்றி நேரிசை வெண்பா எழுதுக.

முடிவு நாள்: 16—6—73.

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர் (வெண்பாப் போட்டி)
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை–600002.

# காகிதத்தில் ஒரு கலைத்தொழில்

பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத் திறப்பு விழா !

யானைகளின் அணிவகுப்புப் பின்தொடர, முன்னே முக படாம் அணிந்த ஒரு யானையின் மீது அம்பாரியில் அமர்ந்தபடி ஒய்யாரமாக உலா வந்து கொண்டிருக்கிறான் கரிகால் வளவன்.

திருவெண்காட்டுச் சாலையிலிருந்து பூம்புகார் கலைக்கூடம் வரை, கரிகால் வளவனின் உலா தொடர்கிறது.

தெருவின் இரு பக்கத்திலும் நிற்கின்ற ஏராளமான பொது மக்கள் வியப்பில் ஆழ்ந்து நிற்கின்றார்கள்.



''கரிகால் வளவனாக உலா வரும் மனிதர் யார் ? ''

''அந்தநாள் சோழ மன்னர்களை நினைவுபடுத்தும் அழகான மீசையும், அருள் வடிவும் கொண்டு காணப்படும் இந்த மனிதர் யார் ?''

மக்களின் நெஞ்சங்களில் இந்த வினாக்கள் எழுந்து எதிரொலிக்கின்றன.

இந்த வினாக்களுக்கு உரிய விடை, பலருக்கு வியப்பைத் தரும் என்பது உறுதி.

கரிகால் மன்னராக உலா வந்தவர் வேடமணிந்த மனிதர் அல்ல—ஆனால், மனிதரின் படைப்பு! அதாவது மோகனாம்பாள் மோல்டிங் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. லெட்சுமிகாந்தம் என்பவரால் காகிதத்தில் உருவாக்கப்பட்டவர் கரிகாலன். உலா வந்த கரிகாலன் ஆள் அல்ல—காகிதப் பொம்மை!

காண்பவர் கண்களை எல்லாம் வியப்பில் ஆழ்த்தும் வண்ணம் காகிதத்தால் பொம்மை செய்யும் கோடம்பாக்கம் மோகனாம்பாள் மோல்டிங் நிறுவனம் துவக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் தான் ஆகின்றன. என்றாலும் அதன் பணி பாராட்டத்தக்க அளவில் வளர்ந்து வருகின்றது.

இந்திய விடுதலை நாள் வெள்ளி விழாவின் போது இந்தியத் தலைநகரான டெல்லியில் நடைபெற்ற ஊர்வல ஊர்தியில் மோகனாம்பாள் மோல்டிங் நிறுவனத்தார் செய்த எட்டடி உயரமுள்ள பால கங்காதர திலகர், ஆறரை அடி உயரம் கொண்ட அன்னி பெசண்டு உருவங்கள் இடம் பெற்று, மாபெரும் பாராட்டை வாங்கித் தந்திருக்கின்றன. அந்தச் சமயத்தில் தென் ஆப்பிரிக்காவிலிருந்து டெல்லிக்கு வந்திருந்த சுற்றுலாப் பயணிகள் எல்லாம் அந்தப் பொம்மைகளைப் பார்த்து வியந்த வண்ணமாகவே இருந்தார்களாம். காகிதத்தால் ஆன பொம்மை என்பதை அவர்கள் முதலில் ஒப்புக் கொள்ளவே இல்லையாம். தட்டிப் பார்த்த பின்புதான் ஒப்புக் கொண்டார்களாம். அதன் பின் 'மளமள' வென்று அந்தப் பொம்மைகளைப் பலர் புகைப்படம் எடுத்துக் குவித்துவிட்டார்களாம்.

சென்னையில் 1968-ல் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலத்தில் உலா வந்த ஊர்திகள் சிலவற்றில் மோகனாம்பாள் மோல்டிங் நிறுவன உரிமையாளரின் தொண்டும் சேர்ந்திருக்கிறது.

திருப்பாவை பாடிய ஆண்டாள், அறுபடை வீடு, ஆராய்ச்சி மணி, மறைமலை அடிகளார் இடம்பெற்ற ஊர்திகள் இவரது கை வண்ணத்தினாலும், இவரது நண்பர்களின் ஒத்துழைப்பினாலும் உருவானவை.

அண்மையில் சென்னை இராஜாஜி மண்டபத்தில்

நடைபெற்ற கதர் இயக்கப் பொன்விழாக் கண்காட்சியில் இவரது கைவண்ணச் சிற்பங்களான காகிதப் பொம்மைகள் இடம் பெற்றிருந்தன என்பது மட்டுமல்ல—காண்போர் அனைவரையும் கவர்ந்திழுத்தன ! காகிதப் பொம்மையா—கல்லாலான பொம்மையா என்பதைப் பார்வையினால் எளிதில் தெளிவு படுத்திக் கொள்ள முடியாது ! அந்த அளவுக்குக் கற்சிலை போல் காட்சி தந்தன இந்தப் பொம்மைகள்!

தாயும் குழந்தையும் உள்ள சுவர்ச் சிற்பம் ஒன்றினைப் பார்த்த மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், உற்று நோக்கியதுடன் இந்தப் பொம்மையைத் தட்டிப் பார்த்திருக்கிறார்கள். மேதகு ஆளுநர் கே. கே. ஷா, அவர்கள் தமது கரங்களினால் ஒரு பொம்மையைப் பிய்த்துப் பார்த்திருக் கிறார்கள். பலவகைக் கலைப்பொருட்களை வெளி நாட்டிலும், வெளி மாநிலத்திலும் பார்த்து ரசித்துள்ள நமது ஆளுநரும், முதல்வரும் இந்தக் காகிதப் பொம்மைகளைக் கண்டு வியப்படைந்திருக்கிறார்கள் என்றால், இவை வேலைப்பாடமைந்தவை என்பதை எடுத்துச் சொல்லவா வேண்டும் ?

அதே கண்காட்சியில் நடைபெற்ற மற்றொரு நிகழ்ச்சி :

ஒரு பார்வையாளர் இவரது கடைக்கு வந்தார். கடையில் இடம் பெற்றுள்ள புத்தர், வள்ளுவர், பொம்மைகளைப் பார்த்து வியப்படைந்தார். பிறகு, அவரது கண்கள் இங்கே எதையோ தேடுவது போல் காணப்பட்டன. எல்லாப் பொம்மைகளையும் ஏற இறங்கப் பார்த்து விட்டு,

''அண்ணா பொம்மை இருக்கிறதா''—என்று கேட்டார்.

''பக்கத்துக் கடையில் இருக்கிறது''—இது பொம்மை செய்பவர் சொன்ன பதில்.


''உங்களிடம் இருக்கிறதா என்று கேட்டால் பக்கத்தில் இருக்கிறது என்று கூறுகிறீர்களே! உங்கள் வேலைப்பாட்டைப் போல் பக்கத்தில் இல்லையே!'' என்று ஏக்கத்துடன் தெரிவித்தார் அந்தப் பார்வையாளர்.

தரமான பொம்மைகளைத் தயாரிக்கும் நிறுவனம் இது என்பதை இந்த நிகழ்ச்சி எடுத்துக் கூறுகிறது.

ஏறக்குறைய 100 வகைப் பொம்மைகளை இந்த நிறுவனம் தயாரித்துள்ளது. விநாயகர், சிவன், பார்வதி, போன்ற பொம்மைகளும் வள்ளுவர், புத்தர் போன்ற தத்துவ மேதைகளின் சிலைகளும், தாயும்—குழந்தையும் போன்ற சமூக இயல் சிலைகளும், சுவரிலே மாட்டக் கூடிய வகையில் 11 வகை நடனப் பெண் பொம்மைகளும் தயாரிப்பில் உள்ளன.

சுவரிலே மாட்டக் கூடிய இந்த நடனப் பெண் பொம்மைகள் 2 அடிக்கு மேல் உயரம் கொண்டவை. 1·25 கிலோ எடை உள்ளவை. இவற்றிற்குத் தமிழ்நாட்டில் நல்ல வரவேற்பு இருக்கின்றது. இந்த வகைப் பொம்மைகள் மாதம் 200 விற்பனை யாகின்றனவாம். தரையில் பீடத்துடன் வைக்கப்படும் பொம்மைகளைவிடச் சுவரில் மாட்டும் பொம்மைகள்தான் அதிகமாக விற்பனை ஆகின்றன.





இந்த நிறுவனத்தின் தயாரிப்புகள் சென்னை எஸ்பிளனேட் பகுதியில், குறளகத்தில் இருக்கும் கதர்-கிராமத் கைத் தொழில் அங்காடியிலும், அண்ணா சாலையில் உள்ள தொழில் துறையைச் சார்ந்த விற்பனை நிலையத்திலும் கிடைக்கின்றன.

பம்பாயிலிருந்து வேண்டுகோள் வந்திருப்பதாகவும் தெரிகிறது. உத்தரப் பிரதேசத்திலிருந்தும் தேவையைத் தெரிவித்திருக்கிறார்களாம்.

இங்குச் செய்யப்படும் பொம்மைகளில் மிகக் குறைந்த விலை உள்ளது, பாவை விளக்கு : மிகுந்த விலையுள்ளது நடராசர் சிலை. முன்னதன் விலை ரூ. 9 பின்னதன் விலை ரூ. 300.

தற்போது இவை சென்னை நகரில் மட்டும்தான் விற்பனைக்குக் கிடைக்கின்றன. வெளி மாவட்டங்களுக்கும் அனுப்புவதற்குரிய விரிவான திட்டங்கள் கைக் கொள்ளப்பட்டு வருகின்றன.

கருத்தைக் கவரும் இந்தக் காகிதப் பொம்மைகள் உருவாவதற்குத் தேவையான மூலப் பொருள்கள் எவை என்று கருதுகிறீர்களா ? பம்பாய்ச் சுண்ணாம்புத்தூள், சுக்காங்கல், மைதா, மயில் துத்தம், கழிவுக் காகிதம் ஆகியவைதான்.

சரி, இவற்றைக் கொண்டு பொம்மையை எப்படித் தயாரிக்கலாம் ? காகிதத்தை நன்கு மாவாக்கிக் கொள்ள வேண்டும். சுக்காங்கல்லையும் தூளாக்கிக் கொள்ள வேண்டும். மைதா, பம்பாய்ச் சுண்ணாம்பு ஆகியவற்றுடன் இவற்றைச் சேர்த்து, சிறிது மயில் துத்தத்தையும் கலந்து மாவாக்கப்பட்ட காகிதத்தையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். இந்தக் கலவை பூரி மாவைப்போல் இருக்கும். இதனைப் பூரிக்கட்டையால் உருட்ட வேண்டும். எந்த உருவம் வேண்டுமோ அதற்குரிய அச்சில் (MOULD) சிறிது பிரெஞ்சுச் சுண்ணாம்புத் தூளை ஒருநூல் கனத்துக்குத்தூவி, இந்தக் கலவையை இட்டு, அதனை ஒரு தேய்ந்த தூரிகையினால் நன்கு குத்த வேண்டும். அதன்பிறகு பசையை நன்றாகத் தடவி, 4 காகிதங்களை வைக்க வேண்டும். அச்சிலேயே வைக்கப்பட்டு இரண்டு மணி நேரம் வெய்யிலிலே இருக்கவேண்டும். அதன் பிறகு அச்சை விட்டுத் தனியே எடுத்து, எட்டு மணி நேரம் வெய்யிலில் வைக்க வேண்டும். அதன் பிறகு உருவாகியுள்ள பொம்மையின்-ஒழுங்கற்ற பகுதிகளை நன்றாகத் தேய்க்க வேண்டும். இது திறமையுள்ள ஒருவரால்தான் முடியும் ! கற்றுக் குட்டிகளினால் முடியாது. அதன் பிறகு தேவையான வண்ணத்தைப் பூச வேண்டும். அதன் பின் ஒளி வீசும் அழகுப் பதுமை நமக்குக் கிடைத்து விடும்.

பொம்மைகள் செய்வதற்குக் தேவைப்படுவது (Mould) அல்லது (dye) என்று சொல்லப் படும் அச்சுகள் தான். ஒவ்வொரு பொம்மைக்கும் ஒவ்வொரு வகையான அச்சு தேவைப்படுகின்றது. அது மட்டுமல்ல. ஒரு பொம்மைக்கு இரண்டு அச்சுக்கள் தேவைப்படலாம். தலைப்பகுதிக்கு ஓர் அச்சும், ஏனைய பாகங்களுக்கு ஓர் அச்சும் தேவைப்படும். அநேக அச்சுக்களினால் உருவாகும் சிற்பமும் உண்டு ; இங்கே, மிகக் குறைந்தது 2 அச்சுக்கள் பயன்படுத்தப்பட்டு உருவாக்கப்பட்ட சிற்பம்தான். மிக அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது 125 அச்சுக்கள். இங்கே உருவான நடராசர் சிலை 125 அச்சுக்கள் கொண்டு உருவாக்கப் பெற்றது. இந்தப் பொம்மையின் விலை ரூ. 300 ஆகிறது. இதை உருவாக்குவதற்காகத் தயாரிக்கப்பட்ட அச்சின் அடக்கவிலை ரூ. 2,000 ஆகியுள்ளது. அது மட்டுமல்ல இரு திறமையாளர்களின் 15 நாட் பணியையும் எடுத்துக் கொண்டிருக்கிறது.



நடனப்பெண்

அதெல்லாம் சரிதான் ! இந்த அச்சைத் தயாரிப்பது எப்படி ? அதுவே ஒரு தனிக் கலை ஆகும்.

எந்த உருவத்திற்கு அச்சு வேண்டுமோ அந்த உருவத்தின் புகைப்படத்தை—அல்லது அந்த மனிதரைப் பார்த்துக் களிமண்ணில் வடிவம் செய்து கொள்ள வேண்டும். அந்தக் களிமண் உருவத்தில் தேங்காய் எண்ணெய் தடவவேண்டும். கையினால் தடவக் கூடாது. தூரிகையினால் தடவவேண்டும். முன் பகுதி, பின்பகுதி என்று இரு பகுதிகள் வரும் வகையில் நடுவில் அணை போலக் களிமண்ணினால் அமைக்க வேண்டும். அதன்பிறகு பிளாஸ்டர் ஆப் பாரிஸ் என்னும் ஒருவகைச் சுண்ணாம்பு போட்டுத் தண்ணீர் ஊற்ற வேண்டும். 5 நிமிடத்தில் ஆவி பறக்கும் ; அதாவது பிளாஸ்டர் ஆப் பாரிஸ் கலவையினால் சூடு ஏறுகிறது என்றும், அச்சு உருவாகிக் கொண்டிருக்கிறது என்றும் பொருள். அவ்வாறு சூடாகா விட்டால், பயன்படுத்தப்பட்ட 'பிளாஸ்டர் ஆப் பாரிஸ்' மாவு தரமானதல்ல என்றும், கெட்டுப் போனது என்றும் பொருள். இங்கே தோன்றும் சூடு தொட்டுப் பார்க்கக்கூடிய அளவு சூடுதான்.

சுமார் அரைமணி நேரம் கழித்துப் பிரித்துக் களிமண் உருவத்தை எடுத்துவிட வேண்டும். இரு பகுதிகள் கொண்ட அச்சுக் கிடைத்துவிடும். களிமண்ணினால் செய்யப்பட்டிருந்த உருவத்தை அப்படியே அந்த அச்சு உரித்து வைத்திருக்கும்—வார்த்து வைத்திருக்கும்.

இந்த அச்சு, மூன்று நாள் வெய்யிலில் வைக்கப்படவேண்டும். இல்லாவிட்டால் ஈரம் இருந்து கொண்டே இருக்கும். எளிதில் உலராது. அவ்வாறு ஈரம் அச்சின் உள்ளே இருந்து கொண்டிருந்தால்— அதனால் செய்யப்படும் வடிவங்கள் ஒழுங்குற அமையா ! மூக்கு, கண், வாய் போன்ற நுட்பமான

பகுதிகள் சிதைவுக்குட்பட நேரலாம்.

இந்த அச்சின் துணை கொண்டு ஆயிரக் கணக்கான வடிவங்கள் செய்யலாம்.

•

தமிழ்நாட்டில்—ஏன் இந்தியாவிலேயே எவரும் செய்யாத வகையில் ஓர் அதிசயத்தை இந்த நிறுவனத்தின் உரிமையாளர் செய்திருக்கிறார். அது என்ன தெரியுமா ?

திரைப்படம் ஒன்றின் தந்திரக் காட்சிக்காக—அந்தக் காட்சியில் நடிக்கும் வில்லன் நடிகர் ஒருவரின் முகத்திற்குரிய அச்சை உருவாக்கித் தந்திருக்கிறார். இதில் என்ன அதிசயம் இருக்கிறது என்று தானே கருதுகிறீர்கள்.............? அச்சுத் தயாரித்த விதம் அதிசயத்துக்குரியதான் ! எப்படித் தெரியுமா ? பொதுவாகக் களி மண்ணினால் உருவஞ் செய்து அச்சுத் தயாரிப்பது வழக்கம் என்று குறிப்பிட்டிருந்தோம் அல்லவா? இந்த நிகழ்ச்சியில் அப்படி நடைபெறவில்லை. நடிகரின் முகத்திற்கும் அச்சினால் தயாரிக்கப் பெறும் உருவத்துக்கும் வேற்றுமை வந்து விட்டால் திரைக் கலை நுணுக்கம் பாழ்பட்டதாகிவிடும். அதனால் அந்தக் காட்சியில் நடித்த நடிகரின் முகத்திலேயே பிளாஸ்டர் ஆப் பாரிஸ் போடப்பட்டது. நடிகரின் கண்களும் வாயும் மூடப் பட்டுவிட்டன. மூக்கின் துவாரங்களிலே இரண்டு அடி நீளமுள்ள இரண்டு பிளாஸ்டிக் குழாய்கள் பொருத்தப்பட்டன. அவற்றின் வழியாக மூச்சு மட்டும் விடலாம். ஆனால் கண்களையோ, வாயையோ திறக்க முடியாது—திறக்கக் கூடாது. குழாய்க்கு மட்டும் இடம் விடப்பட்டு மாவு பூசப்பட்டது. அதன்பின் சிறிது உப்புக் கலந்த தண்ணீர் விடப்பட்டது. உப்புக் கலந்தால் சீக்கிரம் இறுகி, அச்சு உருவாகும்! மேலும் உயிருள்ள உருவத்தால்—பிளாஸ்டர் ஆப் பாரிஸ் கலவையால் ஏற்படும் வெப்பத்தைத் தாங்க முடியாதல்லவா! அதற்காகத்தான் உப்புப் பயன்படுத்தப்படுகிறது. சுமார் 2½ நிமிடங்களில் ஆவி வந்து பறந்தது. உடனே அச்சைக் கழற்றும்படி அந்த நடிகரின் காதில் சொன்னதும், அந்த நடிகர் எழுந்து, தானே கழற்றி விட்டார். அவரைப் போலவே அந்த அச்சு இருந்தது. அவரே வியந்துவிட்டார். அந்த அச்சைக் கொண்டு அவரது முகத்தைப் போலவே செய்து—படத்தில் பயன்படுத்தினார்களாம். ஏறக்குறைய இந்த அச்சுத் தயாரிப்பது ஓர் அறுவைச் சிகிச்சைக்கு இணையானதுதான்.



உலாவந்த கரிகால் வளவன்

இவ்வாறு, அயராத உழைப்பும், வியப்பான சாதனைகளும் புரிந்து, காகிதத்தில் ஒரு கலைத் தொழிலைச் செய்துவரும் மோகனாம்பாள் மோல்டிங் நிறுவன உரிமையாளர் திரு.லெட்சுமி காந்தம், பள்ளிக் கல்வி அதிகம் படித்தவரல்ல; என்றாலும் அவரது தொழிலுக்குத் தேவையான கலைப் பயிற்சியைப் பல கலைஞர்களிடமும், பண்ணுருட்டியில் இருந்த அரசினர் காகிதப் பொம்மைப் பயிற்சி நிலையத்திலும் பெற்றிருக்கிறார்.

ஏறக்குறைய 14 பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தந்திருக்கும் இந்தக் காகிதப் பொம்மைக் கலைஞர் நிறையப் பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தருகின்ற அளவுக்குத் தனது தொழில் வளம் பெற வேண்டும் என்று விரும்புகிறார்.

பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக் கூடத் திறப்பு விழாவின் போது—கரிகால் வளவன் சிலையை உருவாக்கித் தந்ததற்காகச் ‘சிலம்பு’ அமைப்புக்கொண்டமோதிரத்தை முதல்வர் கலைஞர் அவர்கள், இவருக்குப் பரிசு தந்ததைத் தனது வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்ச்சி என்று குறிப்பிடும் இந்தக் காகிதப்பொம்மைக் கலைஞர், தான் இந்தியாவிலேயே சிறந்த காகிதப் பொம்மைத் தயாரிப்பாளர் என்ற புகழை அடைய வேண்டும் என்ற இலட்சியத்தை கொண்டிருக்கிறார். காகிதத்தில் ஒரு கலைத் தொழிலைச் செய்து வரும் இவரது இலட்சியம்வெற்றி பெறும் என்று நம்புகிறோம்.

—த.பி.



# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

## சேமிப்புப் பழக்கமே எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு

வரலாற்றுச் சிறப்பையும், வழிபடுவோர் போற்றும் சமயச் சிறப்பையும் ஒருங்கே பெற்று ஒளிர்கின்ற கற்றளிகளும், கவின் மிகு திருக்கோயில்களும் நாளும் நற்றமிழ் வளர்த்திடும் நன் மடங்களும் நிறைந்து விளங்குவது தமிழ்நாடு!

முடியுடை மூவேந்தர் காலம் தொடங்கி இன்றளவும் முறைமையான ஓர்வரலாறு கிடைத்திடத் தமிழர்க்கு உறுதுணை பயப்பவை தமிழகத் திருக்கோயில்கள்தாம். வரலாற்றுச் சான்றுகளாகவும், வழிபடுவோர் தம் குறைநீக்கும் இறைவன் உறைவிடங்களாகவும் கருதப்படும் கலைமாட்சி மிக்க இத்திருக்கோயில்களைப் பேணிப் பாதுகாத்து, இனிவரும் சந்ததியினருக்கு அளிக்க வேண்டிய பொறுப்பை நிறைவேற்றிடும் வழியில், இந்து சமய அறக் கட்டளைகள் துறை செயல்பட்டு வருகிறது என்பதை நாடறியும்.

திருக்கோயில்கள் தமிழ் நாட்டில் எழுந்த முறைகளையும், அவைகளை எழுப்பிய மன்னர் தம் மன நிலைகளையும், அத்திருக் கோயில்களும் அறநிறுவனங்களும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் நின்று பயன் அளித்திட அவர்கள் ஏற்படுத்திய '' நிவந்தங்களையும் '' அவைகளை இன்றளவும் பறைசாற்றிக் கொண்டிருக்கும் கல்வெட்டுச் சான்றுகளையும் விரிவாக உணர்ந்ததன் அடிப்படையில், தமிழ்நாடு அரசு இத்துறையில் பெரும் கவனம்செலுத்திக் கடந்த சில ஆண்டுகளாகப் பல்வேறு பணிகளைச் செய்து வருகிறது.

தமிழ்நாடு அனைத்துமாக இவ்வாண்டுத் தொடக்கம் வரை இத்துறை 157 திருமடங்களும், 12,038 திருக்கோயில்களும், 832 குறிப்பிட்ட அறக்கட்டளைகளும் ஆக 13,027 அற நிலையங்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுள்ளது; இவ்வனைத்து அறநிலையங்களின் மொத்தவருவாய்ரூ.6,75,00,000 என்று மதிப்பிடப்படுகிறது. இதில் திருக்கோயில் நிலங்களைக் கண்டறிந்து இத்துறையோடு இணைக்குமாறு நியமிக்கப்பட்ட சிறப்புப் பணியாளர்களின் ஆய்வின் காரணமாக இவ்வாண்டில் 2,162 திருக்கோயில்கள் இத்துறையின்கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ள எண்ணிக்கையும் அடங்கும்.




1973–ஆம் ஆண்டில் திருக்கோயில்களின் எண்ணிக்கை 15,000-க்கு மேலாக உயரும் என்றும், அவைகளின் மொத்த வருமானம் சுமார் ரூ.7,50,00,000 உயருமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

வருவாய் வாயில்கள் பெருகியதன் காரணமாக மிகை நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் நிதியிலிருந்து வானுற எழுந்து நிற்கும் இந்த திருக்கோயில்களில் காலத்தாற் பழுதுபட்டும், கலைமாட்சியுறுதோர் கைபட்டும் சிதைவுற்றதுமான பலவற்றைத் திருத்தியமைத்து அவை அழகு கெடாமல் பாதுகாக்கப் படுகின்றன.

குறிப்பாகவும் சிறப்பாகவும் தமிழகத்துச் சிற்பங்களின் கைவண்ணத்தையெல்லாம் தம் மெய் வண்ணத்தாலே பறைசாற்றி வரும் அரிய சிற்பங்கள், காலத்தால் அழியா வண்ணம் காப்பாற்றப்படுவதோடு, திருமதில்கள் ஓரங்களிலும், கருவறை பெற்ற சுற்றுச் சுவர்களிலும் கணக்கின்றி இருக்கும் கல்வெட்டுகளையும், பல்வேறு இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட கல்வெட்டுகளையும், செப்புப் பட்டயங்களையும், பிற சான்றுகளையும், முறைமையாகப் பாதுகாக்கத்தக்க வகையிலும், காப்போரின்றிச் சிறு கிராமங்களில் கிடக்கும் அழகுச் சிற்பங்களையும் பாதுகாப்பதற்கான வகையிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுத் தமிழ் மண்ணுக்குரிய சிற்பங்களும், சிலைகளும், அயலார் கரத்தைச் சென்றடையா வண்ணம் காக்கப்படுகின்றன.

பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்ட செம்பு, ஐம்பொன் சிலைகளும், கற்சிலைகளும் காண்போர் கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தளிக்கும் வகையில் அழகுற அமைக்கப்பட்டுப் பாதுகாக்கப் படுகின்றன. இவ்வாறு அமைக்கப்பட்ட கலைக்கூடங்கள் கீழ்க்

காணும் இரண்டு இடங்களில் செயல்பட்டு வருகின்றன:—

(1) அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

(2) அருள்மிகு ஜம்பு கேசுவரர் திருக்கோயில், திருவானைக்காவல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

தஞ்சை மாவட்டம் திருவாரூரில் உள்ள அருள்மிகு தியாகராசர் திருக்கோயிலில் அந்த மாவட்டத்தில் அண்மையில் கிடைக்கப்பெற்ற பல்வேறு சிலைகள் திருக்கோயிலுக்கு வருவோரின் பார்வைக்காக வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் மற்ற திருக்கோயில்களில் காணப்படும் கவின்மிகு சிலைகளையும், சிற்பங்களையும் பாதுகாத்திடும் வகையில் அவைகளின் அழகு குன்றாமலும், காண்போருக்குத் தடையில்லா வகையிலும் இரும்புக் கம்பிகளால் காப்புச் செய்யப்பட்டுள்ளன. விலைமதிக்கொணாத் தமிழ்நாட்டுச் சிற்பங்களையும் சிலைகளையும் காப்புச் செய்வதில் இத்துறை மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

1973-ஆம் ஆண்டில் இன்னும் அதிகப்படியான திருக்கோயில்களைத் திருப்பணிக்கு எடுத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கிறது. முக்கியமாக, கிராமப் பகுதிகளில் உள்ள சுமார் 1,500 திருக்கோயில்களில் திருப்பணி நடைபெற வேண்டும் என்ற முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதே போல 1967–68-ஆம் ஆண்டு தொடங்கி திருக்கோயில் திருப்பணிகளுக்காக அரசின் உதவித் தொகை ரூ. 3 இலட்சம் என்று இருந்த நிலையை மாற்றி 1968–69 முதல் ரூ. 4 இலட்சமாகவும், 1972–73-ல் ரூ. 5 இலட்சமாகவும் தற்போது ரூ. 6 இலட்சமாகவும் உயர்த்தி இருப்பது எண்ணிப்பார்க்கத் தக்கது.

1967-ஆம் ஆண்டு வரையில் தமிழ்நாட்டுத் திருக்கோயில்களின் சார்பில் கட்டப்பட்டுள்ள மொத்தத் திருமண மண்டபங்களின் எண்ணிக்கை 14 ஆகும். ஆனால், 1967-க்குப் பிறகு 1972 டிசம்பர்த் திங்கள் வரை தமிழ்நாட்டுத் திருக்கோயில்களின் சார்பில் துவக்கப்பட்ட திருமண மண்டபங்களின் எண்ணிக்கை 169 ஆகும். இவற்றில் 41 திருமண மண்டபங்கள் முழுமையாக முடிவுற்றுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மற்றவற்றை முடிக்கும் வகையில் விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருமணம் நடத்த வசதியான இடமின்றித் தவிக்கின்றவர்களின் துயரம் இதன் மூலம் பெருமளவில் களையப் பட்டு வருகிறது.

**திருக்கோயில்கள் மிகை (உபரி) நிதியிலிருந்து நிறைவேற்றப்படும் சமுதாயப் பணிகள்:** தமிழ்நாட்டுத் திருக்கோயில்களின் தோற்றுவாயை உணர்ந்தால் அவைகள் வெறும் வழிபாட்டு இடங்களாக மட்டும் அமையாமல் சமுதாயப் பணிகளை நிறைவேற்றிடும் அமைப்புகளாகவும் சிற்பம், கலை, கல்வி, மருத்துவம், ஓவியம், நாட்டியம் போன்ற கலைகளை வளர்க்கும் அறநிலையங்களாகவும், காப்பகங்களாகவும், அமைந்தன என்பது தெளிவாகும். எனவே, இவற்றின் அடிப்படையிலேயே பின்வரும் சமுதாயப் பணிகளை இத் திருக்கோயில்களின் மூலம் இத் துறையினர் நிறைவேற்றி வருகின்றனர்.



கேடில் விழுச் செல்வமாம் கல்விச் செல்வத்தை வாரி வழங்கும் வகையில் தமிழ் நாட்டில் பெருவருவாய் உள்ள திருக்கோயில்களின் சார்பில் தற்போது 6 கல்லூரிகள் தமிழகத்தில் கீழ்க்காணும் பகுதிகளில் அமைந்து செயல் பட்டு வருகின்றன.

(1) அருள்மிகு பழனி ஆண்டவர் கலைக்கல்லூரி, பழனி.

(2) அருள்மிகு பழனி ஆண்டவர் செந்தமிழ்ப் பெண்கள் கல்லூரி, பழனி.

(3) அருள்மிகு பழனி ஆண்டவர் பெண்கள் கலைக் கல்லூரி, பழனி.

(4) அருள்மிகு தேவி குமாரி பெண்கள் கல்லூரி, குழித்துறை (கன்னியாகுமரி மாவட்டம் தேவஸ்தானம் வாரியத்தினரால் நடத்தப்படுவது).

(5) அருள்மிகு பராசக்தி பெண்கள் கல்லூரி, குற்றாலம்.

(6) அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில் கல்லூரி, இராமேஸ்வரம்.

அண்மையில் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த திருநெல்வேலி அருள்மிகு காந்திமதி அம்பாள் திருக்கோயில் சார்பில் மகளிர் கல்லூரி ஒன்றும், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் சார்பில் ஒரு மகளிர் கல்லூரியும் தொடங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது. செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து அங்குத் தொடங்கப்பட்டிருக்கும் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கலைக்கல்லூரிக்கு ரூ. 5 இலட்சம் நன்கொடை வழங்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.



இவைகளன்றி மதுரை மாவட்டத்தைச் சார்ந்த பழனியில் அமைந்துள்ள அருள்மிகு தண்டபாணிசுவாமி திருக்கோயில் சார்பில்திருபழனியாண்டவர்இந்தியப் பண்பாட்டுக்கல்லூரியும், தஞ்சை மாவட்டம் திருவெண்காட்டினை அடுத்த மேலையூரில் பூம்புகார் பேரவைக் கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன.

இந்திய மெய்விளக்கத் துறை மற்றும் பண்பாடுகளில் பட்டப் படிப்பிற்கும் மேலான படிப்பிற்குக் கல்லூரி ஒன்று 1972-ஆம் ஆண்டில் பூம்புகாரில் தொடங்கப்பட்டது என்பதும் இங்கு நினைவு கூர்தற்குரியது.

**உயர்நிலை ஆரம்பப் பள்ளிகள்:** தற்போது தமிழ்நாட்டில் திருக்கோயில்களின் நிதியிலிருந்து 13 ஆண்கள் மற்றும் மகளிர்க்கான உயர்நிலைப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இவற்றில் மூன்று பள்ளிகள் 1972-73-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. மேலும் 1973--74-ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டம் திருக்கடையூர் பிச்சைக் கட்டளை சார்பில் ஓர் உயர்நிலைப்பள்ளியும், முகவை மாவட்டம் பள்ளத்தூரில் அறக்கட்டளையொன்றின் சார்பில் ஓர் உயர்நிலைப்பள்ளியும்தொடங்கப்பட இருக்கின்றன.

**நாதசுரப் பள்ளிகள்:** மங்கல ஒலிகூட்டி மக்களுக்கு இன்பம் சேர்க்கும் நாதசுரக் கலையைப் பேணி வளர்க்கும் வகையில்திருக்கோயில்களின் நிதியிலிருந்து கீழ்க்காணும் இரு இடங்களில் நாதசுரப் பள்ளிகள் உருவாக்கப்பட்டுத் தக்க விற்பன்னர்களைக் கொண்டு மாணவர்கள் முறையாகப் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

1. பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நாதசுரப் பள்ளி.

2. தஞ்சை மாவட்டம் வலிவலம் அருள்மிகு இதயக்கமல நாதசுவாமி திருக்கோயில் நாதசுரப்பள்ளி.

இவற்றில் பழனியில் 20 மாணவர்கள் நாதசுர இசையிலும், 10 மாணவர்கள் தவில் இசையிலும், தஞ்சை வலிவலத்தில் 15 மாணவர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**ஊமையர் மற்றும் செவிடர்களுக்கான பள்ளிகள்:**—இயற்கையின் படைப்பில் ஊமைகளாய்ச் செவிடர்களாய்ப் பிறந்துவிட்டோர்க்குப் பயிற்சி அளித்துப் பேசவும், எழுதவும், இரு பயிற்சிப் பள்ளிகள் திருவரங்கம் அருள்மிகு அரங்கநாத




சுவாமி திருக்கோயில் சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் மற்றும் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் ஆகியவற்றின் சார்பில் தற்போது செம்மையாகச் செயல்பட்டு வருகின்றன.

**அன்பு இல்லங்கள்;—** பேணுவோர் இன்மையால் பெருந்தொல்லைக்குட்பட்டு இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்படும் அனாதைகளைக் காப்பதற்கு அன்பு இல்லங்கள் கீழ்க்காணும் 10 திருக்கோயில்களின் சார்பில் நடத்தப்பட்டு வருகின்றன.


1. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருத்தணி.

2. அருள்மிகு நவநீதேசுவரர் திருக்கோயில், சிக்கல். நாகப்பட்டினம் வட்டம், தஞ்சை மாவட்டம்.

3. அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில், வைத்தீசுவரன் கோயில், சீர்காழி வட்டம், தஞ்சை மாவட்டம்.

4. அருள்மிகு சீனுவாசப் பெருமாள் திருக்கோயில், நாச்சியார் கோயில், கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம்.

5. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.



6. அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி.

7. அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி.

8. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.

9. அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் திருக்கோயில் அய்யன்பாளையம், பல்லடம் வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.

10. அருள்மிகு திருமலைக் குமாரசுவாமி திருக்கோயில், பண்பொழில், தென்காசி வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.

**சிறுவர் காப்பகங்கள்:—**பள்ளிப் பருவத்தை அடைவதற்கு முன்பே தாய் தந்தையரை இழந்து வாடும் சிறுவர்களுக்கும், காலையிலேயே தொழிலுக்குச் செல்லும் தாய் தந்தையரால் கவனிக்க முடியாத சிறுவர்களுக்கும் கீழ்க்காணும் 5 இடங்களில் சிறுவர் காப்பகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இங்கெல்லாம் சிறுவர்களுக்கு இந்து சமய நெறிமுறையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

1. அருள்மிகு வேதநாராயணப் பெருமாள் திருக்கோயில், திருநாராயணபுரம், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம்.

2. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், குமாரவயலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3. அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், காரமடை, அவினாசி வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.

4. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், இளம்பிள்ளை, சேலம் மாவட்டம்.

5. அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில், பழனி.

**முதியோர் இல்லம்:** சென்ற ஆண்டில் திருக்கோயில்களின் மிகை நிதியிலிருந்து முதியோருக்காக இல்லம் நடத்தும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு, அதனடிப்படையில் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் சார்பில் 30 முதியோர்களைச் சேர்த்துக்கொள்ள வழிவகை மேற்கொள்ளப்பட்டு, இவ்வில்லம் 15—2—1973-லிருந்து செயல்பட்டு வருகிறது. தற்போது மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயில், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிர

மணியசுவாமி திருக்கோயில் ஆகிய இரு திருக்கோயில்களின் சார்பில் 20 பேர்களைப் பேணிக் காக்கும் இரண்டு இல்லங்கள் 15—3—1973 முதல் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

**மருத்துவ மனைகள் :** வழிபாட்டுக்காக வரும் பயணிகள் உட்படப் பொது மக்களின் நலனுக்காக மருத்துவ மனைகளையும், மருந்தகங்களையும் தொடங்க வேண்டியதன் அவசியம் கருதி 23 சித்த வைத்திய மருத்துவ மனைகளும், ஆங்கில முறை மருத்துவ மனை ஒன்றும் திருக்கோயில்களின் சார்பில் நடத்தப்படுகின்றன. சித்த வைத்திய மருத்துவ மனைகளின் அவசியம் காரணமாக இன்னும் அதிகமான அளவில் இவைகளைத் துவக்க வேண்டுமென்று திருக்கோயில் அறங்காவலர்களுக்கும், நிருவாக அலுவலர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**நூலகங்கள்**—பொது அறிவினை வளர்ப்பதோடன்றி இந்து சமய நெறியினை நன்குணர்ந்து பயன்பெறும் வகையில் 204 திருக்கோயில்களில் நூலகங்கள் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன. மேலும் நிதி வசதியுள்ள திருக்கோயில்களில் நூலகங்களைத் தொடங்கத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**வழிபடுவோருக்கான வசதிகள்:** அருள் தலங்கள் என்று போற்றப்பட்டு நாடோறும் பெருகிவரும் வழிபாட்டுப் பயணிகள் கூடுகின்ற திருக்கோயில்களின் சார்பில் வழிபாட்டுப் பயணிகள் மற்றும் வழிபடுவோர்களின் நலனுக்காக ஓய்வு விடுதிகளையும், பயணிகள் விடுதிகளையும் கட்டும் திட்டம் ஒன்று இருந்து வருகிறது. இத் திட்டத்தின் கீழ்ப் பல்வேறு திருக்கோயில்களின் சார்பில் வேலைகள் மேற்கொள்வதற்கான வகையில் மதிப்பீடுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களின் மிகை நிதியிலிருந்து சென்ற ஆண்டில் இரு பெரும் சமுதாய நற்பணிகளுக்காக ஒரு பெருந்தொகை செலவிடப்பட்டது. அவற்றில் ஒன்று பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதிக்காகத் திருக்கோயில்கள் நிருவாகிகள் தாங்களே முன்வந்து ரூ. 3,49,616,00 அளித்துத் தம் பங்கினையாற்றியுள்ளனர்.

விழியற்றோருக்குக் கண்ணொளி வழங்கும் திட்டத்தின்கீழ்ப் பல வேறு இடங்களில் திருக்கோயில்களின் சார்பில் ரூ. 2,27,552,00 கொடுக்கப்பட்டதுடன் திருக்கோயில்களுக்குச் சொந்தமான இடத்திலும் இத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் மிகைநிதி மிகுந்த திருக்கோயில்களின் சார்பில் ஏழை எளிய மக்களுக்கு இலவசமாகத் திருமணம் செய்து வைக்கப்படும் திட்டம் சென்ற ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனடிப்படையில், திருக்கோயில்களின் வருவாய்க்குத் தக்க வகையில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்குக் குறையாமல் இலவசத் திருமணங்களைச் செய்விக்கவும், ஒரு திருமணத்திற்கு ரூ. 150-க்கு மிகாமல் செலவழிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மணமக்களுக்கு இத் தொகையிலிருந்து, வேட்டி, புடைவை, தாலி முதலியவை இலவசமாக அளிப்பதுடன் திருமணமும் திருக்கோயிலிலேயே நடத்தி வைக்கப்படுகிறது. ஏழை எளியோருக்கு உதவும் இந்தத் திட்டம் பொது மக்களிடையே நல்ல வரவேற்பினைப் பெற்று வருகிறது.


# சிமெண்ட் உபயோகிப்போர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் தற்போது அமுலில் இருக்கும் மின்வெட்டு, சிமெண்ட் உற்பத்தியையும், வினியோகத்தையும் பாதித்துள்ளது. இதனால் அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகள் உங்கள் சிமெண்ட் தேவையை உடனடியாகவும், முழுமையாகவும் நிறைவேற்ற இயலாத நிலையில் இருக்கிறார்கள். இதன் விளைவாக உங்கள் அவசரத் தேவையை முன்னிட்டு, அங்கீகாரம் பெறாத விற்பனையாளர்களிடமிருந்து நீங்கள் சிமெண்ட் வாங்க முற்படலாம். இதனால் நீங்கள் நிர்ணயித்த விலைக்குமேல் கொடுப்பதுடன், கலப்பட சிமெண்ட் வாங்கவும் நேரிடலாம்.

உங்கள் நலனை முன்னிட்டு, எப்போதும் அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடமிருந்தே சிமெண்ட் வாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடம், தயாரிப்பாளர்களால் அளிக்கப்பட்டுள்ள ஸ்டாக்கிஸ்டு சர்டிபிகேட்டும் விலைப்பட்டியலும் உள்ளன. அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகள் சிமெண்ட் வாங்குபவர் ஒவ்வொருவருக்கும் அவரவர் வாங்கிய சிமெண்ட் அளவு, விலை இவை குறித்துள்ள காஷ் மெமோ அல்லது பில் கொடுப்பார்கள்.

உங்கள் தேவையை ஸ்டாக்கிஸ்டுகள் உடனுக்குடன் பூர்த்தி செய்ய முடியாவிட்டால் உங்கள் தேவைக்கு அவர்களிடம் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள். அவர்களும் அதே வரிசைக்கிரமமாக உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வார்கள்.

அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடமிருந்து அசல் சிமெண்டை நிர்ணயித்த விலைக்கே பெறுங்கள்.

பொதுமக்களின் நலனை உத்தேசித்து வெளியிட்டோர் :

**இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்,**

**175/1, மவுண்ட் ரோடு, சென்னை-2.**

SANKAR I C CEMENT

சங்கர் சிமெண்ட்

# கேளுங்கள்? கொடுக்கப்படும்!

வினா.— 'கனகாம்பரம்' மலர்ச் செடியை எப்பொழுது பயிரிடலாம்? பயிரிடும்முறை, பலன்தரும் வயது, ஒரு ஏக்கர் நடவு செய்தால் பலன் கிட்டும் வரை ஆகும் செலவு, அதனால் கிட்டும் இலாபம் எவ்வளவு என்பவைகளைத் தெளிவு படுத்தும்படிக் கேட்டுக் கொள்கிறேன். கனகாம்பரம் விதையை எங்குப் பெறலாம் என்பதையும் தெளிவு படுத்திடுங்கள்.

—முல்லை வேந்தன்,
அண்ணா இல்லம்,
பயர்நத்தம்,
நத்தம் (அஞ்சல்),
தருமபுரி மாவட்டம்.

விடை : 'ஆரஞ்சு நிறக் கனகாம்பரத்தை ஆடிப் பட்டத்தில் நடுவதே சிறந்தது. ஆனால் புரட்டாசி, ஐப்பசி மாதங்களிலும் நடவு செய்யலாம்.

மஞ்சள் அல்லது சிவப்பு நிறமுள்ள 'டில்லி' கனகாம்பரத்தைச் சூன் முதல் டிசம்பர் வரை நடவு செய்யலாம்.

கனகாம்பரம் பயிரிட நல்ல வடிகால் வசதியுடைய செம்மண் பூமி அல்லது மணல் கலந்த செம்மண் பூமி மிகவும் ஏற்றது. களிமண் பூமிக்குக் கனகாம்பரம் ஏற்றதல்ல!

'ஆரஞ்சு' நிறக் கனகாம்பரம், விதைகள் மூலம் பயிரிடப் படுகின்றன. ஒருஏக்கர் 'ஆரஞ்சு நிறக் கனகாம்பரம் பயிரிட 2 கிலோ விதையை 1½ சென்ட் நிலத்தில், உயரமான பாத்திகள் அமைத்து விதைக்க வேண்டும். நாற்றுகளை 60 நாட்களில் பறித்து நடவு செய்யவேண்டும்.

•

ஆரஞ்சு நிறக் கனகாம்பரம் பயிரிட ஏக்கருக்கு 50 வண்டி தொழு எரு இட்டு, நிலத்தை 4 அல்லது 5 தடவை நன்கு உழுது மண்ணுடன் நன்கு கலக்கச் செய்து, 2 அடிக்கு ஒரு பார் வீதம் பிடிக்க வேண்டும். நீர் பாய்ச்சிய பிறகு 1 அடிக்கு ஒரு நாற்று வீதம் நடவேண்டும். ஒரு ஏக்கருக்கு 22,000 நாற்றுகள் தேவைப்படும்.

'டில்லி'க் கனகாம்பரத்தைக் குச்சிப் பதியங்கள் மூலமாகவே பயிரிட வேண்டும். வரிசைக்கு வரிசையும், செடிக்குச் செடியும் 3 அடி இடைவெளிவிட்டு, குழிகளில் டில்லிக் கனகாம்பரத்தின் பதியத்தை நடவேண்டுமாதலின், இதற்குத் தகுந்தவாறு குழிகள் தோண்ட வேண்டும். குழிகள் 1½ அடி நீளமும், அகலமும், ஆழமும் உள்ளவைகளாக இருக்க வேண்டும். குழிகள் தோண்டிய 10 நாட்களுக்குப் பிறகு, ஒவ்வொரு குழியிலும் 10 கிலோ தொழு எருவையும், மேல் மண்ணையும் கலந்து நிரப்பித் தண்ணீர் விடவேண்டும். நிரம்பிய குழிகளில் தண்ணீர் பாய்ச்சுவதால் சற்றுப் பள்ளம் ஏற்படும். மேலும் மண்ணைப் போட்டுக் குழிகளை நன்கு நிரப்ப வேண்டும். 3 அல்லது 4 நாட்களுக்குப் பிறகு குழிகளில் பதியங்களை நட்டுத் தண்ணீர் விட வேண்டும்.

நட்ட மூன்று நாட்கள் கழித்துத் தவறாமல் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இதனால் வேர்கள் வளரும். பிறகு வாராவாரம் ஒருமுறை நீர்பாய்ச்சினால் போதுமானது. பூப்பூக்கும் காலங்களில் 5 நாட்களுக்கு ஒருமுறை நீர் பாய்ச்சுதல் அவசியம். தேவைப்படும் பொழுது களை எடுக்க வேண்டும்.

கனகாம்பரம் நடவு செய்த 3 மாதங்களுக்குப் பிறகு, ஏக்கருக்குப் பின்கண்ட அளவு உரமிட வேண்டும்.

அமோனியம் சல்பேட்—125 கிலோ.

சூப்பர் பாஸ்பேட்—120 கிலோ.

மியூரியேட் ஆப் பொட்டாஷ்—75 கிலோ.

இவ்வுரங்களைக் கனகாம்பரச் செடிகளைச் சுற்றிலும் போட்டு, நிலத்தைக் கொத்திவிட்டு, செடிகளைச் சுற்றி மண் அணைத்துத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பிறகு 6 மாதங்களுக்கு ஒருமுறை மேற்கூறிய அளவில் உரமிட்டு வரவேண்டும்.

வேர் அழுகல் நோய் கனகாம்பரத்தைத் தாக்கும் இந்நோய் தாக்கினால், கனகாம்பர செடிகளைச் சுற்றிலும் செரசான் மருந்து கலந்த நீரை (1 கிராம் நனையும் செரசான் மருந்துக்கு 1 லிட்டர் தண்ணீர் வீதம் எடுத்துக் கொண்டு நன்கு கலக்கி) ஊற்றி மண்ணை நனைக்க வேண்டும். இலைகளைத் துளைக்கும் புழுக்களும், சாம்பல் நிற வண்டுகளும் தாக்கினால் 100 மில்லி லிட்டர் பாரத்தியான் மருந்தை 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

நடவு செய்த 3 மாதங்களுக்குப் பிறகு கனகாம்பரம் பூக்க ஆரம்பிக்கும். பூக்களை ஒருநாள் விட்டு ஒருநாள் அதிகாலையில் பறிக்க வேண்டும். காய்ந்த பூங்கொத்துகளை அவ்வப் பொழுது அகற்றிவிட வேண்டும்.

'ஆரஞ்சு'க் கனகாம்பரச் செடிகள் 2 ஆண்டுகள் வரை தொடர்ந்து நல்ல மகசூல் கொடுக்கும். அதன்பிறகு மகசூல் குறைவதால், செடிகளை அகற்றிவிட வேண்டும்.

'டில்லி'க் கனகாம்பரம் பல ஆண்டுகள் வரைத் தொடர்ந்து பூத்துப் பலனளித்துக் கொண்டிருக்கும்.

'ஆரஞ்சு'க் கனகாம்பரம் பயிரிட ஒரு ஏக்கருக்கு, 2 ஆண்டுகளுக்கு ரூபாய் 3,000 செலவாகும். ஒரு ஏக்கரிலிருந்து 2 ஆண்டுக் காலத்தில் 4,000 கிலோ பூக்கள் கிடைக்கும். அவைகளை விற்பதனால் 9,000 முதல் 12,000 ரூபாய் வரை வருவாய்கிடைக்கக் கூடும். எனவே, 'ஆரஞ்சு'க் கனகாம்பரம் பயிரிடுவதால் 2 ஆண்டுக் காலத்தில் ஒரு ஏக்கரிலிருந்து 6,000 முதல் 9,000 ரூபாய் வரை நிகர இலாபம் பெறலாம்;

டில்லிக் கனகாம்பரம் பயிரிட முதலாண்டில் ஏக்கருக்கு ரூபாய் 8,000 செலவாகும். பிறகு ஆண்டிற்கு ரூபாய் 2,000 செலவாகும். இந்த ரகம் ஏக்கருக்கு ஆண்டு தோறும் 2,500 கிலோ பூக்கள் கொடுக்க வல்லது. டில்லிக் கனகாம்பரப் பூக்கள் அதிக விலைக்கு விற்பனையாவதால், ஆண்டு தோறும் ஒரு ஏக்கர் டில்லிக் கனகாம்பரத்திலிருந்து 7,000 முதல் 8,000 ரூபாய் வரை நிச்சயமாக நிகர இலாபம் பெறமுடியும்.

ஆரஞ்சுக் கனகாம்பரத்தின் விதைகள் அல்லது டில்லிக் கனகாம்பரத்தின் குச்சிப்பதியங்களைக் கோயம்புத்தூர், துடியலூர், மதுரை, பூந்தமல்லி, தருமபுரி ஆகிய இடங்களில் உள்ள நம்பிக்கையான கனகாம்பரச் சாகுபடியாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதே சிறந்தது.

• • •

வினா—நான் ஒரு ஏக்கர் நிலத்தில் வாழை பயிரிட்டுள்ளேன். வாழை பயிர் செய்து, ஒரு மாதம் ஆகிறது. சாதி—மோரிஸ் வாழை. நிலத்தின் தன்மை—கரிசலுடன் கூடிய வண்டல் மண். தாங்கள் இதற்கு எந்தெந்த முறைகளில் உரம்போட வேண்டும் என்பதையும், எந்தச் சமயத்தில் என்னென்ன உரம் வைக்க வேண்டும் என்பதையும், தண்ணீர் பாய்ச்ச வேண்டிய முறையையும் தெரிவிக்க வேண்டுகிறேன். இறைவை மூலம்தான் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அதனால் மேற்படி விவரங்களைத் தெரிவிக்க வேண்டுகிறேன். கடன் வழங்கப் படுமா என்பதையும் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன்.

—த. பாண்டியன்,
திருச்சிற்றம்பலம்,
சுந்தரபாண்டியபுரம்,
தென்காசி.

விடை—தாங்கள் பயிர் செய்துள்ள 'மோரிஸ்' வாழைக்குக் கன்று நட்ட 3-வது மாதத்தில் ஒருமுறையும், 5-வது மாதத்தில் மறுமுறையுமாக இரண்டு முறை உரமிட வேண்டும். வாழைக்கன்று நட்டு 5 மாதம் முடிந்த பிறகு உரமிடுவது நிறைந்த பலன் தராது.

கன்று நட்ட 3-வது மாதத்தில் ஒவ்வொரு வாழைக்கும் கீழ்க்கண்ட அளவு உரமிட வேண்டும்,

தொழுஎரு—12 கிலோ.
அமோனியம் சல்பேட்—800 கிராம்.

சூப்பர் பாஸ்பேட்—250 கிராம்.

மியூரியேட் ஆப் பொட்டாஷ்—310 கிராம்.

கடலைப் பிண்ணாக்கு—140 கிராம்.

மேற்கூறிய இரசாயன உரங்கள் கிடைக்காவிட்டால், 8-ஆம் எண் கலப்பு உரத்தில் (6:6:18), ஒவ்வொரு வாழைக்கன்றுக்கும் 415 கிராம் வீதம் (ஏக்கருக்கு 1,440 கன்றுகள் நட்டிருந்தால்) வைக்க வேண்டும். இந்த அளவில் உரமிட ஏக்கருக்கு 600 கிலோ கலப்பு உரம் (6:6:18) தேவைப்படும்.

கன்று நட்ட 5-வது மாதத்தில் ஒவ்வொரு வாழைக்கும் கீழ்க்கண்ட அளவு உரமிட வேண்டும்;—

தொழு எரு—12 கிலோ.
அமோனியம் சல்பேட்—150 கிராம்.

மியூரியேட் ஆப்பொட்டாஷ் 310 கிராம்.

கடலைப் பிண்ணாக்கு—140 கிராம்.

மேற்கூறப்பட்ட தனி இரசாயன உரங்கள் கிடைக்கா.

மேற்கூறப்பட்ட தனி இரசாயன உரங்கள் கிடைக்காவிட்டால், 9-ஆம் எண் கலப்பு உரத்தில் (10:0:30), ஒவ்வொரு வாழைக்கன்றுக்கும் 520 கிராம் வீதம் வைக்க வேண்டும். இந்த அளவில் உரமிட ஏக்கருக்கு 750 கிலோ கலப்பு உரம் (10:0:30) தேவைப்படும்.

உரமிடுவதற்கு வாழைக் கன்றுகளைச் சுற்றிலும் 2 முதல் 3 அடி சுற்றளவிற்கு, 4 அங்குல ஆழமுள்ள பள்ளம் தோண்டி அதில் உரங்களை இட்டு, மண்ணால் மூடித் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். உரமிட்டவுடன் கண்டிப்பாகத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

தாங்கள் மோரிஸ் வாழைக்கு 4 நாட்களுக்கு ஒருமுறையோ அல்லது வாரம் ஒருமுறையோ—மண்ணில் உள்ள ஈரத்திற்குத் தகுந்தவாறு—தண்ணீர் பாய்ச்சுதல் வேண்டும். மோரிஸ் வாழை 11 முதல் 12 மாதப் பயிராகையால், இந்த ரகத்திற்கு 50 முதல் 90 முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். மழையின் அளவுக்கும் மண்ணின் தரத்திற்கும் ஏற்ப தண்ணீர் கட்ட வேண்டிய முறைகள் குறையும். மழைக் காலங்களில் தண்ணீர் பாய்ச்ச வேண்டியதில்லை. மோரிஸ் வாழை பயிரிட்டுள்ள நிலத்தில் தண்ணீர் தேங்கி நிற்கத் கூடாது! தண்ணீர் தேங்கி நிற்குமானால் வாழைக்குத் தீங்கு ஏற்பட்டு மகசூல் குறையும்! வடிகால் வசதிகளை ஏற்படுத்தி, தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்வது மிகவும் முக்கியமாகும்.

மோரிஸ் வாழை சாகுபடி செய்யும் உழவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏக்கருக்கு ரூபாய் 1,000 வரை கடன் கொடுத்து உதவுகின்றன. நாட்டுடைமையாக்கப்பட்ட வணிக வங்கிகளும் கடன் கொடுத்து உதவுகின்றன. கடன் உதவி பெற உங்கள் ஊராட்சி ஒன்றியக் கூட்டுறவு வளர்ச்சி அலுவலர் அவர்களையும், துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களையும் கலந்தாலோசியுங்கள்.

• • •

வினா—ஐ.ஆர். 24 நெல் ரகத்தின் மொத்த வயதென்ன? அதற்கு இடவேண்டிய, அடியுர, மேல்உர அளவுகளைக் கூறவும். இந்த ரகத்திற்கு நோய்களைத் தாங்கும் சக்தி உண்டா? இது சன்ன ரகமா? மோட்டா ரகமா? இந்த ரகம் எந்தெந்த இனங்களைச் சேர்த்துக் கண்டு பிடிக்கப்பட்டது?

—கே. ஆர். இலக்குமிநாராயணன்,
அமைப்பாளர்,
உழவர் விவாதக் குழு,
கடையம் (அஞ்சல்),
நெல்லை மாவட்டம்,

### கோ—1 பப்பாளி

கோ—1 பப்பாளிப் பழங்கள், பூப்பூத்த 130 முதல் 132 நாட்களில் அறுவடைக்கு வரும். அறுவடை செய்த பிறகு, 4 நாட்கள் வரை பப்பாளிப் பழங்களை வீட்டின் வெப்ப நிலையிலேயே கெடாமல் வைத்திருக்கலாம்.

விடை—ஐ. ஆர். 24 ரக நெல்லின் மொத்த வயது 120 நாட்கள். இந்த ரகத்திற்கு ஐ.ஆர். 8 நெல் ரகத்திற்குப் பரிந்துரைக்கப்படும் அளவிலேயே அடியுரமும், மேலுரமும் இடலாம். அதாவது 45 கிலோ தழைச்சத்து, 35 கிலோ மணிச் சத்து, 35 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாகவும், 30 கிலோ தழைச் சத்தை மேலுரமாகவும் இடலாம். இந்த ரகம் கொலை நோய், இலைக்கருகல் நோய் ஆகியவைகளைச் சுமாரான அளவிற்குத் தாங்கிக் கொள்ளும் சக்தி வாய்ந்தது. பச்சைத் தத்துப் பூச்சிகளின் தாக்குதலை ஐ.ஆர். 24 நன்கு தாங்கிக் கொள்ளும்! குருத்துப் பூச்சியின் தாக்குதலையும் ஐ.ஆர். 24 ஓரளவிற்குத் தாங்கிக்கொள்ளும் ஆற்றல் வாய்ந்தது!

இதன் அரிசி நீண்டதாகவும், சன்னமாகவும், படிகம் போன்றும் இருக்கும். 'அமைலோஸ்' என்னும் ஒருவகை மாவுப் பொருள் இந்த ரகத்தில் குறைவாக உள்ளது. இதனால் ஐ.ஆர். 24 அரிசியின் சோறு சிறந்த தரம் உள்ளதாகக் கருத்தப்படுகிறது. ஐ.ஆர். 8. அரிசியின் சோறு பிசுபிசுப்பாகவும், மொத்தமாகவும், பழைய சோற்றுக்கு ஏற்றதல்லாததாகவும் உள்ளது. ஆனால், ஐ.ஆர். 24 அரிசியின் சோறு பிசுபிசுப்பின்றியும், சன்னமானதாகவும், நீண்ட நேரம் கெடாமல் இருந்து பழைய சோறாக வைத்துக் கொள்வதற்கு ஏற்றதாதகவும், இருக்கிறது. எனவே இந்த ரகம் பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் பெரும்புகழ் பெற்றுள்ளதுடன், அதிக விலைக்கும், விற்கப்படுகிறது. நம் நாட்டிற்கு இந்த ரகம் ஏற்றதாக இருக்கக்கூடும். இந்த ரகம் பற்றிய சோதனைகள் இன்னும் நம்நாட்டில் முற்றுப் பெறவில்லையாதலின், ஐ.ஆர். 24 நெல் ரகம் இன்னும் நம் நாட்டில் பெருமளவில் உழவர்களுக்கு வழங்கப்படவில்லை.

ஐ.ஆர். 8. என்ற ரகத்தையும், ஐ.ஆர். 127-2-2 என்ற சோதனை ரகத்தையும் ஒட்டுச் சேர்த்து உருவாக்கப்பட்டதே ஐ.ஆர். 24. நெல் ரகம். (ஐ.ஆர். 127-2-2- என்ற ரகம் 'சென்சுரி பாட்னா 231 எஸ்.எல்.ஒ. 17' என்ற ரகத்தையும், 'சிகாதிஸ்' என்ற ரகத்தையும் ஒட்டுச் சேர்த்தால் கிடைத்ததாகும்).

ஐ.ஆர். 24. நெல் ரகம் பரிசோதனைகளில் எக்டேருக்கு 7·5 மெட்ரிக் டன்வரை மகசூல் கொடுத்துள்ளதாகத் தெரியவருகிறது. தமிழ்நாட்டில் இந்த ரகம் இன்னும் பரிசோதனை நிலையிலேயே உள்ளது.

* * *

வினா—ஒரு ஏக்கர் கே.1 மிளகாய் நட எவ்வளவு உரம் இடவேண்டும்?

வி. ராமசாமி,
அத்தியூர்,
திருச்சி மாவட்டம்.

விடை—ஒரு ஏக்கர் கே.1 மிளகாய் நடவு செய்ய 150 கிலோ சூப்பர் பாஸ்பேட்டையும், 40 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷையும் அடியுரமாக இடவேண்டும். மேலுரமாக மிளகாய்க் கன்றுகள் நட்ட 30-வது, 60-வது, 90-வது நாட்களில் ஒவ்வொரு முறையும் 80 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 35 கிலோ யூரியாவை இடவேண்டும்.

—ஆர். எம்.

# முதல்வர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் பரிசுகள்!

முதல்வர் கலைஞர் அவர்களின் 48-வது பிறந்த நாளான 3-6-1971 அன்று கொண்டுவரப்பட்டது பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம். அத்திட்டத்தின் கீழ் இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள்.

| | |
|---|---|
| திறக்கப்பட்ட தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் மறு வாழ்வு இல்லங்கள் ... | 6 |
| திறக்கப்பட இருக்கும் மறு வாழ்வு இல்லம் ... | 1 |
| கட்டப்பட்டு முடியும் தறுவாயில் உள்ள மறுவாழ்வு இல்லங்கள் ... ... | 3 |
| தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள செலவு | 96 இலட்சரூபாய் |
| பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காகச் சேர்ந்துள்ள நிதி ... ... | 1·6 கோடிரூபாய் |

நாற்பத்தொன்பதாவது பிறந்த நாளான 3-6-1972 அன்று உருவாகிய திட்டம் இலவசக் கண்ணொளி வழங்கும் திட்டம். அத்திட்டத்தின் கீழ் இதுவரை (26-5-73) ஏற்பட்டுள்ள முன்னேற்றம்.

| | |
|---|---|
| 1 நடத்தப்பெற்ற இலவசக் கண் சிகிச்சை முகாம்கள் ... ... | 89 |
| 2 புற நோயாளிகளாகச் சிகிச்சை பெற்றவர்கள் ... ... | 2,87,666 |
| 3 கண்புரை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்கள் ... | 43,260 |
| 4 இலவசமாக மூக்குக் கண்ணாடி பெற்றவர்கள் ... ... | 43,260 |
| 5 சிறு அறுவைச் சிகிச்சை பெற்றவர்கள் ... | 761 |
| 6 இலவசக் கண் சிகிச்சை முகாம்களுக்கு செலவிடப்பட்டுள்ள முன்பணம் ... ... | ரூ. 28,82,916 |
| 7 கண்ணொளி வழங்கும் திட்டத்திற்கு 11-5-1973 வரை சேர்ந்துள்ள நிதி. | ரூ. 46,91,497·51 |

ஐம்பதாவது பிறந்த நாளான 3-6-1973 அன்று முதல்வர் அவர்கள், மனிதனை மனிதன் இழுத்துப் பிழைக்கும் இழிநிலை இருக்கக் கூடாது என்பதற்காக, கை ரிக்ஷாவுக்குப் பதிலாக இலவசமாக சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டத்தைத் துவக்கிவைக்கிறார். இத்திட்டத்தின் முதற் கட்டமாக 845 கை ரிக்ஷாக்காரர்களுக்கு இலவசமாக சைக்கிள் ரிக்ஷா வழங்கப்படும்.

இத்திட்டங்களுக்கெல்லாம் நிதி வழங்குவதே, ஆதரவற்றவர்களையும், அனாதைகளையும் வாழவைக்கும் அருந்திட்டங்களை ஊக்குவிக்கும் தொண்டாகும்.

# வேளாண்மை வெண்பா

இலமென்று சோம்பி இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகுமாம்—நலமெல்லாம்
பார்த்திடவே வள்ளுவனின் பாதையிலே சென்றென்றும்
ஏர்த்தொழிலைச் செய்வோம் இனிது.

அகல உழுவதிலும் ஆழவுழு என்றே
புகலும் பழமொழியைப் போற்றி—மிகமுறையாம்
ஓராறு சால்கள் உழுது நடும்பயிர்கள்
வேரோடி ஓங்கும் விரைந்து.

நாற்றை அடித்து நடுவில் ஒடிக்காமல்
சேற்றை அலசுதல் செம்மையாம்—ஏற்றவிதம்
பட்டம் பிடித்தழகாய்ப் பக்குவமாய் நாற்றுதனை
நட்டால் பயிர்செழிக்கும் நன்கு.

நட்டபின்னே போய்வயலை நாடோறும் பாராமல்
விட்டுவிட்டால் எல்லாமும் வீணாகும்—மட்டில்லாத்
தாளாண்மை யோடு தகுந்ததிறம் உள்ளாரே
வேளாண்மை செய்வது மேல்.

புதிய உரவகையைப் போட்டாலே நல்ல
விதமாக யாவும் விளையும்—இதுநாள்
அறிவியலைக் கொண்டிங்கே ஆக்கம் திரட்டும்
நெறிநின்றால் சேரும் நிறைவு.

குறைந்த வயது குறையா மகசூல்
நிறைந்த பயன்தரும் நெல்லாம்—சிறந்திருக்கும்
ஐ.ஆர் இருபதை ஆர்வமுடன் போட்டாலே
பொய்யில்லை நம்மிடர்கள் போம்.


பொன்னியைத் தாளடியில் போட்டுப் பெருமகசூல்
தன்னையே காணல் தகுந்ததாம்—பின்னை
பருத்தி பயிர்செய்தால் பற்றாக் குறையைத்
துரத்தி விடலாம் தொடர்ந்து.


சிறந்த வருவாய் செலவின்றிக் கோடை
பிறந்தால் பயற்றால் பெறலாம்—எறிந்தால்
அழுந்து விதத்தில் அறுவடைக்கு முன்னே
உழுந்து விதைத்தல் உயர்வு

மாவுக் கிரண்டுபடி விதம் பயறுதனை
மேவும் விதத்தில் விதைத்தாலோ—பூவுடன்
பிஞ்சுவைக்கும்; காய்க்கும்; பெருவருவாய் கிட்டும்நம்
நெஞ்சுவக்கும் இன்பம் நிறைந்து.

பொன்செய்யும் சோளம் புதுக்கம்பு கேழ்வரகு
புன்செய் நிலமெல்லாம் போட்டிடுவோம்—நன்செய்
நிலத்தில் பலவகை நெல்விளைப்போம்; நாட்டின்
நலத்தைப் பெருக்கிடுவோம் நாம்.

ஏர்ப்படைகள் கொண்டுநாம் எந்நாளும் போராடி
ஆர்ப்பரிப்போம் நெற்குன்றில் ஆங்காங்கு—போர்க்களத்தில்
பற்றாக் குறையாம் பகையொழிப்போம் வேளாண்மை
வெற்றி பெறுவோம் மிகுந்து.



மருதங்குடி வெங்கடேசன்

# ஓடத்தில் இரண்டு திசைகள்

டி.என்.சுகிசுப்பிரமணியன்

'கையளவு இதயத்தில் கடலளவு ஆசைகள், ஆவல்கள், ஆசாபாசங்களின் அலை வீச்சுகள், இமயம் போல் உயர்ந்திருக்க வேண்டிய இதயத்துள் ஏற்றத் தாழ்வுகள், மான அவமானக் குறுக்கீடுகள் எப்படி வந்திருக்க முடியும்? ஏன் வர வேண்டும்?' என்றெல்லாம் சிந்தித்தபடி வீடு நோக்கிப் புறப்படுகிறாள் ராதை.

செண்பகா மில்லின் சட்ட ஆலோசகன் பதவி மணிவாசகத்திற்குக் கிடைக்கப் போவதில்லை. மணிவாசகன் மேல் பிறந்த வெறுப்போ அல்லது தன் மருமகன் ரோமியோவின் மேல் எழுந்த அக்கறையோ—முத்தையாவின் மனப்போக்கிற்கு எது காரணமாக இருந்தாலும் முடிவு ஒன்றுதான்.

மணிவாசகனுக்குச் சட்ட ஆலோசகன் பதவி இல்லை. இனிமேலும் வரப்போவதில்லை. இது பெரிய அதிர்ச்சி; அருவியைப் போல ஓடும் தன்மை கொண்டது. இதன் அடிப்படையில் பிறக்கும் அவமானம் கடல் போன்றது. மணிவாசகன் எவ்வாறு இக் கடலினைத் தாங்கிக் கொள்ளப் போகிறான்? அதுவும், அதே ஆலையில் நர்மதா டாக்டராகத் தொழில்புரியப்போகிறாள்? அந்தப் பணத்தில் ராதையைச் சட்டப் படிப்பும் படிக்க வைக்கப் போகிறாள்? அடிபட்ட ஆண் மனத்துள் எழும் புயலின் உறுமலை, போராட்டத்தின் உச்சத்தை அமைதிப்படுத்தும் வழிதான் எது?

அன்பு மனம் படைத்த ராதைக்கு ஏதும் விளங்கவில்லை.

மணிவாசகனின் கல்விக்குத் தோள் கொடுத்தாள்; திருமணம்? இதற்கும் தன்னையே தத்தம் செய்து ராதையால் வெற்றிபெற முடிந்தது! உயர்பதவியை வாங்கித் தரும் சிறு முயற்சியில் அவளால் வெல்ல முடியும். ஆனால் அதுவரை மணிவாசகன் அமைதியாக இருப்பானா? ஆண் வர்க்கத்திற்கே விழுந்த அவமானத்தின் பேரிடியாகக் குமுறுவானே ....! கொந்தளிப்பானே ....!

''அப்பா இல்லையே!'' என்று வேதனையோடு எண்ணிப் பார்க்கிறாள் ராதை. எத்தனை பெரிய சிக்கலையும் சிரமம் ஏதுமின்றிச் சிரித்த முகத்தோடு தீர்த்து வைக்கும் அனுபவசாலியான அப்பா இன்று இருந்திருந்தால் இந்தப் பிரச்சினையையும் எளிதில் தீர்த்திருப்பாரே என்று எண்ணுகிறாள். பாவம், பாண்டித்துரை உயிரோடு இருந்திருந்தால் மணிவாசகனின் வேலைவாய்ப்புப் பற்றிய பிரச்சினையே எழுந்திருக்காது என்பதை உணர அவளது பேதை மனத்துக்குத் தோன்றவில்லை.

முத்தையாவின் அடையாற்றுப் பங்களாவிலிருந்து புறப்பட்ட ராதை, நெடுஞ்சாலைக்கு வந்து நீண்ட நேரம் வாடகைக் காருக்காகக் காத்து நிற்க வேண்டியதாயிற்று. வெய்யிலின் கொடுமை வேதனையின் தீவிரம் எல்லாமாகச் சேர்ந்து அவள் அறிவே மயங்கி விழக்கூடிய நிலைதான். தொலைவிலிருந்து வந்து கொண்டிருக்கும்

## 13. வழியில் வந்த டாக்சி

வாடகைக் கார் ஒன்றைக் கை தட்டி நிறுத்த முனைகிறாள் ராதை. ஆனால் வண்டி அவளருகே வந்த பிறகுதான் ஆணும் பெண்ணுமாக இருவர் வண்டிக்குள் அமர்ந்திருப்பதைக் காண முடிகின்றது. ....'மன்னிக்கவும் .... நீங்கள் போகலாம்' என்று கூறிவிட்டு மீண்டும் நடைபாதைக்கு வந்து நிற்கிறாள் ராதை.

பதைபதைக்கும் வெய்யில் வேளையில் பரபரப்பாகப் புறப்பட்டு வந்திருக்கும் இந்தப்பெண் யாரோ எவரோ ....இவளுக்கு என்ன அவசரமோ என்று ராதைக்காக இரக்கப்படுகிறாள், வண்டிக்குள் இருக்கும் பெண்மணி.

''உங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றால் எங்களுடன் வரலாம் .. நீங்கள் எங்கே போக வேண்டுமோ அங்கே இறக்கி விட்டு நாங்கள் போகிறோம்'' என்கிறாள் அந்தப் பெண்.

''மிக்க நன்றி .. உங்களுக்கு வீண் தொல்லை கொடுக்க வேண்டாம் என்று பார்க்கிறேன் .... நான் வேறு டாக்சி வைத்துக் கொண்டு போய்விடுகிறேன்'' என்கிறாள் ராதை.

''பரவாயில்லை, வண்டியில் ஏறிக் கொள்ளம்மா—உன் வீடு எங்கே?'' என்கிறார் பசுபதி.

காந்தி மண்டபம் பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள் டாக்டர் நர்மதாவின் தந்தை பசுபதியும், சிற்றன்னை சியாமளாவும். அவர்கள் யார் என்பதை ராதை அறிந்திருக்க நியாயமில்லை. ராதை யார் என்பதை அவர்களும் தெரிந்திருக்க, வழியில்லை ... அறிமுகம் ஆவதற்கு முன்னாலேயே ராதையின்மேல் சியாமளாவுக்கு அன்பு; பரிவு.

''ராஜா அண்ணாமலைபுரம் போகவேண்டும்'' என்று மறுமொழி கூறிய ராதை வண்டியின் முன்கதவைத் திறந்து டிரைவரின் பக்கத்தில் உட்காரப் போகும் சமயம், பசுபதிவண்டியை விட்டிறங்கி ''நீ பின்னால் உட்கார்ந்து கொள்ளம்மா'' என்று கூறிவிட்டுத் தானே முன்னால் வந்து உட்காருகிறார்.

வண்டிக்குள் உட்கார்ந்ததும், 'டிரைவர்! புதிய நபர் நான் வந்ததில் ஆட்சேபணை இல்லையே' என்று தயக்கத்துடன் கேட்கிறாள் ராதை.

''அரை ரூபாய் கூடுதலாகப் போட்டுக் கொடுத்துவிடுங்கள் அம்மா''

என்னும் வாடிக்கைப் பதில் அவனிடமிருந்து வருகிறது ..!

வண்டி அடையாற்றுப் பாலத்தில் அமைதியாக ஓடிக் கொண்டிருக்கிறது. சில்லென்ற ஆற்று நீரில் அலைமோதிச் சிலுசிலுத்துக் கொண்டுவரும் காற்று, ராதையின் உடலுக்கும் உள்ளத்துக்கும் சற்றே இதமளிக்கின்றது.

''அதுவரை கலகலப்பாகப் பேசிச் சிரித்தபடி வந்த தம்பதிகள், இப்போது இன்னொருபெண்

வந்து உட்கார்ந்ததும் இவ்வளவு அமைதியாக வரத் தொடங்குகிறார்களே! தன்னை ஒரு பொருட்டாக எண்ணவில்லையே'' என்ற வியப்பு டிரைவருக்கு!

ஓடுகிறது வண்டி. ஓடுகின்றன மனங்கள். ஆனால் ஓசை மட்டும் இல்லை. எங்கும் அமைதி. அந்த அமைதியான பயணம் ராதைக்குப் பிடிக்கவில்லை. எதையாவது பேசி, எதையாவது கேட்டு அமைதியைக் கலைத்தால்தான், மனச் சுமையின்றிப் பயணம் செய்ய முடியும். இல்லாவிட்டால் அவள் இதயத்தை அழுத்திக் கொண்டிருக்கும் பிரச்சினைகளின் சுமை தாங்காமல் அவள் மிகவும் திணறிப் போய்விடுவாள்.

நல்ல வேளையாகப் பசுபதி பேச்சைத் தொடங்குகிறார்.

'சியாமளா .. நாளைக்கு நாம் பார்க்க வேண்டிய இடம் ..?'' என்று ஏதோ ஆரம்பிப்பதற்குள் சியாமளா குறுக்கிட்டு,

''போதும் உங்கள் பரபரப்பு நம் திருமணம் முடிந்து தேனிலவுக்கா வந்திருக்கிறோம்? நீங்கள் வந்திருப்பது உங்கள் மகளின் கல்யாண விஷயமாக!'' என்று செல்லமாகக் கண்டிக்கிறாள்.

'சியாமளா' என்ற பெயர் ராதையின் இதயத்துள் சிலிர்ப்பைத் தருகிறது. மகளின் திருமணம் சம்பந்தமாக வந்திருக்கும் தந்தை—அவருடைய இளம் மனைவி சியாமளா ..

ஒரு கணம் தயங்கியபின் தன் ஆவலையும் மகிழ்ச்சியையும் கட்டுப்படுத்த முடியாமல் 'மன்னிக்கவும். நீங்கள் சிங்கப்பூர் பசுபதியா?' என்று கேட்டு விடுகிறாள் ராதை.

''ஆமாம் .. அறிமுகம் ஆவதற்கு முன்னாலேயே எப்படியம்மா அடையாளம் கண்டு கொண்டாய்?'' என வியப்புடன் வினவுகிறார் பசுபதி.

''அறிமுகம் ஆனால்தான் அடையாளங் காண முடியுமா? ஆளைப் பார்ப்பதற்கு முன்னாலே என்னை உங்கள் மகளாக ஏற்றுக் கொள்ளவில்லையா நீங்கள்?''

> **கோவில் நிலம் மீட்பு**
>
> தமிழகத்தில் தனியார் ஆக்கிரமிப்பில் உள்ள கோவில் நிலங்களை மீட்பதற்கு நியமிக்கப்பட்ட தனி அலுவலரின் முயற்சியால் இதுவரை 28 இலட்சம் ஏக்கர் நிலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதில் 20 ஆயிரம் ஏக்கர் நிலம் மீட்கப்பட்டுக் கோவில்களுக்கு உரிமையாக்கப்பட்டுள்ளது.

என்று கூறி மகிழ்ச்சியுடன் சிரிக்கிறாள் ராதை.

''நீ ராதையா ..?'' என உற்சாகத்துடன் கேட்கிறார் பசுபதி.

''ஆம் .. உங்கள் இளையமகள் ராதை!''

''என் மகள் நர்மதா மிகவும் அதிருஷ்டக்காரி''

''திறமைசாலிகள் அதிருஷ்டசாலிகளாக இருப்பார்கள். நர்மதா அக்கா திறமைசாலி என்பதை ஒப்புக் கொள்கிறேன். அவர்களுக்கு வந்திருக்கும் வாழ்வும் வளமும் அவர்களின் திறமையால் வந்தவைதாம்!''

''அவள் படிப்பு, அவள் பட்டம் .. அவள் பார்க்கப் போகும் வேலை இவற்றுக்கெல்லாம் அவளுடைய திறமை காரணமாக இருக்கலாம். ஆனால் அவளுக்கு அமையப் போகும் மணவாழ்வு அதைத் தேடித் தந்திருக்கும் ராதையின் மலர்ச்சி நிறைந்த இதயம்-இவற்றை அடைந்திருப்பதற்கு நர்மதாவின் அதிருஷ்டந்தான் காரணம் ..'' என்று பெருமிதத்துடன் கூறுகிறார் பசுபதி.

''இந்த வெய்யிலில் எங்கே போய் வருகிறாய் ராதா?'' என்று மிகுந்த அன்போடு வினவுகிறாள் சியாமளா.

''அத்தானின் வேலை விஷயமாக'' என்று மறுமொழி கூறிய ராதை, மறுவிநாடி தன் படபடப்பை எண்ணித் தன்னையே நொந்து கொள்கிறாள்.

மகளின் அதிருஷ்டம், மருமகனின் எதிர்காலம் பற்றி மிகுந்த நம்பிக்கையோடு வந்திருக்கும் பசுபதியிடம், மணிவாசகனுக்குக் கிடைக்கவிருந்த உயர்பதவி தட்டிப் போய்விட்டது என்பதை வாய்தவறிச் சொல்லிவிட்டால் ..? ஒரு விநாடியில் தன்னைச் சமாளித்துக் கொண்டு, அத்தானின் வேலை விஷயமாக முடிவு சொல்ல வந்தேன்'' என்கிறாள்.

''முடிவு சொல்லிவிட்டுப் போகிறாயா? அல்லது முடிவைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வந்தாயா?'' என்று வினவுகிறார் பசுபதி.

''முடிவினைத் தெரிந்து கொள்ளத்தான் வந்தேன் ..'' என்று கூறிமுடிப்பதற்கும், டாக்சி ராஜா அண்ணாமலைபுரத்தின் நெடுஞ் சாலைக்குள் வருவதற்கும் சரியாக இருக்கின்றது.

''எந்தத் தெரு?'' என்கிறார் வண்டியோட்டி.

''மூன்றாவது தெரு ..''

ராதையின் வீட்டின் முன்னால் வண்டி வந்து நிற்கிறது.

''நீங்களும் இங்கேதான் இறங்குகிறீர்கள்'' என்கிறாள் ராதை.

''நாங்கள் இன்னொரு சமயம் ....'' என்று தயங்குகிறார் பசுபதி.

''உங்களை எங்கள் வீட்டுச் சம்பந்தியாக நினைத்து அழைக்கவில்லை. மகள் வீட்டுக்கு அப்பாவும் அம்மாவும் வருவதாக நினைத்து இறங்கி வாருங்கள்'' என இன்முகத்துடன் அழைக்கிறாள் ராதை.

பசுபதியும் சியாமளாவும் வண்டியை விட்டு இறங்கி வருகிறார்கள். ராதையின் அழைப்பிலே இருக்கும் அன்பும், அன்பைச் சுமந்து நிற்கும் இதயமும் அவர்களுக்கு ஆரத்தி எடுத்து வரவேற்கின்றது!

மயிலொன்று வண்ணத்தோகை விரித்தாடுவது போலவும் கோலக் குயில் ஒன்று கூவி அழைப்பது போலவும் உணர்கிறாள்.

## 14. நண்பன் தரும் பரிசு

அண்ணாமலைபுரம்! மூன்றாம் தெருவின் 19-ஆம் எண். பாண்டியன் மாளிகைக்குள் அமர்ந்திருந்த டாக்டர் நர்மதாவும் வக்கீல் மணிவாசகனும் ராதையைக் காணாமல் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

''என் வாழ்க்கைக்கு அவள் பாலம் அமைக்கிறாள்! நீ பாலமாக நினைப்பதை நான் பயங்கர வெடிகுண்டாக நினைக்கிறேன்.'' இவ்வாறுமணிவாசகன் புயலாகச் சீறி அமைதியடைந்த மயம்.

டாக்டர் நர்மதா பூப்போலச் சிரிக்கலாமா, சிந்திக்கலாமா எனக் கண்ணை மூடி இருக்கும் சமயம், டாக்சி வந்தது. அவள் போன காரியம் காயா? பழமா? இருவருக்கும் இதுவே கவலை. ராதைக்கும் ஒரு கவலை தற்காலிகமாக விலகி நின்றது.

துடிக்கின்ற இரண்டு இதயங்கள் மத்தியில், தான் வாளாகப் போய் நிற்க விரும்பவில்லை. தன்னுடன் வந்த சியாமளா-பசுபதி இருவரும் இந்தச் சூழ்நிலைக்கு மாற்றம் தந்தார்கள்!

தன் பெற்றோரை முன்னறிவிப்பு ஏதுமின்றி மணிவாசகன் இல்லத்தில் நர்மதா எதிர்பார்க்கவில்லை. எனவே அவள் கொண்ட வியப்பும் திகைப்பும் நீங்குவதற்கு ஓரிரு விநாடிகள் தேவைப்பட்டன.

''நீங்கள் பேசிக் கொண்டிருங்கள். ஒரு விநாடியில் சாப்பிடலாம்..ஏற்பாடுகளைக் கவனித்துவிட்டு வருகிறேன்,'' என்று பரபரப்பாகச் சமையலறைக்குள் நுழைகிறாள் ராதை.

மணிவாசகன் குழப்பமும் கவலையுமாக உட்கார்ந்திருப்பதன் காரணத்தை ராதை ஒருவாறு ஊகித்துக் கொள்கிறாள். 'செண்பகா மில்லி'ன் சட்ட ஆலோசகன் வேலை தனக்கு நிச்சயமாகக் கிடைக்கப் போவதில்லை என்பதை அவன் அறிந்து கொண்டிருப்பானோ..? அதற்குள்ளாக அவனுக்கு யார் அறிவித்திருக்கக் கூடும்?'' என்ற சிந்தனைகளோடு சமயலறைக்குள் வருகிறாள் ராதை.

''நானும் உனக்கு உதவியாக இருக்கிறேனே ராதா..?'' என்றபடியே நர்மதா அவளைப் பின்தொடர்ந்து வந்து நிற்கிறாள்.

''வேண்டாம் அக்கா..உங்கள் அப்பாவும் சித்தியும் வந்திருக்கிறார்களே..அவர்களுடன் பேசிக் கொண்டிருங்கள் .. சமையலை நானே முடித்து விடுவேன்..''

நர்மதா நகருவதாகத் தோன்றவில்லை!

பேச்சை மாற்ற எண்ணிய ராதை, ''அத்தான் எப்போது வந்தார் அக்கா?'' எனக் கேட்கிறாள்.

''கொஞ்ச நேரம் முன்னர் தான் வந்தார்......''

சமையலறையில் மூடிவைத்த பாத்திரங்களைத் திறந்து பார்க்கும் ராதை அதிசயித்து இடுப்பில் ஒரு கையும் முகவாயில் ஒரு கையுமாக வைத்து 'இதெல்லாம் யார் வேலை?' என்று கேட்கிறாள். 'கமகம'வென்ற மணத்துடன் கச்சிதமாகச் சமையல் முடிந்து போயிருந்தது!

''இனிமேல் யார் இதைச் செய்யத் தொடங்க வேண்டுமோ அவருடைய வேலைதான்!'' என்று சிரித்துக் கொண்டே கூறுகிறாள் நர்மதா.

''நீங்கள் இந்த வீட்டுக்குச் சர்வாதிகாரி! சமையல்காரி இல்லை......! நான் திரும்பி வருவதற்குள் என்ன அவசரம் என்று சமையலை முடித்தீர்கள் அக்கா........?''

''என்னைத் தனியாக வீட்டில் விட்டுவிட்டு உன் அத்தானும் நீயும் ஆளுக்கொரு பக்கமாகப் பிய்த்துக் கொண்டு போய்விட்டீர்கள்.........''

''நான் அத்தானின் வேலை விஷயமாகப் போனேன்....''

''உன் அத்தான் உன் திருமண விஷயமாகப் போனார்.''

''திருமண விஷயமாகவா?' என்று திகைத்த ராதை மறுகணமே தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''எங்கள் இரண்டு பேருக்கும் இருந்த அக்கறையில் உங்களைக் கவனிக்கவில்லை.... நீங்களே எங்களுக்கும் சேர்த்து வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு இனிமையாகச் சமைத்து வைத்திருக்கிறீர்கள்.....'' என்று சமாதானம் கூறுகிறாள்.



''ஆலை முதலாளி முத்தையாவைப் பார்த்தாயா ராதா . . . . அவர் என்ன முடிவு சொன்னார்?'' எனத் தணிந்த குரலில்பேசுகிறாள் நர்மதா.

முத்தையா கூறிய முடிவை ராதையின் இதயம் தாங்கிக் கொள்ள முடிந்தது. ஆனால் ராதைக்கு இருக்கும் இருதய பலம் டாக்டர் நர்மதாவுக்கும் இருக்கும் என்று எதிர்பார்க்க முடியுமா . . . . .?

முல்லை போன்ற இதயத்தை இப்போது முள்ளைக் கொண்டு குத்துவானேன்?

ராதை 'பதில் கூறுவதற்குத் தயங்கி நிற்கும் ஓரிரு விநாடிகளுக்குள் சியாமளா சமையலறைக்கு வந்து நிற்கிறாள்.

''வரிந்து கட்டிக்கொண்டு விருந்து சமைக்கப் புறப்பட்டு விட்டீர்களா அக்காவும் தங்கையும்? . . .நாங்கள் அந்நியர்களா என்ன? உங்கள் அன்பால் எங்கள் இதயம் நிரம்பியிருக்கின்றது . . .இருப்பதைச் சாப்பிடுவோம் . . . . . .அன்பே உணவாகி விட்டால் இஞ்சியும் இனிப்பாய்த் தோன்றும்'' என்கிறாள் சியாமளா.

''விருந்துக்கு இப்போதென்ன அவசரம்?'' என்றபடியே பசுபதி அடுத்த அறைக்குள் வருகிறார். அவரைத் தொடர்ந்து வரும் மணிவாசகன் சாப்பாட்டு மேசைக்கருகே நாற்காலிகளைச் சரியாகப் போடுவதில் முனைகிறான்.

''கை கழுவிக்கொண்டு வாருங்கள் . . . . . . . .சாப்பாடு தயார்!'' என்று அறிவிப்புச் செய்தபடியே ராதை பாத்திரங்களை எடுத்து வருகிறாள்.

மேசையின் முன் அமர்ந்தார், பசுபதி. ''ராதைக் கேற்ற மணமகனைப் பார்க்கப் போனதாகச் சற்றுமுன் சொன்னீர்களே மணிவாசகம், அந்த மணமகன், மன்மதனா?'' என்று கூறிச் சிரிக்கின்றார். ராதையைத் தம் மகளைவிட அன்பு கொண்டவளாக அருமை மிக்கவளாக எண்ணியவராயிற்றே பசுபதி!

''பார்த்து முடிவு செய்யத்தான் போயிருந்தேன். என் நண்பனுக்கு அதிருஷ்டமில்லை. . . .'' என்று மறுமொழி கூறுகிறான் மணிவாசகன்.

''யார் அந்த நண்பன்? நான் தங்கிய ஓட்டலுக்குப் போன் செய்து உங்கள் திருமணம் கைகூடாதபடி குட்டையைக் குழப்பியவரே, அந்த நண்பரா?'' எனக் கேட்கிறார் பசுபதி.

''அவனேதான் . . . . . . .! ரோமியோ . . . . .! அவனுக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை ஏற்படுத்தித் தரலாம் என்றுதான் நான் சம்பந்தம் பேசப் போனேன்!''

ராதையின் இதயம் திக்கென்றது—! அவள் பேசவில்லை நினைக்கிறாள் ''அட அத்தான்! . . . . . உங்கள் எதிர்காலத்தின் வளத்திற்கு வெடி வைத்திருப்பதும் ரோமியோவின் அதிருஷ்டந்தான்!'' என்று மனத்துக்குள் அனுதாபப்படுகிறாள்.

''ராதையின் நல்ல இதயத்துக்கு ரோமியோவைவிட நல்ல மணமகன் வருவான். அதிருக்கட்டும் மாப்பிள்ளை, நீங்கள் எப்போது முதல் 'செண்பகா மில்'லின் சட்ட ஆலோசகராகப் பொறுப்பேற்கப் போகிறீர்கள்?'' என மிகுந்த ஆவலுடன் பசுபதி கேட்கிறார். அவர் குரலில் பலூனை மேன்மேலும் ஊத ஆசைப்படும் குழந்தையின் ஆர்வம் தொனித்தது.

### அறநிலையத் துறையில்

தமிழ்நாட்டில் இப்போது அறநிலையப் பாதுகாப்புத் துறையின் கீழ் 13 ஆயிரம் கோவில்கள் உள்ளன. மேலும் தனியார் வசம் உள்ள 40 ஆயிரம் கோவில்களும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரப்படும்.

தன் மருமகனின் உயர் பதவி பற்றியும், மகளின் வளமான வாழ்வு பற்றியும் அவருக்கு ஏற்பட்டிருக்கும் ஆவலும் அக்கறையும் அவரை அப்படிக் கேட்க வைத்தன!

''செண்பகா மில்லின் சட்ட ஆலோசகனாகவா? நானா?'' என்று திகைப்புடன் கேட்கிறான் மணிவாசகன். இனிமேல் அந்தப் பதவி தனக்குக் கிடைக்கப் போவதில்லை என்றுதான் முடிவு கட்டியிருந்தானே . . . . . !

''ஆமாம் மாப்பிள்ளை. . . உங்கள் முடிவைத் தெரிவித்து விட்டு வரத்தான் இந்த வேகாத வெய்யிலில் என் மகள் ராதை போய் வந்திருக்கிறாள் . . . . !'' என்கிறார் பசுபதி.

''ஆமாம் அத்தான். பசி மயக்கத்தில் உங்களுக்குப் பாதி விஷயங்கள் மறந்துவிடும்! நீங்கள் அனுப்பித் தானே நான் போனேன். முத்தையா மாமாவிடம், நீங்கள் ஆலையின் ஆலோசகனாக வர ஒப்புக் கொண்டுவிட்டீர்கள் என்ற முடிவைச் சொன்னதும் அவர் எவ்வளவு சந்தோசப்பட்டார் தெரியுமா?'' என்று குரலில் அழுத்தம் தந்தாள். குரலை எப்படி எப்படி அழுத்தம் தந்தால் அதற்குத் தகுந்தபடி பாசம் மாறுபடும். பரபரப்பாக ராதை கூறும்வேகத்தில், 'புரிகிறதோ இல்லையோ. . . . . புரிந்ததாகத் தலையை ஆட்டித் தொலையுங்கள் அத்தான்' என்று எச்சரிக்கையும் கலந்திருந்தது.

தன் மகளை மணக்கவிருப்பவன் ஆலையின் உயர்பதவியையும், உயர் பதவிக்கான கௌரவங்களையும் அடைந்து பெருமைக்குரிய நிலையில் அமரப் போகிறான் என்ற பெருமிதத்தில் இருக்கும் பசுபதியின் முன்னால் 'மணிவாசகனுக்கு அந்த வேலை கிடைக்கவில்லை, கிடைக்கப் போவதுமில்லை' என்ற உண்மையைப் போட்டு உடைப்பானேன்?

உணவுப் படையலில் கதம்ப மணங்கள் அங்கு எழுந்தன.

சாப்பிட்டு முடிந்ததும்,

''உங்கள் வளமான எதிர்காலத்திற்கு எங்கள் வாழ்த்துக்கள்' என்று வாழ்த்திவிட்டுப் புறப்படுகின்றனர் பசுபதியும், சியாமளாவும்.

உண்ட விருந்தினர் டாக்சி பிடித்து 19-ஆம் எண் வீட்டை விட்டுக் கிளம்புகிறார்கள்.

மீண்டும் உள்ளக் குமுறல்கள் விதவிதமாக அலைபாய்ந்தன.

'ராதையை மணக்க மறுத்துவிட்டானே' என்பதால் நண்பன் ரோமியோவின் மீது மணிவாசகனுக்குக் கோபம்.

• • •

''தன் நண்பனுக்கு வரவிருந்த உயர்பதவியைத் தட்டிப்பறித்துக்கொண்டாரே' என்பதால் ரோமியோ மேல் வருத்தம் ராதைக்கு.

'தங்கள் திருமணத்திற்கு என்னென்ன இடையூறுகள் செய்ய முடியுமோ அத்தனையும் செய்து தோல்விகண்ட ரோமியோ தங்கள் எதிர் காலத்திற்கும் பெரிய வெடிகுண்டினைப் போட முனைந்து விட்டாரே!' என்ற வேதனை நர்மதாவுக்கு . . . . !

மணிவாசகன்
நர்மதா
ராதை

—மூவரின் இதயக் குமுறல்களுக்கும் காரணப் பொருளாக இருப்பவன் ரோமியோ. அவன் மண்மகன்; அவன் சட்ட ஆலோசகன்; குடும்பத்திற்கும் நண்பன்!

''ரோமியோ. . . . . . ஒரு நச்சுப் பாம்பு'' என்கிறாள் நர்மதா.

''ரோமியோ . . . நன்றிகெட்டவன்'' என்று சீறுகிறான் மணிவாசகன்.

''அவரைச் சபிக்க வேண்டாம் அத்தான். ரோமியோ—என் தோழியின் கணவர்!'' என்று ராதை திருத்துகிறாள்.

''உள்ளே வரலாமா?'' என்று கேட்டபடியே கூடத்திற்குள் வருகிறான் ரோமியோ.

வருவது நச்சுப் பாம்பாகத் தெரிகிறது நர்மதாவிற்கு.

நன்றிகொன்ற நயவஞ்சகனைகத் தெரிகிறது மணிவாசகனுக்கு.

''வாருங்கள்! ஆலை முதலாளியின் மருமகனுரே! '' என்று குத்தலாக வரவேற்கிறான் மணிவாசகன்.

இதனைப் பொருட் படுத்தவில்லை ரோமியோ.

''நான், நில்லுங்கள், நில்லுங்கள் என்று பலமுறை கூறியும் நீங்கள் முத்தையாவின் வீட்டிலிருந்து நிற்காமல் வந்துவிட்டீர்களே ராதா . . '' எனக் கேட்கிறான் ரோமியோ.

''என்னால் நிற்க முடியவில்லை மிஸ்டர் ரோமியோ'' என்று ராதை கூறினாள். உடனே, ''அந்த வீட்டில் நிற்கப் பிடிக்கவில்லை என்றே கூறிவிடலாம் ராதா! '' என இடைமறித்துப் பேசுகிறாள் நர்மதா.

''நீங்கள் என்ன காரணத்திற்காக ஆலை முதலாளியின் வீட்டிற்கு வந்தீர்கள் என்பது எனக்குத் தெரியும் ராதா !'' என்று ரோமியோ அமைதியாகக் கூறுகிறான்.

''நிச்சயமாக உங்கள் திருமணத்தைக் கலைக்கவோ உங்களுக்குக் கிடைக்கப் போகும் உயர்பதவியைத் தட்டிப் பறிக்கவோ ராதையைத் தூதாக அனுப்பவில்லை. . . . அந்த மேலான குணங்கள் உங்கள்




ஒருவருக்குத்தான் சொந்தம்'' என்று சொல்லிலே ஊசி மருந்தைச் செருகுகிறாள் டாக்டர் நர்மதா.

''பேசி முடித்துவிட்டீர்களா? இனிமேல் நான் பேச ஆரம்பிக்கலாமா?'' என்று மீண்டும் அமைதியாகக் கேட்கிறான் ரோமியோ.

''ஆகா . . . தாராளமாகப் பேசுங்களேன்!'' என்று கூறி அட்டகாசமாகக் கைதட்டி உற்சாகப் படுத்துவதுபோல் நடக்கிறான் மணிவாசகன்.

''மணிவாசகன்! நீ ராதையை மறந்தாய். நர்மதாவைக் காதலித்தாய். கல்யாணம் செய்து கொள்ள முடிவெடுத்தாய். அப்போது நான் ஆத்திரப்பட்டேன். ராதையின் வாழ்வை வஞ்சித்துவிட்டாயே என்று வெகுண்டேன். . . . வேதனைப் பட்டேன்''

''அது பழையகதை ! தேவையில்லாத கதை'' என்று இடைமறிக்கிறாள் நர்மதா.

''அந்தப் பழைய கோபத்தை வைத்துத்தானே என்னை எதிரியாக—பரம வைரியாக எடைபோடுகிறீர்கள் இருவரும்? ராதையின் சார்பாக நான் மணிவாசகனிடம் கோபப் பட்டது உண்மை. ஆத்திரப்பட்டதும் வேதனைப்பட்டதும் உண்மை. ஏன் தெரியுமா? ராதையை என் தங்கையாக எண்ணி மதித்ததால்தான்! அந்த எண்ணத்துடன் நான் பழகிய ஒரு பெண்ணை என் மனைவியாக்க எண்ணி, சற்றுமுன் மணிவாசகனே சம்பந்தம் பேச வந்த போது மணந்துகொள்ள நான் மறுத்தேன். இப்போது புரிகிறதா செண்பகத்தின் மேல் கொண்ட காதல் காரணமல்ல; ராதையின் மேல் கொண்ட சகோதரிப் பாசம்தான் காரணம் என்று ?'' என்று வினவுகிறான்.

''இந்தச் சமாதானத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். முத்தையா மாமாவின் ஆலைக்குச் சட்ட ஆலோசகராகப் பொறுப்பேற்க முன் வந்திருக்கிறீர்களே அதற்கு என்ன சமாதானம் சொல்லப் போகிறீர்களோ?'' என்று இடக்காகக் கேட்கிறாள் ராதை.

இத்தனை வேதனைக்குள் மூழ்கிக் கிடந்த மணிவாசகம், ''ராதை வக்கீலுக்கு படிக்க அருகதை இல்லாதவள் என்று நினைத்தேன். அவள் வக்கீலுக்குப் படிக்க வேண்டியவள்'' என்று சிரித்தான்,

''முத்தையாவின் மருமகனாக மட்டும்தான் நான் இருக்கப் போகிறேன். அவர் ஆலையின் சட்ட ஆலோசகன் பதவியில் என்னைவிடத் திறமையும் என்னைவிடத் தகுதியும் வாய்ந்த நபர் அமரப் போகிறான் ! அதாவது எனது அருமை நண்பன் மணிவாசகன் '' என்று தீர்மானமாகப் பேசுகிறான் ரோமியோ.

உள்ளூர மகிழ்ச்சி. உதட்டளவில் தன் திறமையை ஆரம்பிக்கிறான். ''அடடா, தம் மருமகனின் எதிர்காலத்தைப் பற்றி ஆலை முதலாளி கொண்டிருந்த நம்பிக்கை என்ன ஆவது அப்பனே?'' என்று சீண்டுகிறான் மணிவாசகன்.

பிறர் மனத்தை ஆழம் பார்ப்பது கை வந்த கலையாயிற்றே மணிவாசகனுக்கு.

''ஆலை முதலாளி முத்தையாவுக்குத் தம் மருமகனின் எதிர்காலத்தைப் பற்றித்தான் கவலைப்படத் தெரிந்திருந்தது. மருமகனின் இதயத்தைப்பற்றி அவர் எண்ணிப் பார்க்கவில்லை; நண்பனின் நல்வாழ்வில் அக்கறை கொண்ட அன்புள்ளம் பேசுகிறதடா. நட்புக்குத் துரோகம் செய்யத் துணியாத தாய்மையான இதயமடா என் இதயம். இச்சின்னஞ் சிறு விஷயத்தை சொல்லிப் போகத்தான் நான் வந்தேன். '' என்று கூறியபடி ரோமியோ தன் சட்டைப் பையிலிருந்து ஒரு கவரை வெளியே எடுக்கிறான்.

''செண்பகா மில்லின் சட்ட ஆலோசகனாக மணிவாசகனை நியமித்திருப்பதற்கான அதிகார பூர்வமான நியமனக் கடிதம் இது. உன்னுடைய எளிய நண்பனின் அன்பு நிறைந்த திருமணப் பரிசு இது'' என்று வேலைக்கான உத்தரவை மணிவாசகனின் கரங்களில் கொடுக்கிறான் ரோமியோ.

அன்பு தரும் அதிர்ச்சியால் மூவரது இதயங்களும் பிரமித்து நிற்கின்றன.

''மிஸ்டர் மணிவாசகன்! மற்றவர்கள் விட்டுக் கொடுப்பதால் உங்களுக்கு எத்தனை பெரிய மேன்மைகள் வந்து சேருகின்றன!''என்று மனத்தில் பட்டதைப் படீரென்று சொல்லி விடுகிறாள் நர்மதா.

மணிவாசகனின் இதயத்துள் 'சுரீர்' என்று தைக்கிறது. இது பெரிய சொல்லம்பு. அதைக் கவனிக்காமல் நர்மதா தொடர்ந்து ''ராதை தன்காதலை விட்டுக்கொடுத்தாள். உங்கள் கல்யாணம் இனிது நடக்கின்றது. உங்கள் நண்பர் ரோமியோ தனக்கு வரவிருந்த பெரும் பதவியை விட்டுக் கொடுத்திருக்கிறார். உங்கள் வாழ்வு வளமாகத் தொடங்க விருக்கின்றது!'' என்று விளக்கமும் தருகிறாள்.

''இந்த வாழ்வுக்கும் வசதிகளுக்கும் எங்களைவிட நீங்கள் இருவரும்தான் இன்னும் தகுதியானவர்கள் என்று நாங்கள் தீர்மானித்தோம். அதனால்தான் நாங்கள் விலகிக் கொள்கிறோம்... என்று சமாதானமாகக் கூறி நர்மதாவின் பேச்சிலுள்ள கடுமையைக் குளுமையாக்க முற்படுகிறாள் ராதை!

அடுத்த வாரம் திருமணம். அதற்குள் அவர்களுக்குள் பிணக்கோ பிளவோ வந்துவிட்டால்...? என்ற பயம் ராதையின் இதயத்தைப் பற்றிக் கொள்கிறது.

தொலைவுபேசி மணி ஒலிக்கிறது.

மணிவாசகன் எடுக்கிறான்.

''மணிவாசகன் பேசுகிறேன்''

''நான் கோயம்புத்தூர் வடிவேலு பேசுகிறேன். உங்கள் திருமண அழைப்பிதழ் கிடைத்தது. அவசியம் வருகிறோம்.''

''மிக்க மகிழ்ச்சி''

''ஒரு திருமணம் நடந்து முடியும் நேரத்தில் மற்றொரு திருமணம் உறுதியாகும் என் பார்களே''

''ஆமாம்''

''உங்கள் திருமண நாளில் ராதையின் திருமணமும் முடிவாக வேண்டும்'' என்கிறார் வடிவேலு.

''முடித்துவிடுவோம்' என் கிறான் மணிவாசகன்.

ராதையின் இதயம் எடுத்திருக்கும் முடிவை அவர்கள் இருவருமே அறிந்திருக்க நியாயமில்லையே!

(வளரும்)

## இந்தியாவில்...

எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முந்தைய விஞ்ஞான வரலாறு, இலக்கிய, கலை முக்கியத்துவம் வாய்ந்த கையெழுத்துப் பிரதிகள், ஆவணங்கள் முதலியவற்றைப் புலவந்தமாகப் பெறலாம் என்று மைய அரசு சட்டம் பிறப்பித்துள்ளது.

* * *

1971-72 ஆம் ஆண்டில் மொத்தம் 32,676 டன் எடையுள்ள மீன் உணவு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதன் மதிப்பு 41 கோடியே 39 இலட்சம் ரூபாய்.

* * *

இந்தியப் பாதுகாப்பிலுள்ள பாகிஸ்தானிய போர்க்கைதிகள், பாகிஸ்தான் சிவிலியன்கள் ஆகியோர் எழுதிய கடிதங்கள், அவர்களுக்கு வந்த கடிதங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை ஒரு கோடியாகும்.

இவ்வாண்டு பிப்ரவரி மாதத்தில் மொத்தம் 146 கோடி ரூபாய் மதிப்புக்குள்ள இந்தியப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இது, 1972 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தின் ஏற்றுமதியைக் காட்டிலும் 17 கோடி ரூபாய் கூடுதல்.

* * *

சென்ற சனவரி மாதத்தில் சுங்க அதிகாரிகள் சுமார் 2 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கள்ளக் கடத்தல் பொருட்களைப் பறிமுதல் செய்தனர். இதில் கள்ளத்தனமாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு 2 கோடியே 11 இலட்சம் ரூபாய்.

1972 ஏப்ரல் முதல் 1973 பிப்ரவரி வரையில் ஏற்றுமதி செய்யப்பட்ட முந்திரிப் பருப்பின் அளவு, 1971-72 ஆம் ஆண்டு முழுவதிலும் ஏற்றுமதி செய்யப்பட்டதை விட 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் அளவுக்கு அதிகரித்திருக்கிறது.

* * *

இந்தியக் காடுகளிலுள்ள புலிகளைப் பாதுகாக்க வருகிற ஆறுண்டுக் காலத்திற்கு ரூ. 4 கோடி செலவிடப்படும். புலிகளைச் சுடுவதும் தடை செய்யப்படும்.

* * *

இந்தியாவிலிருந்து மனித எலும்புக்கூடுகள் அமெரிக்கா, மேற்கு ஜெர்மன், பிரான்சு, இத்தாலி, இங்கிலாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. ஒரு எலும்புக்கூடு ஏறத்தாழ ரூ. 89 க்கு விற்கப்படுகிறது. கடந்த 1969-70 ஆம் ஆண்டில் மட்டும் எலும்புக்கூட்டின் மூலம் கிடைத்த வருமானம் ரூ. 1 கோடி.

# கண்ணுக்குப் பாதுகாப்பு

ஐம்புலன்களில் மிக நுண்ணிய உறுப்பான கண்கள் ஒளியிழக்காத வண்ணம் காப்பது நம் கடமையல்லவா ? நம்முடைய கவனமின்மையே கண்கள் ஒளியிழக்கக் காரணமாகின்றன. இந்த அவலநிலை பெரியவர்களுக்கு மட்டுமல்ல, பிறக்கின்ற குழந்தைகளுக்கும் கூட ஏற்பட்டு விடுகிறது.

வாழ்நாள் முழுவதும் கண்களைப் பாதுகாப்பது அவசியமாகும். கருவுற்றிருக்கும் தாய்க்குத் தனியான பராமரிப்பு அளிப்பதும் மிக முக்கியமாகும். பிறந்த குழந்தைகளிடையே குருட்டுத் தன்மையைத் தடுப்பதில், அதிகக்கவனம் செலுத்தப்பட வேண்டும் மகப்பேற்றுக்கு முன்னும் பின்னும் மிகுந்த கவனம் தேவை. அதற்குப் பிறகும் கூடக் குழந்தையின் கண்களைக் கிருமிகள், அதிக வெளிச்சம் முதலியவற்றிலிருந்து பாதுகாப்பது அவசியம்.

சூலுற்றிருக்கும் காலத்தில் முதல் இரண்டு மாதங்களில் சின்னம்மை போன்ற தொத்து நோய்கள் வராமல், தாயைப் பாதுகாக்க வேண்டும். இல்லையென்றால் பிறக்கும் குழந்தையின் கண்ணில் சதை வளரும்; அல்லது சரியான வளர்ச்சி இல்லாமல் போய்விடும். தாய்க்குக் கனேரியா, சிபிலிஸ் போன்ற பெண் நோய்கள் ஏதும் இருந்தால் குழந்தை பிறப்பதற்கு முன்பே மருத்துவம் செய்துகொள்ள வேண்டும்.

சூலுற்றிருக்கும் போதே குழந்தைக்கு சிபிலிஸ் நோய் தொற்ற முடியும். சூலுற்றிருக்கையில் தாய்க்குத் தகுந்த மருத்துவம் அளிக்கப்படாவிட்டால் குழந்தை பிறக்கும் போதே சிபிலிஸ் நோயுடன் பிறக்க நேரும். ஆனால், கனேரியா கருவிலுள்ள குழந்தைக்குத் தொற்றுவதில்லை. இதனால் கனேரியாவினால் எந்தக் கெடுதலும் ஏற்படுவதில்லை என்ற எண்ணத்திற்கு இடமளிக்க வேண்டாம்.

• •


சூலுற்றவரின் உணவில் தேவையான அளவு வைட்டமின்களும், மற்ற சத்துக்களும் சேர்ந்திருக்க வேண்டும். சில வைட்டமின்களின் குறைவினாலும், சரியான சத்துணவில்லாததாலும் குழந்தையின் உடல் நலம் பாதிக்கப்படுவதுடன், அதன் கண்களும் பாதிக்கப்படுகின்றன.

மகப்பேறு பார்க்கும் போது சரியான கவனம் செலுத்தாவிட்டாலும் குழந்தையின் கண் பார்வை பாதிக்கப்படும். மகப்பேற்றின் போது நன்கு பயிற்சி பெற்ற மருத்துவமாது, மருத்துவர் முதலியோரின் உதவி தேவைப்படும். 'சிசேரியன்' போன்ற கஷ்டமான மகப்பேறுகளின் போது ஆயுதங்கள் குழந்தையின் கண்ணைச் சேதப்படுத்திவிடாமல் இருக்கத் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

குழந்தை பிறந்தவுடன் அது கண்களைத் திறப்பதற்கு முன்னால், மூக்கிலிருந்து மேற்புறமாகக் கண்களைத் துடைக்கவேண்டும். பேசினில் குழந்தையைக் குளிப்பாட்டும் போது தண்ணீர், குழந்தையின் கண்களில் படாமல் காக்க வேண்டும். கிருமிகள் தொற்றுவதைத் தவிர்க்க 'பெனிசிலின்' மருந்தைக் கண்ணில் விடவேண்டும்.

ஆண்ட்டிபயாடிக்குகள் உபயோகத்துக்கு வருவதற்கு முன்பு ஒரு சதவிகிதம் சில்வர் நைட்ரேட் குழம்பைக் குழந்தையின் கண்களில் விடுவது வழக்கமாக இருந்தது. பிறந்த குழந்தையின் கண்களில் ஏதேனும் ஒழுக்குக் காணப்பட்டால் உடனடியாகச் சிகிச்சை அளிக்கவேண்டும். குழந்தையின் கண்களில் ஏற்படும் சீழ் போன்ற ஒழுக்குகள்தான் குழந்தைகளின் குருட்டுத் தன்மைக்குப் பெரும்பாலும் காரணமாக உள்ளன.

சூரிய வெளிச்சம் நேரடியாகப் படுவதனால் குழந்தையின் கண்கள் பாதிக்கப்படுகின்றன. இதனால் எக்காரணம் கொண்டும் குழந்தையின் கண்கள் மீது சூரிய வெளிச்சம் படுவதை அனுமதிக்கக் கூடாது. சூரிய வெளிச்சம் படுமாறு குழந்தைகள் தொட்டிலில் விடப்படுகின்றன. ஈக்களிடமிருந்தும் குழந்தைக்குப் பாதுகாப்பு அளிப்பது அவசியமாகும்.



குழந்தையின் கண்களில் சூரிய வெளிச்சம் நேரடியாகப் படக்கூடாது

குழந்தையின் தாய், மருத்துவ மாது ஆகியோரும் தங்கள் சொந்த முறையில் சுத்தமாக இருக்க வேண்டும். அழுக்குத் துணிகளைக் கொண்டோ, வீட்டில் மற்றவர்கள் பயன்படுத்தும் துவாலைகளாலோ குழந்தையின் கண்களைத் துடைப்பது கூடாது.

குழந்தையின் கண்களில் மை இடக்கூடாது. முக்கியமாக, ட்ரகோமா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கும் வீடுகளில் குழந்தையின் கண்களில் மையிடுவது கண் நோய்க்குக் காரணமாகிறது.

மகப்பேற்றின் போதும், அதற்குப் பிறகும் குழந்தையைப் பாதுகாக்க வேண்டிய முறைகள் :—

1. சூலுற்றவருக்கு வைட்டமின்கள் நிறைந்த சத்துணவு அளிக்கப்பட வேண்டும். 2. தேர்ச்சி பெற்ற மருத்துவர் அல்லது மருத்துவ மாதுதான் மகப்பேறு பார்க்க வேண்டும். 3. தாய்க்குப் பெண்நோய் இருந்தால் தகுந்த சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். 4. குழந்தையை முதன் முறையாகக் குளிப்பாட்டும் போது அத் தண்ணீர் குழந்தையின் கண்களில் படாமல் பாதுகாக்க வேண்டும். 5. குழந்தையின் கண்களில் ஏதேனும் ஒழுக்குக் காணப்பட்டால் மருத்துவரைக் கலந்தாலோசிக்க வேண்டும். 6. குழந்தையின் மீது சூரிய வெளிச்சம் நேரடியாகப் படக்கூடாது. 7. ஈக்கள் குழந்தையின் கண்களைத் தீண்டாவண்ணம் குழந்தையின் தொட்டிலின் மீது கொசுவலை கட்ட வேண்டும். 8. குழந்தையின் கண்களில் மையிடக் கூடாது.

[இந்த விதிகளை தவறாது கடைப்பிடித்துக் குழந்தைகளின் கண்ணுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும்.]

# தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்,

மெ.நு. 19/20, லிங்கி செட்டித் தெரு, தபால் பெட்டி எண். 226,
சென்னை-600001.

தந்தி : "அர்பாங்" தொலைபேசி எண் : 20367, 28068.

**எங்கள் வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும் விவசாயத் தொழில்களுக்கும் உதவி செய்யும்.**

வட்டி விகிதங்கள்

| | (வருடத்திற்கு %) |
|---|---|
| நடப்புக் கணக்கு .. .. .. | வட்டி இல்லை. |
| சேமிப்புக் கணக்கு .. .. .. | 4 00 |

(குறைந்த அளவு மாத நிலுவையின் பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது)

**காலாந்திரக் கணக்கு :**

ரூ. 1,000-ம் அதற்கு மேலும்.

| | |
|---|---|
| 15 நாட்களிலிருந்து 45 நாட்கள் வரை .. | 2·75 |
| 46 நாட்களிலிருந்து 90 நாட்கள் வரை .. | 3·25 |

**நிரந்தரக் கணக்கு :**

ரூ. 100-ம் அதற்கு மேலும்.

| | |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்குக் குறைவாக | 4·75 |
| 6 மாதங்களிலிருந்து 12 மாதங்களுக்குக் குறைவாக | 5·25 |
| 12 மாதங்களிலிருந்து 24 மாதங்களுக்குக் குறைவாக | 6·00 |
| 24 மாதங்களிலிருந்து 60 மாதங்கள் முடிய .. | 7·00 |
| 60 மாதங்களுக்கு மேல் .. .. | 7·25 |

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1,000-க்கும் அதற்கு அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.


மத, தர்ம மற்றும் கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு மேலே குறிப்பிட்டதை விட ½% கூடுதல் வட்டி கொடுக்கப்படும்.

**தொடர் கணக்கு :**

தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாதத் தவணை ரூ. 5-ம் | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| அதன் மடங்குகளும் ரூ. | 62 | 128-50 | 201 | 278 | 362-50 | 452 | 548-50 |

ஆர். கனகசபை, தலைவர்.
குடவாசல் சி. கிருட்டிணமூர்த்தி, துணைத் தலைவர்.
டி. வர்த்தமானன், செயலர்.



# அனல் மின்நிலையங்கள்

கே. ஆர். இராதா கிருஷ்ணன்
(தமிழ்நாடு மின்வாரிய முன்னாள் தலைவர்)

நமது நாட்டில் இயற்கை வசதிகள் ஒரு சீரான முறையில் அமையவில்லை. சில இடங்களில் வசதிகள் அதிகம். சில இடங்களில் வசதிகள் குறைவு. மின்சக்தி உற்பத்தி செய்யப்படுகின்ற இடங்கள் எங்கிருந்தாலும், மின்சக்தியைக் கொண்டு செல்ல ஒரு மின் இணைப்பினை ( GRID ) நிறுவும் பொழுது, இந்த ஏற்றத் தாழ்வான நிலையினைக் கருத்தில் கொண்டுதான் செய்யப்படும்.

பெரிய அளவில் மின் உற்பத்தி நிலையங்கள் அமைத்தவினால், குறைந்த செலவில் மின் உற்பத்தி செய்ய முடியும் என்பது உலகறிந்த உண்மை. இந்தக் கருத்தாவது, பிரதேச மின் இணைப்பு ( REGIONAL GRIDS ) களினால் ஏற்றுக் கொள்ளப்படுவதுடன், செயல் முறையில் ஊக்குவிக்கப் படவேண்டிய ஒன்றுமாகும். ஆகவே, இன்றுள்ள மின்சாரத். தட்டுப்பாட்டினைச் சமாளிக்கச் சிறிய அளவிலான மின் உற்ப்பத்தித் திட்டங்களைச் செயல்படுத்துவதனால், பிரச்சினையைத் தற்காலிகமாகச் சமாளிக்க முடியுமே தவிர, மின் பற்றாக்குறை தொடர்ந்து இருந்துகொண்டேதான் இருக்கும். அது நிரந்தரமாகத் தீர்ந்துவிடாது. மின் உற்பத்தி நிறுவனத்திறன் இப்பொழுது இருக்கத்தான் • செய்கிறது. ஆனால் அவை இயங்கக் கூடிய நிலையில் இல்லை. அந்தத் திறனையே, இப்பொழுதுள்ளதற்கு மேல் சிறிய அளவிலான மின்உற்பத்திச் சாதனங்களின் உதவியினால், மேலும் அதிகப்படுத்த முயற்சிப்பதில் பொருளேயில்லை. இப்பொழுது உடனடியாக வேண்டுவது எல்லாம் எரிபொருள்கள், மற்றும் பொருத்தியிருக்கும் சாதனங்களைச் சரிவர இயக்குவித்தல் இவைதான். இவற்றை மனத்தில் கொள்ள வேண்டும்.

மாநிலம் முழுதுக்குமாக மின் அனுப்புதல், பங்கீட்டுக் கம்பிகளை நாம் அமைத்துள்ளோம். இந்த நிலையில், தடங்கலின்றி மின்சக்தி வழங்கப்பட வேண்டியது மின் வழங்கு அமைப்பின் கடமையாகும். வேண்டுமானால், தற்காலிகமாகத் தொழிலதிபர்கள் தங்களுக்கெனச் சிறிய மின் உற்பத்திச் சாதனங்களை அமைத்துக் கொள்ளட்டும், ஆனால், அதுவே பிரச்சினையைத் தீர்த்துவிடாது!

நமது நாட்டில் மண்டல மின் இணைப்புகள் முன்பே செயலில் உள்ளன. மின் அமைப்புகளூடே மின் தொடர்பு செய்யப்பட்டு, அதனால் சிறிதளவு பயன் பெறப் பட்டும் வருகிறது. தென்னக மின் இணைப்பில் ஆந்திரப் பிரதேசம், கர்னாடகம், கேரளம் தமிழ்நாடு ஆகிய நான்கு மாநிலங்கள் கவியப்பட்டுள்ளன. இந்த மாநிலங்களின் மின்சார வாரியங்களின் ஒத்துழைப்போடு, இந்த இணைப்பு இப்பொழுது இயக்கப்பட்டு வருகிறது.

மின் உற்பத்திச் சாதனங்கள், சீரான முறையில் அல்லாமல், ஏற்றத் தாழ்வான நிலையில் இந்த நான்கு மாநிலங்களில் அமைந்துள்ளன. கோதாவரி, கிருஷ்ணா ஆகிய இரு பெரிய ஆறுகள் ஆந்திரப் பிரதேசத்தில் பாய்கின்றன. இருந்தும், நீர்மின்சக்தி ஆதாரங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் உள்ளன. இத்துடன் உயர்வான நிலையில் பிரம்மாண்டமான அனல் மின் நிலையங்கள் அமைக்கத் தேவையான நிலக்கரி பெருமளவில் அந்த மாநிலத்தில் கிடைக்கிறது. கொத்தகூடம், இராமகூடம் ஆகிய இடங்களில் இந்த வேலைகள் முன்பே ஆரம்பமாகி அங்கு அனல் மின் நிலையங்கள் இயங்கத் தொடங்கியுள்ளன. ஆக, தென்னகப் பகுதியில், நீண்ட நெடுங்காலத்திற்கு, இந்த ஆதாரங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

கிருஷ்ணா, துங்கபத்திரை, காவேரி போன்ற பெரிய ஆறுகள் கர்னாடக மாநிலத்தில் உள்ளன. நீர் மின்சக்தி உற்பத்திக்கு இந்த ஆறுகளை வெகுவாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

கேரளத்தில் ஓடுகின்ற ஆறுகள், பல ஆண்டுகளுக்குக் குறைந்த செலவில் நீர் மின் சக்தியை உற்பத்தி செய்ய வாய்ப்பாக உள்ளன. ஆனால், தமிழ்நாட்டிலோ நிலை வேறு. நீர் மின் உற்பத்திக்கான சாத்தியக்கூறுகளைத் தமிழகத்தில் முழுமையாகப் பயன்படுத்தியாகி விட்டது. அதுவும் ஏமாற்றத்திற்கு உட்பட்ட நிலையில் உள்ளது. முன்பே உள்ள முதல் சுரங்கத்தோடு, மேலும் ஒரு சுரங்கம் வெட்டப்படுமேயானால் நெய்வேலியில் இன்னும் ஒரு மில்லியன் கிலோவாட் மின் உற்பத்தி செய்யும் அனல் மின் நிலையத்தினை உண்டாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. தமிழகத்தைப் பொறுத்தவரையில், மின் உற்பத்திசெய்ய நமக்குள்ள ஒரே மாற்றுவழி அணுசக்தியைப் பயன்படுத்துவதன்மூலம் செயல்படுவதுதான். இதற்கு வேண்டிய எரிபொருள் இந்தியாவிலேயே கிடைக்கிறது. ஒவ்வொன்றும் 200 மெகவாட் திறனுடைய இரண்டு யூனிட்டுகள் கொண்ட கல்பாக்கம் அணு மின்நிலையம் இந்தத் துறையில் ஒரு முன்னோடி வேலையாக அமைந்த ஒன்றாகும்.

ஆக, வருகின்ற பல்லாண்டுகளில், மண்டலத்தைப் பொறுத்தவரையில், மின்உற்பத்தி, கீழ்க்கண்ட அமைப்பு முறையிலேதான் இருக்க முடியும். அதாவது, (1) நீர் மின்

நிலையங்கள், வழக்கமான அனல் மின்நிலையங்கள் மூலமாக, ஆந்திரப் பிரதேசத்திலும், மைசூர், கேரள மாநிலங்களில் நீர் மின் நிலையங்கள் மூலமாகவும், தமிழ்நாட்டில் அனல் மற்றும் அணு மின் நிலையங்கள் மூலமாகவும், மின் உற்பத்தி அமைய வேண்டும். அதன்படி செய்து இந்த நான்கு மாநிலங்களின் மின் உற்பத்தி அமைப்புகளை இணைத்து இயங்குவதால் பருவமழை எப்படியிருந்த போதிலும், இந்தப் பிரதேசத்தின் எந்தப் பகுதிக்கும் ஆண்டு முழுமைக்கும் மின்சாரம் கிடைக்கவும், அத்துடன் மின் உற்பத்திக்கு ஆகும் மொத்தச் செலவு குறைவாகவும் ஏற்படுகின்ற நிலை, நிச்சயமாக உருவாகும். அத்துடன் இந்தப் பகுதிகளில் ஒரே சீரான மின் கட்டணங்களை அமைக்கவும், இது வழிகோலும். இந்த முறையில், நீர் மின்சக்தி, அனல் மின்சக்தி ஆகிய இரண்டு வகைகளையும் ஒன்றோடொன்று தொடர்பாக இணைத்துச் செயல்படுத்துவதனால், இவ்வாறு ஒரே மின் இணைப்புடன் தொடர்பு செய்யப்பட்டுள்ள பல்வேறு மாநிலங்களில் உள்ள நீர் மின் உற்பத்தி நிலையங்களின் பாசன நீரையும், வெள்ளப் பெருக்கெடுத்தோடும் நீரினையும் பயன்படுத்துவதன் மூலம், அனல் மின் உற்பத்திக்குப் பயன்படுத்துகின்ற நிலக்கரி அல்லது மற்ற எரிபொருள்களைச் சேமித்து வைக்கவும் முடியும். தென் மண்டல மின் இணைப்பு அமைப்பானது. பல்வேறு மாநிலங்களிடையே ஒரு தொடர்பு அமைப்பாக இயங்குகிறது. துரதிருஷ்டவசமாக, இன்றைய நிலையில் இந்த அமைப்பு, பல்வேறு மின்சார வாரியங்களின் கொள்கைகளையும் நடைமுறைகளையும் வகுக்கின்ற நிலையில் இல்லை. மாநிலங்களுடே ஓடி விழும் நீரினைக் கட்டுப்படுத்துகின்ற நிலையிலும் இல்லை. இதனால் தென்மண்டல மின்இணைப்பு, அதனால் இயங்கக் கூடிய அளவுக்கு இயங்க முடியாமல், குறைந்த அளவிலேயே இயங்கக் கூடிய சூழ்நிலை உள்ளது. மின்சாரத்தை உற்பத்தி செய்து, அதைக் குறைந்த விலையில் விற்பது என்பது, பல்வேறு மின்சார வாரியங்களும் மண்டல மின் இணைப்புடன் இணைக்கப்பட்டு ஒரே மின் உற்பத்தி அமைப்பினால், ( Power Generation Pool ) தான் செய்ய முடியும். அத்துடன், இதனால் கூடுதலாக ஒரு பெரிய நன்மையும் உண்டு. பல்வேறு மாநிலங்களிடையே ஒரே சீரான, ஏற்றத் தாழ்வில்லாத தொழில் வளர்ச்சிக்கும் இது வழி வகுக்கும். மின் இணைப்பில் உள்ள பல்வேறு மின்சார வாரியங்களையும் அந்தந்த வாரியங்கள் தங்கள் தங்களுடைய தனித்தன்மையை இழக்காத வகையில் இந்த அமைப்பின் உறுப்பினர்களாக்குவதன் மூலம், இந்தப் பொது மின் உற்பத்தி அமைப்பினை உருவாக்கலாம்.

இன்னொரு வழியும் உண்டு. அது என்னவென்றால், கூட்டுறவு அடிப்படையில் இந்தப் பகுதியில் பிரதேச மின் உற்பத்தி ஏஜென்சி ஒன்றை அமைப்பதாகும். இந்தப் பகுதியில் உள்ள எல்லாப் பெரிய மின் உற்பத்தி நிலையங்களையும் இந்த ஏஜென்சிக்குச் சொந்தமாக்கி, மாநில மின்சார வாரியங்களினால் முன்பே நிறுவப்பட்டுள்ள மின் உற்பத்தி நிலையங்கள் இந்த மத்திய மின் உற்பத்தி ஏஜென்சியினால் எடுத்துக் கொள்ளப்படலாம். தேவையானால், நாடாளுமன்றத்தில் முடிவு எடுத்து, வேண்டுமானால், ஆணை பிறப்பித்து, இதை அமல் செய்யலாம். உற்பத்தி செய்யப்படும் மின் சக்தியானது, மின் நிலையங்களின் முனைகளிலோ (Points) அல்லது மாநில மின் இணைப்பின் (State Grids) எல்லையிலோ, மொத்தமாக அந்தந்த மின்வாரியங்களுக்கு விற்கப்படலாம். இதனால் அடையும் பயனை இந்த மண்டலத்தில் இணைந்துள்ள எல்லா மாநிலங்களும் அடைய வாய்ப்பிருக்கிறது.

> 1973–74-ஆம் ஆண்டில் தமிழக வேளாண்மைக்கு உதவ, குறுகிய காலக் கடனாக ரூ. 75 கோடி வழங்கப்படும்; இது, கடந்த ஆண்டு வழங்கப்பட்டதை விட ரூ. 15 கோடி அதிகமாகும்.

எந்த ஓர் அணு மின் நிலையத்தையும் முடிவு எடுத்து நிறுவிச் செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்படுகின்ற கால அளவு சகிக்க முடியாத அளவுக்கு அதிகமாக உள்ளது. இதை எவ்வளவுக்குக் குறைக்க முடியுமோ அந்த அளவுக்குக் குறைத்தாக வேண்டும். விஞ்ஞானம் வெகு வேகமாக வளர்ந்து வருகின்ற இந்தக் காலத்தில், அணு மின்உற்பத்தியில் வேகமான வளர்ச்சி காண்கின்ற இந்த வேகமான விஞ்ஞான வளர்ச்சி யுகத்தில், அந்த நிலைக்கு நாம் நம்மைத் தயார் படுத்திக் கொள்ளவில்லையென்றால், நாம் இந்தத் துறையில் வெகுவாகப் பின்தங்கி விடுவோம். இப்பொழுது மின்சாரத் தட்டுப்பாடு மிகக் கடுமையாக உள்ள காலம். இந்த நிலையில் நமது அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தின் மின் உற்பத்தித் திறன் இலக்கில் பாதி அளவுக்காவது தேவையான நவீன மின் உற்பத்திச் சாதனங்களை வெளிநாடுகளிலிருந்து நாம் இறக்குமதி செய்து கொள்ள வேண்டியது மிகமிக அவசியமாகும். துரிதமாகப் பயன் பெற இதுஒரு வழியாகும்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், தூத்துக்குடி, சேலம் மதுரை போன்ற இடங்களில் குறைந்தது ஒவ்வொன்றும் 400 மெகாவாட் உற்பத்தி செய்யக் கூடிய 200 மெகாவாட் பிரிவு இரண்டு கொண்ட அனல் மின் நிலையங்களை எவ்வளவு விரைவாக அமைக்க முடியுமோ அவ்வளவு விரைவாக அமைக்க வேண்டும். அதே சமயத்தில், சுருளியாறு போன்ற சிறு சிறு ஆறுகளிலிருந்து மின் உற்பத்தி செய்கின்ற நீர் மின் நிலையங்களை உருவாக்கும் திட்டங்களை நாம் அறவே கைவிட்டுவிட வேண்டும். நம்முடைய மின் தேவைகளைக் கணிசமான அளவுக்கு இந்தச் சிறு அளவிலான நீர் மின் திட்டங்கள் நிறைவு செய்வதில்லை. அத்துடன் எப்பொழுது தேவையாக உள்ளதோ அந்தக் காலங்களில் உள்ள மிச்ச மின்தேவைகளுக்கு இவைகளால் ஈடு கொடுக்கவும் முடிவதில்லை.

ஆகையால் செலாவணிகளை இவ்விதமான மின் நிலையங்களுக்கு விரயம் செய்வது மிகவும் தவறு என்பதை உணர வேண்டும். இந்தச் சமயத்தில், தமிழகத்தைப் பொறுத்த வரையில் மின்சக்தி உற்பத்திக்கான எதிர்காலத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுவது சாலப் பொருத்தமுடைய ஒன்றாகும். •

தமிழ்நாட்டின் மின் இணைப்பின் தற்போதைய நீர் மின் உற்பத்தி 1220 மெகாவாட்டுகளாகும். இதில் 537 மெகாவாட்டுகள் நிறுவனத் திறனது பாசனங்களுக்கு நீர் விடுவதைச் சார்ந்தே உள்ளன. அதாவது, இவை குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே

இயங்கக் கூடிய நிலையங்களாக உள்ளன. மிச்சம் 690 மெகா வாட்டுகள் நிறுவனத் திறன் உடைய, மற்ற நீர் மின் நிலையங்களோ ஆண்டு தோறும் மழை அளவு, நிலையாக இல்லாமல், மாறுகின்ற நிலையில் அதாவது, மழையை நம்பியே உள்ளன.

தமிழ்நாட்டில் மின் உற்பத்திக்கான திட்டங்கள் பொதுவாக இது வரையில் நீர் மின் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டே உள்ளன. இதனால், கடந்த காலங்களில் பல ஆண்டுகளில் கணிசமான அளவுக்கு மின் வெட்டுகளை நாம் கண்டு வந்துள்ளோம். இது வரையில் நீர் மின் உற்பத்தித் திட்டத்திற்கான செலவு சுமார் 200 கோடி ரூபாயாகும். இதில் 100 கோடி ரூபாய் அளவுக்குக் கூட நாம் அவைகளிலிருந்து பயன் பெற்றதாகத் தெரியவில்லை. குறித்த எதிர்காலத் திட்டங்கள் தீட்டப்படும் பொழுது, இந்த அனுபவத்தை ஏனோ நாம் புறக்கணித்து விட்டோம்.

தமிழ்நாடு மின்சார வாரியம் அண்மையில் எடுத்துள்ள முடிவுகளின் படி, இன்னும் நீர் மின் நிலையங்கள் அதிக அளவில் அமைக்கப்பட உள்ளன எனத் தெரிகிறது. திட்டங்கள் தீட்டுவோருக்கு இது சரியான பாதையைக் காட்டவில்லை, என்பது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் இனிமேல் நீர் மின் நிலையங்களை நிறுவுவதற்காக ஒரு காசு செலவழிப்பது கூட எந்த வகையிலும் ஆதாயம் தரத்தக்க ஒன்றல்ல என்பதை உணர்த்த விரும்புகிறேன். மின் சுமையை மேம்படுத்த நீர் இறைப்பு நீர் மின் திட்டம் பற்றி வேண்டுமானால் யோசிக்கலாம். அதாவது காடம்பாரை போன்ற திட்டங்கள் தமிழகத்தில் உடனடியாகப் பெரிய அளவில் அனல் மின் நிலையங்களை நிறுவுவதன் மூலம் நாம் பெறக்கூடிய உறுதியான நிலையுடன் ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால் இந்நீர் இறைப்பு மின்திட்டங்கள் கூட இரண்டாந்தரம் மூன்றாந்தரத்தின் பாற்பட்டவைகளேயாகும்.

எந்த ஒரு மின் திட்டத்தையும் உருவாக்கிச் செயல்படுத்துவதற்கு எடுத்துக் கொள்கின்ற கால அளவு மிகவும் நீண்டுள்ளதாகையால், அனல் மின் நிலையங்கள் நிறுவ வேண்டும் என்று எடுக்கும் முடிவுகளை எடுப்பதற்குக்கூட வீண்கால தாமதம் செய்யக்கூடாது. மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்குவதை ஒரு போர்க்கால நடவடிக்கையாகக் கருதிச் செயல்பட வேண்டும் என மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டமன்றத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளது நமக்கெல்லாம் மிகுந்த மனத் திருப்தியை அளிக்கிறது. தமிழகத்தில் இப்படிப்பட்ட மின் வெட்டு எதிர் காலத்தில் ஏற்படாத வண்ணம் தடுக்க அப்படிப்பட்ட முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது மிகமிக அவசியமாகும். இதற்காக நாம் உடனடியாகச் செய்ய வேண்டியது ஒன்று உண்டு. எந்த நாடு வெகு விரைவாக நமக்கு அதற்கான இயந்திரங்களை வழங்குகின்ற நிலையில் உள்ளதோ, அந்த நாடுகளிலிருந்து முக்கியமான இயந்திரங்களைப் போர்க்காலத்தில் கடைப்பிடிக்கின்ற முறையில் இறக்குமதி செய்து கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இந்த மிக முக்கியமான பணியினை மிக மிக விரைவாகக் கவனிக்கும் பொருட்டு, அனல் மின் பொறியியலில் தொழில் நுட்பம் வாய்ந்த வல்லுநர்களை அரசு ஒன்று சேர்த்து அரசின் சார்பில் கூட்டிணைப்புக் குழு (Consortium) ஒன்றினை உடனடியாக அமைத்தல் வேண்டும், என்ற கருத்தினை முன்னாள் திட்டக்குழு உறுப்பினர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் அண்மையில் வெளியிட்டிருந்தார். அவருடைய கருத்துப்படி செயல்படுவது தமிழ்நாட்டுக்கு மிகவும் பயன் தரும் வகையில் அமையும் என்று கருதுகிறேன்.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் இலவசக் கண் சிகிச்சைத் திட்டத்தின்கீழ், திருநெல்வேலி மாவட்டத்தில் இதுவரை நடைபெற்ற 7 முகாம்களில் 2,728 பேர்கள் அறுவைச் சிகிச்சை பெற்றுள்ளனர்.

ஒரு சுவையான செய்தியினை இங்குக் குறிப்பிட வேண்டும். வாஷிங்டனில் பிப்ரவரி 15-ல் வெளிவந்தசெய்திஒன்றில் ஜனாதிபதி நிக்சன் நிகழ்த்திய வானொலிப் பேச்சில் ''அமெரிக்கா இப்பொழுது தன்னிடம் உள்ள மின்சாரத்தின் அளவுக்கு மேல் மின்சாரத்தைப் பயன்படுத்துகிறது'' என்ற உண்மையை எடுத்துக் கூறி அமெரிக்க மக்களை அவர் எச்சரித்துள்ளார். ''மின்சாரப் பிரச்சினை தொடர்ந்து மிக முதன்மையான இடத்தில் வைத்து எண்ணப்படும்'' என்றும் அவர் கூறியுள்ளார். ''மக்களுக்குத் தாங்கக் கூடிய குறைந்த விலையில் மின்சாரத்தை வழங்குவதற்காக வேண்டி, அதற்கான பரவலான நடவடிக்கைகள் அடங்கிய சட்டங்களை அமெரிக்கக் காங்கிரசுக்கு விரைவில் தாம் அனுப்ப உள்ளதாகவும்'' அமெரிக்க ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்தியாவைவிட 30-லிருந்து 40 மடங்கு தனிநபர் மின் உபயோகிப்பு அதிகம் உள்ள நாடுகளில் அமெரிக்காவும் ஒன்று. அந்த நாட்டிலேயே உள்ள மேற்கண்ட நிலையை நம் கண் முன்நிறுத்திப் பார்ப்போமானால் நம் நாட்டில் மின் உற்பத்தி பற்றித் திட்டங்கள் தீட்டுவோர் எவ்வளவு அக்கறையுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் வேகமாகவும், நடந்து கொள்ள வேண்டும் என்பதை விளக்கவே தேவையில்லை. இன்னும் 3 அல்லது 4 ஆண்டுக் காலத்திற்குள்ளாகத் தமிழ்நாட்டில் குறைந்தது ஒரு மிலியன் கிலோ வாட்டுக்கள் மின் உற்பத்தி செய்கின்ற அளவுக்காவது அனல் மின் நிலையங்களை நாம் உருவாக்கத் தவறிவிட்டோமானால் தமிழ்நாட்டிற்குக் கதி மோட்சமே கிடையாது என்பதை ஒவ்வொருவரும் நெஞ்சத்திலே பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

நமது நாட்டின் பல்வேறு மாநிலங்களிலும் உள்ள அனல் மின் நிலையங்களில் கையாளும் செயல் முறைகளைக் கூர்ந்து ஆராய்ந்து பார்த்த பொழுது ஓர் உண்மை தெளிவாகப் புலனாகியது. நமது நாட்டில் சீரான வளர்ச்சி அடைய வேண்டுமெனில், ஒழுங்கான முறையில் திட்டமிடுதல்; அனல் மின் நிலையங்களைச் சீரான முறையில் செயல்படுத்துதல் ஆகியவை மிகமிக முக்கியமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சங்களாகும்.

கடந்த ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளாக, நமது நாட்டின் அனல் மின் நிலையங்களிலிருந்து ஓராண்டுக்கு 6000 மணி நேரங்களுக்குக் கிடைக்கக்கூடிய மின் சக்தி கிடைக்கப் பெறுவதில்லை. கீழ்க்கண்டவைகளே இதற்குக் காரணங்கள் எனக் கூறலாம்.

(1) அனல் மின் நிலையங்களை நிறுவ, இயக்க, பராமரிப்புச் செய்ய, பழுது பார்க்க ஆகிய இந்தப் பணிகளுக்குத் தேவையான அனுபவம் உடைய பயிற்சி பெற்றவர்கள் போதிய அளவில் நம் நாட்டில் இல்லை.

(2) அனல் மின் நிலைய இயந்திரங்களுக்கு மிகவும் அவசியம் தேவைப்படுகிற உதிரிக் கருவிகள், நீண்ட காலத்திற்கு வெளி நாட்டிலிருந்து இறக்குமதியாவதற்குக் காத்துக் கொண்டிராமல், உள் நாட்டிலேயே அவை உடனடியாகக் கிடைக்க முடியாத நிலை உள்ளது. இதற்கான தொழில் நுட்பத் திறனும் கிடைப்பதில்லை. அத்துடன் இயந்திரங்களைப் பெற்ற பிறகு அவைகளைச் சர்வீஸ் செய்வதற்கு வேண்டிய கருவிகள் உள்நாட்டில் தயாராவதில்லை.

(3) அனல் மின் நிலையங்களுக்குத் தகுந்த எரி பொருள்களைப் போதிய அளவுக்கு 'சப்ளை' செய்வதை ஒரு முகப்படுத்திச் செய்கின்ற அமைப்பு முறை இல்லாதது.

(4) அனல் மின் பொறியாளர்களையும், தொழில் நுட்ப வல்லுநர்களையும் ஊக்குவிக்கும் முறையில் அவர்கள் பணியில் ஆர்வம் குன்றி விடாமல் பார்த்துக் கொள்ளக் கூடிய முறையில் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இந்தக் குறைகள் முக்கியமாகக் களையப்பட வேண்டியவையாகும். இந்தக் குறைகளினால் பொறிகளையும் கருவிகளையும், பழுது பார்ப்பதில் மிகுந்த கால தாமதம் ஏற்படுகிறது. இந்தக் குறைகள் நீக்கப்பட்டாலொழிய அனல் மின் நிலையங்களிலிருந்து முழுமையான அளவு மின்சாரத்தினை நாம் பெற முடியாது. இவை போக்கப்படா விட்டால் அனல் மின் நிலையங்களின் நிறுவனத் திறனை நாம் எவ்வளவுதான் அதிகரித்தாலும் தொடர்ந்து மின் பற்றாக்குறை நாட்டில் இருந்துகொண்டுதான் இருக்கும்.

அனல் மின் நிலையங்களைப் பராமரிப்பதில் உள்ள சிக்கல்கள் மிகப் பெரிய அளவிலானவை. போதிய தொழில் நுட்பத் திறனும், பயிற்சியும், உள்ள அனல் மின் இயந்திரப் பொறியியலில் தனி அனுபவம் பெற்றுள்ள பொறியாளர்களால் தான் இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காண முடியும்.

அனல் மின் நிலையங்களை இயக்குவது என்பதும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். இந்த வேலையை அந்தப் பணியில் கற்றுக் குட்டிகளாக இருப்பவர்களிடம் ஒப்படைக்கக் கூடாது. அனல் மின் இயந்திரங்களை இயக்குபவர்கள் அல்லது பராமரிப்பவர்கள் செய்யும் தவறுகளினால் ஏற்படக் கூடிய சேதம் பிரம்மாண்டமானதாக இருக்கும். நாட்டு நலனில் அக்கறை கொண்டு பார்த்தால், அனல் மின் உற்பத்தியில் இப்பொழுதுதான் ஈடுபட்டுச் செயல்படுத்தி வரும் அதுவும் குறிப்பாக நமது நாட்டில் அனல் மின் நிலையங்களில் நிறுவப்பட்டுள்ள விலையுயர்ந்த இயந்திரங்களுக்குச் சேதம் ஏற்படுவதை நாம் தாங்க முடியாது. முன்னேற்றம் கண்டுள்ள மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, அனல் மின் இயந்திரச் சாதனங்களில் நமக்குள்ள அனுபவமும், தொழில் நுட்பத் திறனும் மிகவும் குறைந்த அளவினதாக உள்ளதால், இந்தத் துறையில் போதிய அனுபவத்தையும் தொழில் நுட்பத் திறனையும், அதுவும் குறிப்பாக நமது நாட்டில் அனல் மின் உற்பத்தியை அதிகமாக்கிக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், வெகுவாகப் பெருக்க வேண்டியது, இன்றியமையாத ஒன்றாகும்.

ஆகவே, நம்முடைய அனல் மின் பொறியாளர்களுக்கு வெகு வேகமாகவும், பெரிய அளவிலும் பயிற்சி அளிக்கப்பட வேண்டியது, மிகுந்த நன்மை பயப்பதாக அமையும். அவர்களுக்குப் பயிற்சி அளிப்பது மட்டுமல்ல; தொடர்ந்து அவர்கள் அந்தத் துறையில் ஈடுபட்டிருக்கிற விதத்திலும் பார்த்துக் கொள்ள வேண்டும். இப்படிச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்ட பொறியாளர்களை மற்றப் பொறியாளர்களுடன் ஒப்பிடாமல், சிறப்பாக நடத்துவதற்கான முடிவுகளை நாம் தைரியமாக எடுத்தால், இப்படிப்பட்ட சூழ்நிலையை நம்மால் உருவாக்க முடியும். நமது நாட்டில் இன்று உருவாகியுள்ள பொறியாளர்களின் இன்றுள்ள நிலை, அவர்களுடைய நோக்கம் ஆகியவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு, எப்படி இதை நடைமுறையில் செயல்படுத்துவது என்பது பற்றி முடிவு செய்யலாம்.

> தமிழகத்தில் 1967-ஆம் ஆண்டுத் தொடக்கப் பகுதியில் 11 ஆயிரமாக இருந்த சிறு தொழில்களின் எண்ணிக்கை, கடந்த 7 ஆண்டுகளில் 29 ஆயிரமாக அதிகரித்திருக்கிறது.

அனல் மின் நிலையங்களை இயக்குதல், மற்றும் பராமரித்தல் சம்பந்தமான பொறியாளர்கள் போதிய அளவுக்கு இல்லாத ஒரு நிலை இருக்கிறபடியால், இந்தத் துறையில் அனுபவம் மிக்க வெளிநாட்டு வல்லுநர்களை நமது நாட்டிற்குக் கொண்டு வந்து, நம்முடைய பொறியாளர்கட்கு அவர்களைக் கொண்டு அனல் மின் நிலையக் கருவிகளைப் பழுதுபார்த்தல், பராமரித்தல், இயக்குதல் சம்பந்தமான பயிற்சிகளை வெகுவாக அளிக்கச் செய்யலாம்.

அனல் மின் நிலையங்களில் இது வரையில் நிறுவப்பட்டுள்ள கருவிகளையும் இயந்திரங்களையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அல்லது நமது நாட்டிலேயே தயார் செய்யப்பட்டவற்றைக் கீழ்க் கண்ட முறையில் வகைப் படுத்தலாம் —

(1) இங்கிலாந்திலிருந்து பெறப்பட்ட கருவிகள்.

(2) அமெரிக்காவிலிருந்து பெறப்பட்ட கருவிகள்.

(3) போலந்து, செக்கோசுலோவேகியா, யூகோஸ்லோவியா, ஜெர்மனி ஆகிய நாடுகளிலிருந்து பெறப்பட்ட கருவிகள்.

(4) ரஷ்யாவிலிருந்து பெறப்பட்ட கருவிகள்.

(5) ஜப்பானிலிருந்து பெறப்பட்ட கருவிகள்.

பல்வேறு நாடுகளிலிருந்து பெறப்பட்ட மேற்சொன்ன கருவிகளை நிறுவுதல், பராமரித்தல், பழுதுபார்த்தல், இயக்குதல், இவ்விதப் பணிகளுக்குக் கீழ்க் கண்ட முறையில் பிரிவுகளாக வகைப்படுத்தலாம் :—

(1) இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா,

(2) போலந்து, செக்கோசுலோவேகியா, யூகோஸ்லோவியா, ஜெர்மனி, ரஷ்யா.

(3) ஜப்பான்.

மேற்கண்ட ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு குழு என்ற அளவில், நாம் வெளிநாடுகளிலிருந்து தொழில் நுட்ப வல்லுநர்களைப் பெறலாம். சான்றாக

(1) இங்கிலாந்திலிருந்து ஒரு குழு.

(2) செக்கோசுலோவேகியா அல்லது ரஷ்யாவிலிருந்து ஒரு குழு.

(3) ஜப்பானிலிருந்து ஒரு குழு.

நமது நாட்டில் நிறுவப்படும் பல்வேறு மின் உற்பத்தி நிலையங்களிலும் உள்ள இயந்திரங்களை வெளிநாட்டு வல்லுநர்களைக் கொண்டு நம்முடைய பொறியாளர்கட்குப் பயிற்சி அளிக்க வேண்டும். கீழ்க்கண்ட வல்லுநர்களைக் கொண்டதாக இக்குழுக்கள் இருக்க வேண்டும்.

(1) கொதிகலன்களுக்கான மேலாளர்கள் (Foreman)

(2) டர்பைன்களுக்கான மேலாளர்கள்.

(3) கொதிகலன் துணைக் கருவிகள், டர்பைன் துணைக் கருவிகளுக்கான மேலாளர்கள்.

(4) மின் உற்பத்தி இயந்திரங்கள், ஸ்விட்ச் கியர்களுக்கான மேலாளர்கள்.

மேற்சொன்ன நாடுகளுடன் நமக்குத் தொடர்ந்து நல்ல தொடர்பு இருந்து வருகிற படியால், அந்த நாடுகளிலிருந்து தகுந்த வல்லுநர்களைப் பெறுவது சுலபமாகவே இருக்கும்.

மேற்சொன்ன துறைகளில் அனுபவம் பெற்றுள்ள நமது நாட்டுப் பொறியாளர்கள் இந்த வெளிநாட்டு வல்லுநர்களுக்குத் துணையாக இருப்பர். இந்த வல்லுநர் குழுவினரை ஒரு குறிப்பிட்ட மின் உற்பத்தி நிலையத்தில் தங்க வைத்து, ஒவ்வொரு நிலையத்திலும் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குக் குறையாத காலத்திற்குப் பழுது பார்த்தல், பராமரித்தல், எப்படி இயந்திரங்களைக் கையாள வேண்டும் என்பது பற்றி யோசனை கூறி வழிகாட்டுதல் ஆகிய பணிகளை அவர்களே செய்கின்ற முறையில் ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். செய்ய வேண்டிய பணிகளுக்கு உள்ளூர்ப் பகுதிகளிலிருந்து வேண்டிய பொறியியல் வல்லுநர்களை, தொழில் நுட்பம் பெற்றவர்களை தொழில் நுட்பம் இல்லாதவர்களையும் அவர்கள் சேகரித்துக் கொண்டு செயல்பட வேண்டும். செய்யப்பட வேண்டிய வேலைகளைப் பொறுத்து ஒரு குறிப்பிட்ட இடத்தில் மேலும் சில மாதங்கள் தங்கியிருக்க வேண்டும் என்று அக்குழுவினர் கருதினால் அவ்வாறே இருக்க அவர்கள் அனுமதிக்கப்படலாம். அதே மாதிரி இக்குழுவினரை மற்ற நிலையங்களுக்கு மாற்றி மாற்றி அனுப்பலாம். நம்முடைய அனுபவத்திலிருந்து இந்த மூன்று குழுவினர்களையுமே ஒரே சமயத்தில் ஒட்டு மொத்தமாகவே வர

வழைத்து இந்தியாவிலுள்ள பல அனல் மின் நிலையங்களில் வேலைகளைத் துவக்க ஏற்பாடுகள் செய்தால், பயிற்சி அளிக்கும் பணி பெரிய அளவில் நடைபெற்று எவ்வளவு குறுகிய காலத்தில் பயன் பெற முடியுமோ, அவ்வளவு குறுகிய காலத்தில் அதனாலான பயனையும் நாம் பெற முடியும் எனத் தெரிகிறது. அனல் மின் நிலையங்களில் உள்ள விலையுயர்ந்த பொறிகளையும், இயந்திரங்களையும் நிறைவான முறையில் பராமரிக்கவும், அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தித் திறன் குறைந்து விடாமல் செய்து, அதனால் நாட்டிற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏற்படக்கூடிய இழப்புகளைத் தவிர்க்கவும் இந்த ஏற்பாடுகளின் மூலம் செய்யலாம் என்பதனால், இதற்காகச் செய்யப்படும் செலவு வீணாகாது. மிகுந்த பயன் அளிக்கக் கூடியதேயாகும். துவக்க நிலையில் இதற்காகும் செலவுகள் மின் சக்தி அமைச்சரகத்தில் நிதி ஒதுக்கிலிருந்து செய்யப்பட்டு, இறுதியில் அதனால் பயன் அடைகின்ற மாநில அரசுகள், மாநில மின்சார வாரியங்களிடமிருந்து சரிக்கட்டிக் கொள்ளலாம்.

**கல்பாக்கம் செல்லும் கொதிகலன்கள்**

**கல்பாக்கம் அணுமின் திட்டத்தின் முதல் பிரிவுக்குத் தேவையான மிகப்பெரும் நீராவிக் கொதிகலன்கள் இரண்டு அண்மையில் சென்னைத் துறைமுகத்தில் வந்து இறங்கின. முதல் பிரிவு அமைப்பதற்கு இதுபோன்று இன்னும் ஆறு கொதிகலன்கள் தேவைப்படுகின்றன. எட்டுக் கொதிகலன்களையும் தயாரிப்பதற்கு ஏறக்குறைய 1 கோடியே 43 லட்சம் ரூபாய் செலவாகும் என்று தெரிகிறது.**

ஒரு கருத்தினை இந்தத் தருணத்தில் குறிப்பிட வேண்டும். அனல் மின் நிலையங்களுக்கான கருவிகளைத் தயாரிக்கும் நம் நாட்டுத் தயாரிப்பாளர்கள், கருவிகளைத் தயார் செய்வதில் நல்ல தரத்தினையும், தொழில் நுட்பத் திறனையும் கையாள்வதோடு, அவைகளைத் திருப்திகரமான முறையில் நிறுவுதல், பராமரித்தல், சோதனையிடல், இயக்குதல் ஆகிய துறைகளிலும் தகுந்த அனுபவம் பெற்றவர்களாகத் தங்களை ஆக்கிக் கொள்ள வேண்டும். இது மிக மிக முக்கியம். இதனால், இந்தியாவில் தயாரிக்கப்படும் கருவிகளை வாங்குபவருக்கு நல்ல ஒரு நம்பிக்கை உருவாக இது வழிகோலும்.

இப்பொழுது இயங்கி வரும் மத்திய நீர்-மின்சக்தி ஆணைக் குழுவினரால் அமைக்கப்பட்டுள்ள அனல் மின் நிலைய சம்பந்தமான பயிற்சி நிலையங்கள் இரண்டும் தீவிரப்படுத்தப்பட்டு, மேலும் பயன் அளிக்கக் கூடியதாக இயங்குகின்ற வகையில் அவை திருத்தி அமைக்கப்படல் வேண்டும்.

இந்த இரண்டு பயிற்சி நிலையங்களிலும் போதிய அளவுக்கு Stimulator களை நிறுவுவதனுடன் போதிய நடைமுறை அனுபவம் பெற்றுள்ள தகுந்த தரமான பயிற்சி அளிப்போர்களைப் பயிற்சி பெறுபவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக அமர்த்த வேண்டும். வேண்டிய அளவுக்குத் தங்கும் விடுதி வசதிகள், இந்தப் பயிற்சி நிலையங்களில் இருக்க வேண்டும். பயிற்சி பெறுபவர்களுக்கு ஓர் ஊக்கத்தையும் ஆர்வத்தையும் உண்டாக்குகின்ற முறையில் இவ்விடுதிகள் தரமான முறையில் நடத்தப்பெறல் வேண்டும். அனல் மின் நிலையம் குறித்து அனுபவம் பெற்ற திறமைசாலிகளாக உள்ள விரிவுரையாளர்களை இந்தப் பயிற்சி நிலையங்களுக்கு அழைத்து அவர்களுடைய உரைகளிலிருந்து அனுபவத்தினைப் பெற்றுப் பயிற்சியாளர்கள் பயன் அடையும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும்.

இப்படித் தகுந்த முறையில் பயிற்சி பெற்ற பிறகு, பல்வேறு பயிற்சி நிலையங்களும் மிகக் கடுமையான ஒரு தேர்வினை நடத்த வேண்டும். அந்தத் தேர்வினை ஒட்டிப் பயிற்சியாளர்களுக்கு அதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பெறல் வேண்டும். எந்த விதத் தடங்கலோ தடுமாற்றமோ இன்றி எந்த இயந்திரத்தில் பயிற்சி பெற்றிருக்கிறோமோ, அந்த இயந்திரத்தைக் கையாள அவருக்கு ஓர் உரிமை அளிக்கின்ற முறையில் இந்தச் சான்றிதழ் இருக்கும்.

இப்பொழுது நமது நாட்டில் பயிற்சி பெற்ற நபர்கள் மிகக் குறைவாக உள்ளனர். அனல் மின் நிலையங்களை அதிகமாக நிறுவ நாம் உத்தேசித்துள்ள நிலையில், அனல் மின் நிலையங்களில் உள்ள விலையுயர்ந்த கருவிகளை, அக் கருவிகளைக் கெடுத்து விடாமல், நல்ல முறையில் கையாளக் கூடிய பயிற்சி பெற்றவர்கள் இல்லாமல் நாம் வருங்காலத்

தில் திண்டாட வேண்டிவரும். ஆகவே, இந்தப் பயிற்சி அளிக்கும் பணி பெரிய அளவில் செய்யப்பட்டாக வேண்டும். இப்படிப் பயிற்சி அளிப்பதில் நாம் கால தாமதம் செய்வோமே யானால் மின் நிலையங்கள் மேலும் மேலும் நிறுவிவிட்டாலும் கூட அனல் மின் நிலையங்களைப் பராமரிக்கும் திறனை அது வெகுவாகப் பாதிக்கும். அத்துடன் மின் நிலையங்களிலிருந்து கிடைக்கும் மின்சக்தியும் மிகவும் குறைந்து விடும்.

நாட்டில் உள்ள பெரிய பெரிய அனல் மின் நிலையங்கள் அதிகப் புழக்கமில்லாத எங்கோ மூலை முடுக்கான இடங்களில் கட்டப்பட வேண்டியிருக்கிறது. இந்த நிலையங்களைப் பராமரிக்கின்ற இயக்குகின்ற நபர்களுக்கு, அவர்கள் அப்படிப்பட்ட பணிகளில் ஒரு தொய்வு ஏற்பட்டு மற்ற வேலைகளுக்குப் போய் விடாமல் இருக்க, அவர்களுக்குப் போதிய ஊக்குதல் அளிக்கப்பட்டு, அப்படிப்பட்ட இடங்களில் அவர்கள் பணியாற்ற அவர்களுக்கு ஒரு கவர்ச்சி, ஓர் ஈடுபாடு உண்டாகும் வகையில் சூழ்நிலை இருத்தல் வேண்டும். அனல் மின் நிலையங்களில் சிறப்புப் பணியாற்றுபவர்கள் அவசரமான நெருக்கடியான காலக் கட்டத்தில் கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது. மற்ற மின் பொறியாளர்களின் பணித் திறமைக்கும் அனல் மின் பொறியாளர்களின் பணித் திறமைக்கும் அதிக வேறுபாடு உண்டு. ஆகவே, இந்தப் பிரிவினர் ஒரு சிறப்பான முறையில் தனிச் சலுகைகளுடன் அளிக்கப்பட்டு நடத்தப் பெறல் வேண்டும். இந்தத் தனிச் சிறப்புப் பணியில் வெறுப்புத் தட்டாமல் அவர்கள் தொடர்ந்து திருப்தியுடன் பணியாற்ற இது ஒன்றுதான் வழி. அதனால் அனல் மின் நிலையங்களைப் பராமரிக்க அனுபவமிக்கவர்கள், போதிய அளவு இல்லையே என்ற குறை நீங்கும். அப்படி இல்லையென்றால் இந்த அனல் மின் நிலையங்களை ஒழுங்காகச் சீராகப் பராமரிப்பது என்பதே பாதிக்கப்பட்டு விடும்.

இறுதியாக, பொதுவாக நமது நாட்டின், குறிப்பாக நமது தமிழகத்தின் எதிர் கால மின் சாரத் தேவையைச் சமாளிக்கக் கீழ்க்கண்ட மூன்று வழிகளைக் கையாளலாம்:—

(1) உடனடியாகச் செய்யப்பட வேண்டியவை.

(2) குறுகிய கால நடவடிக்கைகள்.

(3) நீண்ட கால நடவடிக்கைகள்.

உடனடி ஏற்பாடாக மின் பொறியியல் அலுவலரிடையே முழுமையான அளவில் ஒழுங்கும், கட்டுப்பாடும் நிலவும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். இதனால் நாம் எதிர் காலத்தில் ஏற்றுச் செய்கின்ற, எந்தக் குறுகிய காலப் பணிகள் அல்லது நீண்ட காலப் பணிகள் அவை எதுவாக இருந்தாலும் அவற்றை ஏற்றுச் செயல்படுத்திக் காட்டுகின்ற ஒரு நிறைவான சூழ்நிலை நிச்சயம் உருவாகும்.

குறுகிய கால ஏற்பாடாக மின் உற்பத்திக்கு வேண்டிய முக்கியப் பொறிகளையும், கருவிகளையும், மின் நிலையம் நிறுவுவதற்குத் தேவையான அளவில், குறைந்த பட்சம் பாதி அளவுக்கான கருவிகளையாவது உடனடியாக வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்தாக வேண்டும். அத்துடன், அனல் மின் நிலையம் பற்றி முடிவு செய்து அதை அமைப்பதற்காக எடுத்துக் கொள்ளப்படும் நீண்ட கால இடைவெளியைத் தவிர்க்க அனல் மின் நிலையங்கள் நிறுவுதல் பற்றி விரைவாகவும் தாமதமின்றியும் முடிவு எடுக்கப்பட வேண்டும்.

தூத்துக்குடி, நெய்வேலி ஆகிய இடங்களில் அனல் மின் நிலையங்களை நிறுவுவது எந்தவிதத் தாமதமுமின்றி எந்த வெளி நாட்டிலிருந்து அதற்கான கருவிகள் உடனடியாகக் கிடைக்கிறதோ அந்தந்த நாடுகளிலிருந்து அவற்றை இறக்குமதி செய்து உடனே பணியைத் துவக்கிடல் வேண்டும். நிலக்கரியைக் கொண்டுவர முழுமையான ரயில் வசதிகளும், அத்துடன் கடல் மூலமாகவும் நிலக்கரியைக் கொண்டுவர உடனடியாக ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

நீண்டகால ஏற்பாடாக, நவீன அணு மின் நிலையங்களைத் தோற்றுவிக்க வேண்டும். நமது நாட்டில் கிடைக்கும் அணு எரி பொருள்களை அதற்குப் பயன் படுத்த வேண்டும். நாடாளுமன்றத்தில் முடிவு எடுத்து, அதற்கான சட்டத்தினைப் பிறப்பித்து, ஆரம்பத்தில் சொல்லியுள்ள மாதிரி, மண்டல அளவில் மின் உற்பத்தி அமைப்பினை (Region Wise Power Pool Arrangements) உருவாக்க வேண்டும்; அல்லது மண்டல அளவில் கூட்டுறவு முறையில் மின் உற்பத்தி ஏஜென்சி ஒன்றினை உருவாக்கிச் செயல்படுத்த வேண்டும்.

## குறைந்துவரும் புலி இனம்

இந்தியாவில் கி.பி. 1900-ஆம் ஆண்டில் 40 ஆயிரம் புலிகள் இருந்தன. 1973-ஆம் ஆண்டு ஏப்ரல், மே திங்கள்களில் எடுத்த கணக்குப்படிப் பார்த்தால் அவற்றின் எண்ணிக்கை 1827. புலிகள் இவ்வாறு குறைந்ததற்குக் காரணம் என்ன? வேட்டைக்காரர்கள்தான் காரணம்! புலி, விலங்குகளில் எல்லாம் அழகாகக் காணப்படுவதாலும், வேட்டைக்காரர்கள் அவற்றின் தலைகளையும் தோலையும் விரும்புகிறார்கள். அதனால் புலிகளை வேட்டையாடி வருகிறார்கள். இந்த நிலை இப்படியே நீடித்தால்—மனித இனம் புலிகளை இப்படியே தொடர்ந்து வேட்டையாடி வந்தால்—பிறகு புலி என்னும் விலங்கினமே நமது நாட்டில் நினைவுப் பொருளாக மாறிவிடும்!

தமிழ்நாடு எல்லா வகையிலும் வழிகாட்டியாகத் திகழ்ந்து வருகிறது. குடிசை மாற்று வாரியம், குடிநீர் வடிகால் வாரியம் போன்ற புதிய வாரியங்களை இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழ்நாடுதான் உருவாக்கியுள்ளது. சீரணி என்னும் தொண்டர் படையையும் தமிழ்நாடுதான் உருவாக்கியுள்ளது. துவக்கத்தில் சீரணியைப் பற்றித் தவறான பல கருத்துக்களைச் சொல்லி வந்தவர்கள் கூடத் தற்போது தெளிவு பெற்றுச் சீரணியைப் போற்றுகிறார்கள். இந்தியாவில் மற்ற மாநிலங்களிலும் இந்தச் சீரணி இடம் பெற வேண்டும் என்ற கருத்து மற்ற மாநிலத்தவர்களிடம் தற்போது காணப்படுகிறது.

சைதாப்பேட்டையில் நரிக்குறவர் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் தங்கிப் படிக்கும் விடுதியொன்றை உருவாக்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இந்தப் பணியைச் சீரணியினர் செய்யவிருக்கின்றனர்.

மே திங்கள் 8-ஆம் நாளன்று சென்னை மாவட்டச் சீரணித் தலைவர் திரு. நீல. நாராயணன் அவர்கள் தலைமையில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் அடிக்கல் நாட்டுவித்தார். அமைச்சர் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டார்கள் :—

'' மிக மிக அடிமட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நரிக்குறவர் மாணவர்கட்கு இந்த விடுதி கட்டித்தரப்படுகிறது. இந்தியாவிலேயே ஒவ்வொன்றுக்கும் நாம்தான் வழிகாட்டியாக இருக்கிறோம். அதுபோலவே இந்த விடுதி கட்டித்தருவதிலும், தமிழகம்தான் வழிகாட்டியிருக்கிறது.

'' தமிழ்நாட்டில் சீரணியின் பணிகளை டெல்லியில் உள்ள அமைச்சர்களும் அதிகாரிகளும் பாராட்டி வருகின்றனர். இந்தத் திட்டம் எப்படிச் செயல்படுகிறது என்பதையும், நேரில் கண்டு சென்றிருக்கின்றனர்.

'' ஓர் இயக்கத்தைப் பெரிதாக நடத்தி விட்டால் மட்டும் போதாது. அந்த இயக்கத்தில் உள்ள முன்னோடிகள் தீட்டித் தருகின்ற திட்டத்தை நிறைவேற்றுவதில்தான் பெருமையே இருக்கிறது. அண்ணாவால் உருவாக்கப்பட்ட சீரணி, கலைஞர் தலைமையில் மிகச்சிறந்த பணிகளைச் செய்து வருகிறது என்பதற்கு இந்த விடுதியே ஒரு சான்றாகும்.

## பிறந்தநாள் பரிசு

தலைமை வகித்த சென்னை மாவட்டச் சீரணித் தலைவர் நீல நாராயணன் பேசியதாவது:

சென்னைச் சீரணியினர் நாட்டிற்காகப் பல்வேறு பணிகளைச் செய்து வருவதை நாமெல்லாம் அறிவோம். சீரணியினர் உடலுழைப்பைத் தந்து சீரணி அரங்கத்தைக்கட்டித்தந்தார்கள். அண்ணாவின் பிறந்த நாள் பரிசாக அடையாற்றில் பத்தே நாளில் பள்ளிக் கட்டடத்தைக் கட்டித் தந்தார்கள். வியாசர்பாடியில் 40 நாளில் கால்வாயை அகலப்படுத்தித் தந்தார்கள். அதேபோல் இந்த விடுதியை இருபதே நாட்களில் கட்டி முடித்து, முதல்வர் கலைஞருக்குப் பொன்விழாப் பரிசாக அளிக்க வேண்டும் என்று உங்களையெல்லாம் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

'' சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ளவர்களின் கண்ணீரைத் துடைப்பதுதான் கலைஞரின் கொள்கையாகும். அதனால் அவருக்கு இந்த விடுதியைப் பரிசாக அளிப்பதில்தான் பெருமையே இருக்கிறது''.

இந்த விடுதியை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3-ஆம் நாள் அமைச்சர் நாவலர் தலைமையில் கலைஞர் திறந்து வைப்பார்.

சீரணி தனி அலுவலர் திரு. அப்துல் ரகீம் அவர்கள் நன்றி தெரிவிக்கும் போது குறிப்பிட்டார் :—

'' நாற்பதாண்டுக் காலம் தமிழகத்தின் காடு மேடுகளிலெல்லாம் சுற்றித் தமிழ் மக்களைத் தட்டி யெழுப்பிய இதய தெய்வம் அண்ணாவின் சிந்தனையில் தோன்றிய சீரணித் திட்டத்தைச் செயல் படுத்துவதில் சீரணித் தொண்டர்கள் தங்களை அர்ப்பணித்துக் கொள்வார்கள்''

நரிக்குறவர் சமூகத்தைச் சேர்ந்த ஆண்களும், பெண்களும் இந்த விழாவில் மிக உற்சாகமாகக் கலந்து கொண்டார்கள். தங்களது சமூகத்துக்குப் பயன்படும் இந்த அருந்தொண்டினை எண்ணும் போது அவர்களுக்கு மகிழ்ச்சி உருவாவது நியாயம் தானே !



# நல்லது கேட்கின் நலமுறச் சொல்வோம்!

இந்தியாவில் பசுமைப் புரட்சியில் தமிழகத்திற்கு முதலிடம்!

எல்லா
மாநிலங்களுக்கும்
வழிகாட்டியாக அமைந்துள்ள
**மாநிலத் திட்டக் குழுவின் பணிகள்**

எல்லாச்
சிற்றூர்களுக்கும்
**சாலை**
இணைப்புகள்!

இவைதனால் உருவாகும் நன்மையினும் பெரிது நாம் அமைத்திடும் அளவான குடும்பமே!

திட்டமிட்ட குடும்பமே நாட்டின் நலம் வளர்க்கும்!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
**இரண்டுக்குப்பிறகு எப்போதும் வேண்டாம்!**

குடும்ப நலத்துறை, தமிழ்நாடு அரசு



சுற்றுலா 4
சுந்தரம்
கதை : இளவல்
சித்திரம் : முத்து
சுந்தரம், நம்ப திட்டங்கள் எப்படி சுலபமா முடிஞ்சிருச்சு பாத்தியா?
காலநேரம் வந்தால் எல்லாம் தானாகவே முடிஞ்சிடும்.
என்னடா வேதாந்தம் பேசுறே..? சரி சரி பேசு! எல்லாம் கேட்டுக்கிறேன் நீ சொல்றது தானே நடக்குது!
நம்ப வெற்றி, சாதாரண வெற்றியில்லே! மாபெரும் வெற்றி! நாளைக்கு இந்நேரம் சோமு சுற்றுலாக் கம்பெனி காரிலே, ஜாம் ஜாம்னு போவோம்!!
இப்பவே சொக்குதுடா எவ்வளவு ஆனந்தமா காற்று வருது!
சுற்றுலாவுக்காக மறுநாள் காலையில் சுந்தரமும் அருளும் புறப்பட்டுக் கொண்டிருந்தனர். அப்பொழுது...
ஒரு டாக்ஸியைக் கூடக் காணோம்! இன்னும் ஒரு மணி நேரம் இருக்கு....
அதோ, பாரு சுந்தரம்! சிப்பாய்போல ஒரு ஆள் நம்மை நோக்கி வருகிறர்!
நீங்கள் இருவரும்.....
சுந்தரம்! அருள். இப்பொழுது சுற்றுலாவுக்குப் போய்க்கொண்டிருக்கிறோம். நீங்கள் யார்?
சர்வதேச சுற்றுலாச் சங்கத் தலைவர் மிஸ்டர் லாலீஷாவின் உதவியாளர் நான். சுற்றுலாவில் ஆர்வமுள்ளவர்களைச் சந்தித்து உதவுவது எங்கள் பணி. அதோ கார்! வாருங்கள். போகலாம்.


அதிர்ஷ்டம் நம்மை இப்படியல்லவா தேடி வரவேண்டும்?
இப்பநாம் எங்கே போகிறோம்?
மிஸ்டர் லாலிலூவாவைப் பார்க்கப் போகிறோம்
நாங்கள் சுற்றுலா போகும் பஸ் இன்னும் ஐம்பது நிமிஷத்தில் புறப்படுமே!
ஐம்பது நிமிடமிருக்கே.... அரைமணி நேரத்தில் திரும்பி விடலாம்.. மிஸ்டர் லாலிலூாவைப் பார்த்து விட்டால் உங்களை விமானத்திலே கூட அனுப்பிவைப்பார்
ஏரோப்ளேனிலா!
நீங்கள் விமானத்தில் போக வேண்டுமென்ற ஆசையை லாலீலூ விடம் சொன்னால் செய்வார்!
தம்பிகளே... உங்களைப்போன்ற தம்பிகள் உலகமுழுதும் சுற்றிப் பார்க்கவேண்டும். சர்வதேச குழந்தைகள் சுற்றுலாச் சங்கம் இதைத்தானே குறிக்கோளாகக் கொண்டது! நீங்கள் விமானத்தில் போக வேண்டும்..ம்.. இன்றே போகலாம், முதலில் காஷ்மீர் போவோமா!
தாங்ஸ் சார்.. ரொம்ப ரொம்ப நன்றி! எங்க நன்றியை எப்படிச் சொல்றதுண்ணு தெரியலே
இது சர்வதேச குழந்தைகள் சுற்றுலாச்சங்க விமானம். வாங்க! பிரமாதமா இருக்கும்
சார், எங்க மகிழ்ச்சியை எப்படி சொல்றதுன்னு தெரியலே சார்!
விமானம் பறந்து கொண்டிருந்த போது திடீரென்று தீப்பிடித்தது!
ஐயோ... நாம தப்பமுடியாதா...
டமார்
தொடரும்




சோழ நாட்டில் மலரி என்னும் ஓர் ஊர் இருந்தது. அந்த ஊரில் ஒட்டக்கூத்தர் என்னும் ஒரு புலவர் இருந்தார். இவர் கவி இயற்றுவதில் வல்லவர். தனக்கு நிகர் யாரும் இல்லை என்று வாழ்ந்து வந்தார். சொன்ன உடனே மிக வேகமாகப் பாட்டு எழுதும் திறமை படைத்தவர். ஆதலால் இவரைக் 'கவி அரக்கன்' என்று எல்லாரும் அழைத்தனர்.

சோழ நாட்டை விக்கிரம சோழன் என்னும் மன்னர் ஆண்டு வந்தார். அவருக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் குமார குலோத்துங்கன். விக்கிரம சோழன், ஒட்டக்கூத்தரின் புலமையை அறிந்து, தன் அவையிலேயே அவரைப் புலவராக அமர்த்திக் கொண்டார்.

விக்கிரம சோழனுக்குப் பிறகு, அவரது மகன் குமார குலோத்துங்கன் ஆட்சிக்கு வந்தான். குமார குலோத்துங்கனுக்குத் தமிழில் நீங்காத பற்று இருந்தது. புலவரின் இனிய பாடல்களைக் கேட்டு இன்புற்றான். இதனால் புலவருக்கும், குமார குலோத்துங்கனுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. புலவரையே தன் பெற்றோராக எண்ணி அன்பு செலுத்தி வந்தான்.

குமார குலோத்துங்கனுக்குத் திருமணம் செய்து வைப்பது தமது கடமை என்று உணர்ந்த புலவருக்கு, இறந்துவிட்ட மன்னர் விக்கிரம சோழன் சொன்னது நினைவுக்கு வந்தது. "ஆம். அப்படித்தான் செய்ய வேண்டும். பாண்டியன் மகளைத்தான் குமார குலோத்துங்கனுக்குத் திருமணம் செய்விக்க வேண்டும்" என்று ஒரு முடிவுக்கு வந்து பாண்டியனுக்குத் தாம் பெண் பார்க்க வருவதாக ஓலை அனுப்பினார்.

ஒருநாள் புலவர் பாண்டிய நாட்டுக்குச் சென்றார். முகம் மலரப் புலவரை வரவேற்றான் பாண்டியன். புலவர் தாம் வந்த காரியத்தைக் கூறினார். உடனே அரசர், "என்னுடைய மகளைச் சோழர் கேட்கிறாரே, அவருக்குரிய சிறப்புகள் என்னென்ன?" என்று விளையாட்டாகக் கேட்டார். அதற்கு உடனே புலவர், சோழ நாட்டின் வளத்தையும், சிறப்பையும் புகழையும் விளங்கக் கூறினார். உடனே, பாண்டியன் அவைப் புலவராகிய புகழேந்திப் புலவர், ஒட்டக் கூத்தருக்கு எதிராகப் போட்டி போட்டுக் கொண்டு பாண்டிய நாட்டின் வளத்தையும், சிறப்பையும், புகழையும் எடுத்துக் கூறினார். இதனால் ஒட்டக் கூத்தருக்குப் புகழேந்திப் புலவர் மீது ஆத்திரமும், பொறாமையும் ஏற்பட்டது. அவரது செருக்கை அடக்க வேண்டும் என்று ஒட்டக்கூத்தர் எண்ணிக் கொண்டார்.

பின்னர் பாண்டியன், திருமணச் செய்தியை அரண்மனையிலுள்ள பெரியவர்களுக்குச் சொன்னான். அவர்களும் சோழ இளவரசனுக்குப் பெண்ணைக் கொடுக்க விருப்பம் தெரிவித்தார்கள். திருமணத்துக்கான ஏற்பாடுகள் சுறுசுறுப்பாக நடந்தன.

அன்று திருமணம்!

குமார குலோத்துங்கனுக்கும், பாண்டியன் மகளுக்கும் மிகச் சீரும் சிறப்புமாகத் திருமணம் நடந்தது. மணமக்களுக்குப் பரிசுகளும், புலவர் பெருமக்களின் நல்வாழ்த்துக்களும் வந்து குவிந்தன. பாண்டியனுக்கோ தன் மகளை விட்டுப் பிரியப் போகிறோமே என்ற ஏக்கம் சூழ்ந்து கொண்டது. மகளைச் சோழ நாட்டுக்கு அனுப்பும் போது, தமது அவைப்புலவரும், தன் அருமை மகளின் ஆசிரியருமாகிய புகழேந்திப் புலவரையும் துணைக்கு அனுப்பினார்.

சோழ நாட்டு அரண்மனையில் புகழேந்தியாருக்கும் தக்க இடம் தரப்பட்டது. 'தனக்கு நிகர் யாருமே இல்லை!' என்று இத்தனை நாளும் இருந்து வந்த ஒட்டக்கூத்தருக்குப் புகழேந்தியார் தம்முடன் அவையில் இருப்பது கொஞ்சமும் பிடிக்கவில்லை. மேலும், அவர் அரசிக்கு வேண்டியவராய் இருப்பதால், தமது செல்வாக்கு இங்கே குறைந்துவிடுமோ என்றும் அஞ்சினார். இதனால் புகழேந்தியாரை எப்படியாவது அவையிலிருந்து நீக்கிவிட ஒட்டக்கூத்தர் சமயம் பார்த்திருந்தார்.

குலோத்துங்கனுக்கோ ஒட்டக்கூத்தரைத்தான் பிடிக்கும். புகழேந்தியாரைப் பிடிக்காது. ஆகையால், ஒட்டக்கூத்தர் சொல்லுக்கெல்லாம் செவி சாய்த்து வந்தான். அதன் விளைவு? புகழேந்தியார் சிறையில் அடைக்கப்பட்டார்! இந்தச் செய்தி இளவரசிக்குத் தெரியாது.

புகழேந்தியார் தம் பார்வையிலிருந்து ஒழிந்தது, ஒட்டக்கூத்தருக்கு நிம்மதியாக இருந்தது! பரிசு பெறலாம் என்று அரசனை நாடி வரும் புலவர்களை ஒட்டக் கூத்தர் அழைப்பார். கடுமையான கேள்விகளைக் கேட்பார். அவர்கள் அதற்குப் பதில் தர முடியாமல் விழிப்பார்கள். உடனே அவர்களை எல்லாம் சிறையில் தள்ளும்படி கட்டளை இடுவார்!

இன்னொரு வேடிக்கை என்னவென்றால், விழாக்காலங்களின் போது, சிறையில் உள்ள புலவர்களை எல்லாம் ஒட்டக் கூத்தர் அழைப்பார். மீண்டும் அவர்களைக் கேள்விகள் கேட்பார். அதற்கும் அவர்கள் பதில் தரவில்லையானால், இரண்டு பேரின் குடுமிகளை ஒன்றாக முடித்து, பிறகு நாவிதனால் அந்தக் குடுமிகளை எடுக்கச் சொல்வார். இவ்வாறு ஒட்டக் கூத்தர் புலவர்களை அவமானப் படுத்தி வந்தார். இவற்றையெல்லாம் கேட்டறிந்த புகழேந்தியார் மிகவும் மனம் வருந்தினார்.

புகழேந்திப் புலவர் சிறையில் இருப்பது இளவரசிக்குத் தெரியாது அல்லவா? சிறையிலிருந்து விடுதலையான புலவர் ஒருவர், புகழேந்தியார் சிறையில் இருப்பதைத் தோழிகள் மூலம் அரசிக்குச் சொல்லி அனுப்பினார். இதைக் கேட்ட இளவரசி மிக்க கோபமடைந்தாள். ''நமது ஆசிரியரையா சிறையிலிட்டார் மன்னர்?'' என்று வேதனைப்பட்டாள். அப்போது குமார குலோத்துங்கன் அரசியைக் காண அவள் இருக்கும் அறைப்பக்கம் வந்தான். ஆனால் அறைக்கதவு பூட்டப்பட்டிருந்தது. கதவைப்பலமுறை தட்டினான். கதவு திறக்கவே இல்லை. அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. மீண்டும் மீண்டும் கதவைத் தட்டினான். ஆனால், அரசி உள்ளே இருந்து கொண்டு கதவைத் திறக்காமலேயே இருந்தாள்.

மனம் வருந்தித் திரும்பிய அரசனை, அப்பக்கமாக வந்த ஒட்டக்கூத்தர் பார்த்தார். விவரம் அறிந்தார். உடனே அந்தப்புரம் சென்று அறைக் கதவைத் தட்டினார். அரசியாரின் கோபத்தைப் போக்க, அழகிய பாட்டு ஒன்றைப் பாடினார். அப்போது அறைக்குள் இருந்த அரசி, தன் தோழியைப் பார்த்து, ''இது யாருடைய குரல்?'' என்று கேட்டாள். ''இதுவா, இது ஒட்டக் கூத்தரின் குரல்'' என்றாள். ''அப்படியா? ஒட்டக்கூத்தர் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் போடு!'' என்றாள் அரசி. அவளும் இரண்டு தாழ்ப்பாளை இறுகப் போட்டாள். அரசி கூறியதைக் கேட்ட ஒட்டக்கூத்தர் மனம் வருந்தி நடந்ததை மன்னரிடம் கூறினார்.

புலவர் சொன்னதைக் கேட்ட குலோத்துங்கன் நீண்ட நேரம் சிந்தனை செய்தான். ''ஒட்டக் கூத்தர் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்'' என்பதன் பொருளை உணர்ந்து கொண்டான். புகழேந்திப் புலவர் சிறையில் இருப்பதையே இரட்டைத் தாழ்ப்பாள் என்று அரசி கூறியிருக்கிறாள் என்றெண்ணிப் புகழேந்தியாரைச் சிறையிலிருந்து விடுதலை செய்யும்படி கட்டளையிட்டான். விடுதலை அடைந்த புலவர் அரசனைக் கண்டார். அரசன் பெருமகிழ்ச்சி கொண்டான்; தாம் செய்த தவறுக்கு மன்னிப்புக் கேட்டான். அரசி




தன்னிடம் பேசாமல் இருப்பதையும் தெரிவித்தான்.

இதைக் கேட்ட புகழேந்திப் புலவர் விரைவாக அந்தப்புரம் சென்றார். அறைக் கதவைத் தட்டி, பாடல் ஒன்றைப் பாடினார். வந்திருப்பவர் புகழேந்திப் புலவர் என்பதை அறிந்த இளவரசி கதவைத் திறந்தாள். தெரியாமல் செய்த பிழைக்கு மன்னிக்கும் படியும் கேட்டுக் கொண்டாள். அப்போதுதான் அரசியின் கோபம் தணிந்தது.

ஆனால், ஒட்டக்கூத்தருக்கோ புகழேந்திப் புலவர் மீதிருந்த பொறாமை இன்னும் போனபாடில்லை!

ஒரு நாள் புகழேந்திப் புலவர் எழுதிய 'நளவெண்பா' என்னும் நூலின் அரங்கேற்றம் சோழ அரண்மனையில் நடந்தது. அதைக் கண்ட ஒட்டக் கூத்தருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அவர் எழுதிய 'நளவெண்பா' தனக்குப் பிடித்தமாக இருந்தும், வேண்டுமென்றே 'அது தவறு, இது தவறு' என்று குறைகூறினார். இதையறிந்த புகழேந்தியார் அதற்குத் தக்க பதிலைக் கூறி ஒட்டக்கூத்தரின் வாயை அடக்கினார்.

ஒட்டக்கூத்தர் மனக்கவலையுடன் தம் வீட்டுக்கு வந்தார். வந்தவர் சாப்பிடாமல் வெகு நேரம் படுத்துப் புரண்டு கொண்டே இருந்தார். இதைக்கண்ட அவரது மனைவி, சாப்பிடும்படி வேண்டினாள். அதற்குப் புலவர் ''புகழேந்திப் புலவர் பாடிய நளவெண்பாவின் ரசத்தைக் கொடுத்தால் கூடக் குடிக்க மாட்டேன்!'' என்றார் பிடிவாதமாக. ''அப்படியென்றால் அவரது பாட்டில் அவ்வளவு சுவையா இருக்கிறது?'' என்று கேட்டு அந்தப் பாட்டைப்பற்றி ஒட்டக் கூத்தரையே கேட்டாள் அவரது மனைவி. அவரும் நளவெண்பாவின் அழகிய பாடல்கள் சிலவற்றைத் தன்னையே மறந்து பாடினார். இதைக் கேட்ட அவர் மனைவி, தம் கணவரைப் பற்றி ஊரார் பேசிக் கொள்வதெல்லாம் சுத்தப்பொய் என்பதை எடுத்துச் சொல்ல அரண்மனை நோக்கி ஓடினாள். அங்கு மன்னனைக் கண்டாள். தம் கணவர் 'நளவெண்பா' பற்றிக் கூறியதை விளக்கமாகக் கூறினாள். அவள் சொன்னதைக் கேட்ட மன்னனும், அருகே இருந்த புகழேந்திப் புலவரும் அளவிலா மகிழ்ச்சி அடைந்தனர்.

அன்றுமுதல் புகழேந்தியாரும், ஒட்டக்கூத்தரும் இனிய நண்பர்களாகப் பழகினர். இனிய நட்புக்கு எடுத்துக் காட்டாய்த் திகழ வேண்டியவர்களுக்கு இடையே இருந்து தடை போடுவது எது? பொறாமையே அன்றோ?

திருவள்ளுவர் கூடப் பொறாமையின் தீமையைக் கூறும்போது,

''அழுக்காறு உடையார்க்கு
அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது''

என்கிறார். ''பொறாமையுடையவர்க்குக் கேடு சூழ வேறு பகைமை வேண்டியதில்லை. அவரது பொறாமையே அவர்க்குப் பகைமையைவிடக் கேடு தரும்'' என்கிறார் அவர். எனவே, 'அழுக்காறு வேண்டா' என அறைகூவல் விடுக்கும் வள்ளுவர் வழி நடப்போம் வாழ்க்கையை வளமாக்கி மகிழ்வோம்?

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர்; தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால் சென்னை அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.




Criterion CO 2883

# இல்லத்தரசியின் நல்ல தேர்வு!

# தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

## முதல் பரிசு: ரூ. 1,00,000

(ஒவ்வொரு வரிசைக்கும்)



முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

**56-வது குலுக்கல் நாள்**

## 12-6-73

**பரிசு சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/-தான்**

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.

2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

செலவு ஒரு ரூபாய்
வரவோ லட்ச ரூபாய்